TAMIL AHAM

வைத்திய கலாநிதி

VOl. VIII NO. 6,7,8

அலங்காரம் - 8 சஞ்சிகை

JUNE, JULY, AUG - 1921

478

JL
L:5m211,N14 NK.
N21.8.6-8
144985

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்"

# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

A TAMIL MONTHLY JOURNAL OF MEDICINE AND SANITATION

EDITED BY
Ayurveda Bhushanam
PANDIT M. DURAISWAMI AIYANGAR,
Senior Physician in charge S.K.P.D. Hospital

பத்திராதிபர்,
ஆயுர்வேத பூஷணம்
பண்டிட் எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரியின் பிரதான டாக்டர்

Vol. VIII. புஸ்தகம் 8.
துன்மதிஹு ஆனி, ஆடி, ஆவணி மீ
JUNE, JULY & AUGUST 1921.
No. 6,7,8 சஞ்சிகை 6, 7, 8.

பொருளடக்கம்.

விசேஷ வியாஸங்கள்:— பக்கம்

ஓஜோதாது:—பண்டிட் எச். சுப்பராய சாஸ்திரி ... 1
நுதுசூலரோகம்:—ஜி. கண்ணுசாமி பிள்ளை, வைத்தியர் ... [illegible]
ஜலமும் அதன் உபயோகங்களும்:—காலஞ்சென்ற வைத்தியரத்னம் பண்டித டி. கோபாலாசார்லு. ... 57
ஸ்த்ரீகளின் வல்மீகவியாதியை ஆரம்பத்திலேயே பரிசோதித்து அறிவதன் ஆவச்யகம்:— எ. ஆர். அன்பிரான்ச், எம். ஆர். சி. எஸ். எல். ஆர். சி. பி. அண்டு சி. ... 6[illegible]
மலபந்தத்தைத் தடுப்பதும் சிகித்ஸிப்பதும்:—ஜி. கண்ணுசாமிபிள்ளை, வைத்தியர் ... 6[illegible]
ஆயுர்வேத பரிசீலனைக் கமிட்டி ... 6[illegible]

பத்திராதிபருடைய வியாஸங்கள்:—
இந்தியாவில் வைத்திய முறை ... 6[illegible]
வியாதியைப் பரவச்செய்யும் ஈ ... [illegible]
நேசிய வைத்தியர்களைப்பதிவு செய்தல் ... [illegible]
அழுக்கடைந்த நாக்கு ... 73
கடிதங்கள்:—கலா அஜார்; நரம்புச் சிலந்திக்குப் பரிஹாரம்; சிசுஸம்ரக்ஷணை; கநகஸுந்தர ரஸம்; வேப்பம் பிசின் ... 7[illegible]
ஔஷதங்களும் சிகித்ஸைகளும்:—ஜம்பூ வென்கிற நாவலின் குணங்களும் உபயோகங்களும், ஆடாதோடை தேள் விஷத்திற்கு, தாளக பஸ்ம முறை, ச்ருங்கம் என்கிற மான்கொம்பு பஸ்மம், சேராங்கொட்டை நரம்புச் சிலந்திக்கு, ஆம்வாதத்தில் தேனீயின் விஷம் சிறந்த ஔஷதம், க்ஷயரோகத்தில் சால்முக்ரா எண்ணெய். ... 7[illegible]
பலவகைக் குறிப்புகள்:—பிஹாரில் ஆயுர்வேதத்திற்கு ஆதரவு, இந்தியன் மெடிகல் ஸர்விஸ் பரீக்ஷை, ஒரு ஸர்வ பக்ஷகர், வாயால் மூச்சு விடுவதாலான தீமை, விவாஹத்தின் பலன். 79, 8[illegible]
மாதவநிதாநம்:— 1—2[illegible]

## மாதவநிதாநம்: முக்கிய அறிவிப்பு.

வெகு நாட்களாக நிதானக்கிரந்தம் ஒன்று ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டால் நலமாயிருக்குமென்று அநேகம் நண்பர்கள் கேட்டுக்கொண்டார்கள். நாம் அவ்விதம் செய்ய இப்பொழுது அவசியமான ஸந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. **மாதவ நிதாநம்** ரோக விஷயங்களை விவரிக்கும் முக்கியமான பிராசீன ஆயுர்வேதநூல். இது சீக்கிரத்தில் முடிவுபெறக்கூடிய சிறிய கிரந்தம். இந்த ஸஞ்சிகை முதற்கொண்டு மாதவ நிதாநம் மொழிபெயர்க்கப்பட்டு வரிசையாகச் சந்தாநேயர்களுக்கு அளிக்கப்படும். ஸௌகர்யமானபோது அஷ்டாங்க ஹ்ருதய உத்தரஸ்தானமும் அப்போதைக்கப்போது வெளியாகும். மாதவ நிதானம் முற்றிலும் அச்சிடப்பட்ட பிறகு அதன் அருமை நமது தமிழ் நாட்டாரால் கொண்டாடப்படுமென்பதில் ஆக்ஷேபமில்லை.

THE MOST CHARMING PERFUME

# OTTO DILBAHAR

(REGISTERED.)

எல்லோர் மனதையும் அதியுத்சாகப்படுத்தும் சுகந்தம்.

## ஆட்டோ டில்பஹாரர் (ரிஜிஸ்டர்ட்.)



நீடித்திருக்கக்கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாகக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாது, பொருக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைக்குட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாஹ காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னம் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இந்த ஆட்டோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிரப்பி விற்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெரியது புட்டி 1-க்கு | (4 டிராம் அல்லது ½ அவுன்ஸ்) | விலை ரூ. | 2— 0—0 |
| | | | 1— 4—0 |
| வேறு ,, | (2 டிராம்) | ,, | 0—12—0 |
| நடுத்தரம் ,, | (1 டிராம்) | ,, | 0— 8—0 |
| சிறிய புட்டி ,, | (½ டிராம்) | ,, | 0— 2—0 |
| மாதிரி ,, | | ,, | 0— 1—0 |
| வாசனைக் கார்ட்டு 1-க்கு | | ,, | |

தபாலாபீஸின் புதிய விதிப்படி ஒவ்வொன்றுக்கும் தபால் சார்ஜ் பிரத்யேகம் சார்ஜ் செய்யப்படும்.

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதேமாதிரி அநேக பெயர்கள் இருப்பதால் வாங்கும்பொழுது புட்டிகள்பேரில் ஆட்டோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று ஜாக்கிரதையுடன் கவனிக்கவும்.

ஸோல் ஏஜண்டுகள் :—ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத் மார்க்கட், பம்பாய்.

மதராஸ் ஏஜண்டு :—மேதா புருஷோத்தம் மூல்ஜீ,
29, சைனாபஜார் ரோட், மதராஸ்.





# "TAMILAHAM"

## தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப்பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய், பிரதி புதன், சனிக் கிழமைகள்தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உட்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் சென்றிருக்கும் 3-லக்ஷத்திற்கு மேற்பட்ட தமிழ்ஜனங்களின் நன்மைகளைக்கருதியும், உரிமைகளைக்காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கிய மலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர், பத்து ரோட்டில், 186, 188, 190-ம் நெ. கட்டடங்களில் அமைக்கப்பெற்றிருக்கும் இண்டஸ்டிரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக்கொண்டு நடத்தப்படுவது. இது மலாய்நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுவதால் விளம்பரங்கள் செய்வதற்கு மிகவும் சிறந்த பத்திரிகையாகும். இதன் வருடச்சந்தா றிங்கி 10-0-0, ஆறுமாதத்திற்கு றிங்கி 5-5-0, மூன்று மாதத்திற்கு றிங்கி 3-0-0, நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

"TAMILAHAM" OFFICE,
No. 190, Batu Road,
Kuala Lumpur,
(F. M. States.)

மானேஜர், "தமிழகம்" ஆபீஸ்,
நெ. 190, பத்து ரோட், கோலாலம்பூர்,
ஐக்கிய மலாய் நாடுகள்

**22 Gold Medals Awarded!!!**

# S. VAIDYA & Co.,

**MADRAS AND TRICHINOPOLY.**

## ஜிண்டான்

### ஜகப்பிரசித்திபெற்ற ஜிண்டான் மாத்திரை.

வெகு மேலான சுகந்த மாத்திரை.




சதா கைவசமிருந்தால் ஸகல உத்ஸாகத்துக்கும், தைரியத்துக்கும் எல்லா, வியாதி நிவர்த்திக்கும், சுருசுருப்புக்கும், விவேகத்துக்கும் காரணமாகிறது. இதின் உண்மை வாங்கி அனுபவித்தவர்கள்தான் அறிவார்கள். பெரிய பெரிய டாக்டர்கள் இதன் பெருமையைப் புகழ்வதின் காரணம் தெளிவாகிறது.

கையால் பிடுங்கிப்போடுவதை கோடாறிகொண்டு வெட்டுவார்கள் அதுபோல் சுலபத்தில் கைவசம் வைத்து ஆரம்பத்திலேயே அடியோடே நிவர்த்திக்கும் ஜிண்டானின் பெருமைதெரியாமல் வியாதியை முதிர விட்டு சிரமப்படுபவருக்கு கர்மபலனே காரணம், இதுதான்,

## உண்மை. !!!

எல்லாக்கடைகளிலும் கேழ்க்கப் பெறலாம்: 260 மாத்திரைகளடங்கிய அழகான பொட்டளம் விலை ரூ. 1. இதில் கண்ணாடி வைத்த அழகிய டப்பி இனமாக வைத்திருக்கிறது. 65 மாத்திரையும் சாதா டப்பியுடன் 4. அணா. 15 மாத்திரை அடங்கிய பொட்டளம் 1. அணா.

ஹோல் ஏஜண்டுகள் :—

**எஸ். வைத்யா அண்டு கோ.,**

பார்க்டவுன், மதராஸ்.

பிராஞ்சிகள் :—

2, கொண்டிசெட்டித்தெருவு, எஸ்பிளனேட், மதராஸ்.
சைனாபஜார் தெரு, திருச்சி கோட்டை.

N. B. —இவர்களிடம் ஸகல சுதேசி சாமான்களும், செண்டுகளும், குடும்ப மருந்துகளும், பிஸ்கட்களும், கூந்தல் தைலம், பல்பொடி மேலானது, பித்தளை மெழுகுவத்தி ஸ்டாண்டுகள், இங்கோ-எஸ்ஸென்ஸ் என்னும் குறுக்கின ஸத்துமசி-இத்துடன் 12 மடங்கு ஜலம் சேர்க்க மேலான மசி, ஸ்டீல் பேனா, பௌண்டென் பேனாக்களுக்கும் உபயோகமாகிறது. வேண்டியவர்களுக்கு எழுதினால் விவரம் அனுப்பப்படும்.







# KESARI'S THREE GEMS.

## கேஸரியின் இரத்ன திரயம்,

## LODHRA

**BEST UTERINE TONIC**

### லோத்ர

ஸ்திரீகளுக்கோர் வரப்ரஸாதினி

ஸ்திரீகளுக்கு அநேக காரணங்களினால் ரஜோகர்ப்பாசயம் கெட்டு ருதுசூலை சம்பவிக்கிறது. இது ஸ்திரீகளுக்கு ஓர் பெரும் பூதமோ எனப் பயப்படக்கூடியது. இந்தக் கொடிய வியாதியுள்ளவர்கள் இன்னும் அநேக மர்ம வியாதிகளுக் கிரையாவதேயன்றி புத்திரபாக்கியமில்லாதவர்களாய்க்கூட இருக்கிறார்கள். இவ்வபாயமாகிய வியாதியை வேருடன் அறுப்பதற்கு எங்களிட "லோத்ர" அசமானமாகிய மருந்து.

இந்த 'லோத்ர' மேற்கூறிய வியாதியை நிவர்த்திப்பதேயன்றி காலத்தில் பஹிஷ்டையாகாமலிருப்பது, பஹிஷ்டை நின்று விடுவது, பஹிஷ்டை காலத்தில் ரஜஸ்வலை சரியாய் ஆகாமல், ஜாஸ்தியாய் அல்லது குறைச்சலாய் போவது, சோமரோகம், மேஹவியாதிகள், மூர்ச்சை, சந்தானமின்மை, தலைவலி, அஜீர்ணம், பலஹீனம், ரத்தஹீனம், சரீரம், ஸ்தூலித்திருப்பது, இளைத்திருப்பது, மலபந்தம், இருமல், விக்கல் முதலிய வியாதிகளை மிகவும் நம்பகமாய் நிவர்தித்து சரீரத்துக்கு காந்தியும் முகத்திற்கு தேஜஸையும் கொடுக்கின்றது.

ஆரியர்காள்! ஸ்திரீகளிடத்தில் அபிமானமுள்ள புருஷர்களெல்லாம் இவ்வவுஷத மணியை உபயோகிக்கச் செய்து அவர்கள் தேக சௌக்யத்திற்கு பாத்திராளாய் இருப்பீர்களாக.

அநேக ஸ்திரீகள் சந்தான ஹீனர்களாய் அரசமரப்பிரதக்ஷணம், ஆஞ்சநேய ப்ரதக்ஷணம், அநேக புண்ணிய க்ஷேத்திரயாத்திரை முதலியவை செய்தும் பலனடையாமல் கடைசியில் எங்களிட "லோத்ர"வையுபயோகித்து புத்திர பாக்கியமடைந்து சுகமாயிருக்கிறார்கள்.

இதன் விலை பெரியபுட்டி ரூ. 3—0—0. சிறிய புட்டி ரூ. 1—10—0.

## AMRITA

**BEST BLOOD PURIFIER**

### அம்ருத

இரக்தசுத்தி திராவகம்.

இவ்வவுஷதராஜம் லோகப்பிரசித்தமானபடியால் இதைக்குறித்து இங்கு விவரமாய் எழுதுவது அநாவசியமென்று தோன்றியபடியால் சுருக்கமாய் எழுதுகிறோம்.

இதனால் ரக்தக்ஷீணம், ரக்ததோஷம், அஜீரணம், இந்திரிய நஷ்டம், சுவப்னஸ்கலிதம், பலஹீனம் மலபந்தம், பாண்டு, காமாலை, சர்மவியாதிகள், சுகசங்கடங்கள், தலைவலி, கண் எரிச்சல், வயிற்றுவலி, விக்காக்கை, கல்நோய், மேகரணங்கள் முதலிய வியாதிகள் அதிசீக்கிரமாய் நிவர்த்தியாவதே யல்லாமல் இது ரக்தத்தை சுத்தி செய்து பலஹீனம் எந்தக் காரணத்தினால் உண்டானபோதிலும் பெருங்காற்றிலடித்துக் கொண்டுபோகும் பருத்தியைப்போல் படாபஞ்சமாய் பறக்கச்செய்யும்.

இதன் விலை பெரிய புட்டி ரூ. 3—0—0.
சிறிய புட்டி ரூ. 1—10—0.

## ARKA

**BEST CURE FOR INFLUENZA AND ALL OTHER FEVER.**

### அர்க்க

இன்புளுயன்சா முதலிய சர்வ ஜ்வர நிவாரணி

இதனால், பிரதிதினம் வரும் ஜ்வரம், ஒருநாள் விட்டு ஜ்வரம், நின்று நின்று வரும் ஜ்வரம், புராண ஜ்வரம், மலை ஜ்வரம், குளிர் ஜ்வரம், இன்புளுயன்சா முதலிய சர்வ ஜ்வரங்களும் மூன்று வேளையில், நிவர்த்தியாகும். இந்த அவுஷதத்தை உபயோகிப்பதினாலே ஜ்வரக்கட்டிகள் அதிக ஆச்சரியமாய் மாயமாய்விடும். இவ்வவுஷதம் மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டபடியால் குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் எத்தகைய சந்தேகமுமின்றி உபயோகிக்கலாம்; தவிர இதனால் மலபந்தம், சளிபிடிப்பு, அஜீரணம், தலைவலி முதலியவை நிவர்த்தியாகும்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

கே. என். கேஸரி, வைத்தியர் & வைத்திய சாலாதிகார்,
"கேஸரிகுடீரம்" ஆயுர்வேத ஔஷதசாலை, 33, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோட், எழும்பூர்

# "வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல் ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக்குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளிவருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப் பெருக்கமும் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. ஒவ்வொரு தமிழபிமானியாகிய இந்தியரும் இதைப் படித்தின்புறவேண்டிய தவசியம். இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5—0—0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6—0—0.

மானேஜர்,

"வைசிய மித்திரன்"

காரைக்குடி.

---

## மணித்தைலம்

பரிமள மிகுந்த வாசனைத்தைலம், சாஸ்திர முறைப்படி காய்ச்சின தைலமாகையால் உபயோகிக்கிறவர்களுக்கெல்லாம் அற்புதமான குணத்தைக் கொடுக்கிறது. சொற்பகாலமாய் வெளிவந்துலாவும் தைலத்தைப்போல் கருதிவிடக்கூடாது. மணித்தைலம் 35வருஷமாய்விற்பனையாகி வருகிறது. தலைமயிரை உதிராமற்றடுப்பதன்றி மிருதுவாயும் கறுப்பாயும் வளரச்செய்யும். மூளையை குளிரச் செய்கிறது. ஒரு புட்டியின் விலை ரூ. 1.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜி ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.
26, பிராட்வே, மதராஸ்.

---

## பாட்லிவாலாவின்

பாட்லிவாலாவின் சுத்தமான கொய்னாமாத்திரை 1-க்ரைன் 100 மாத்திரைகள் அடங்கியது.
பாட்லிவாலாவின் கொய்னாமாத்திரை, 1-க்ரைன் 100 மாத்திரைகள் அடங்கியது.
பாட்லிவாலாவின் குளிர் ஜ்வர திராவகம் (சிலேஷ்ம ஜ்வரம் முதலிய)
பாட்லிவாலாவின் குளிர் ஜ்வர மாத்திரை
பாட்லிவாலாவின் இரஸாய மாத்திரை
பாட்லிவாலாவின் பல் பொடி
பாட்லிவாலாவின் படைமருந்து

இவையெல்லாம் மருந்துக் கடைகளிலும் கிடைக்கும், அல்லது அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதுங்கள்.

டாக்டர், H. L. பாட்லிவாலா சன்ஸ் & கோ., லிமிடெட்.
நெ. 305, வார்லி, 18. பம்பாய்.

Dr. H. L. BATLIWALA, SONS & Co., Ltd.,
*No. 305, Warli, 18. Bombay.*
*Tel. address. "Doctor Batliwala Doctor."*





சீர்திருத்தப்பெற்ற இரண்டாம் பதிப்பு

# சார்ங்கதர ஸம்ஹிதை.

ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் முதன் முதல் வெளியான

## ஆதிகாலத்திய ஆயுர்வேத வைத்திய நூல்.

"வைத்திய கலாநிதி பத்திரியாசிரியரான ஆயுர்வேத பூஷணம்.

பண்டிட் எம். துரைஸ்வாமி ஐயங்கார்

அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

இவ்வைத்தியக் கிரந்தம் மூன்று கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

1. பூர்வ கண்டத்தில்.—ஆயுர்வேத பரிபாஷை, ஔஷதாதிகளின் விவரம், தீபன-பாசன ரேசநாதி குண விசேஷங்கள், தேஹதத்துவ ஸம்பந்தமான அம்சங்கள், ரோகஸங்க்யை, மற்றும் அருமையான அநேகம் விஷயங்கள் 7-அத்தியாயங்களைக் கொண்டு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

2. மத்தியம கண்டத்தில்:—ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், கல்கம் முதலிய க்ஷாயவகைகளும், சூர்ணம், குளிகைகள், பாண்டங்கள், தைலங்கள், கிருதங்கள், இரஸௌஷதங்கள், பஸ்ம முறைகள், தாதுமாரண சுத்தி முறைகள், ஆஸவங்கள், அரிஷ்டங்கள் முதலிய ஔஷத நிர்மாண முறைகளும் 12 அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

3. உத்தர கண்டத்தில்:—ஸ்நேஹபானம், ஸ்வேதசிகித்ஸை, வமன சிகித்ஸை, விரேசன சிகித்ஸை, வஸ்தி சிகித்ஸை (எனிமா), நஸ்யவிதி, கண்டூஷாதிவிதி, இரத்தத்தை வெளிப்படுத்தும் முறை, நேத்திர சிகித்ஸை முதலான மிகவும் உபயோககரமான சிகித்ஸா க்ரமங்கள் எளிதாகச் செய்யக்கூடிய வகையில் 13 அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆக இக்கிரந்தத்தில் மொத்தம் 32 அத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன.

விவரமாக வியாக்கியானம் ஒவ்வொரு பக்கத்திலும் உண்டு. முகவுரை மிகவும் விசேஷமானது. விஷய அகராதி விரிவானது. டெமி(?) புள்கிரௌன் என்னும் அளவில் உயர்ந்த காகிதத்தில் சுமார் 450 பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 3.

"வைத்திய கலாநிதி" ஆபீஸ், வேப்பேரி மதராஸ்.

---

# ஒரு பெரிய அவஸரம்! இதுவே தருணம்!!

எங்கள் நிபந்தனையை அனுஸரித்து தங்கள் வீட்டிலிருந்து ஒரு வருஷம் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளுவதால் குறைந்த பக்ஷம் 4-வது பாரத்தின் இங்கிலீஷ் பாஷா ஞானமாவது அடைவீர்களென்பது திண்ணம். இல்லாவிடில் தங்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் பணத்தைத் திருப்பிக்கொடுக்கத் தயாராயிருக்கிறோம். மாசச் சந்தா ரூ. 1—0—0

வருஷச் சந்தா முன் கட்டியனுப்புகிறவர்களுக்கு ரூ. 6—8—0 மட்டும். ஒரு வருஷத்திய படிப்பு முடிந்தவர்களுக்கு பிற்பாடு 3 வருஷம் கொண்டு B.A. பரீக்ஷைக்குச்சமமான London Matriculation பரீக்ஷைக்குச் சேரத்தக்கப் படிப்பும் இதேமாதிரியாக கொடுக்கப்படும். கூடுதல் விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதியனுப்பவேண்டும்.

ஆர். அச்யுதன் தம்பி
இங்கிலீஷ் கரெஸ்பாண்டென்ஸ் ஸ்கூல்,
திருவனந்தபுரம். (Trivandrum.)

# அஷ்டாங்க ஹ்ருதயம்.

முதற் பாகம்.

ஸூத்திர-சாரீர-நிதாந ஸ்த்தாநங்கள் அடங்கியது.

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

ஸூத்திர ஸ்த்தாநத்தில்:—ஆயுஷ்காமீயம், தினசர்யை, ருதுசர்யை, ரோகங்கள் உண்டாகாத வழி, திரவத்திரவ்ய விஞ்ஞாநம், அந்நஸ்வரூப விஞ்ஞாநம், அந்நரக்ஷை, தோஷாதி விஞ்ஞாநம், சோதநாதி குணமுள்ள திரவ்ய ஸ்வரூப விவரணம், ஸ்நேஹம், ஸ்வேதம், வமந-விரேசநம், வஸ்தி, நஸ்யம், தூமபாநம், கண்டூஷாதிகள், அஞ்ஜநாதிகள், தர்ப்பண-புடபாகங்கள், யந்திரவிதி, சஸ்திரவிதி, ஸிராவ்யதை, சஸ்திர கர்மம், க்ஷாராக்னி விதிகள் முதலிய அநேகம் விஷயங்கள் 30-அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

சாரீர ஸ்த்தாநத்தில்:—கர்ப்போற்பத்தி, கர்ப்ப வியாபத், அவயவாதிகளின் தத்துவங்கள், மர்ம விவரணம், விக்ருத சாரீர விஞ்ஞாநம், தூதபரீக்ஷை முதலிய சரீர தத்துவாதி ஸம்பந்தமான விஷயங்கள் ஆக இவை முதலியவை 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

நிதாந ஸ்த்தாநத்தில்:—ஜ்வரம், இரக்த பித்தம், காஸம், ச்வாஸம், ஹிக்கா (விக்கல்), க்ஷயம், மதமென்னும் வெறி, அர்சஸ் என்னும் மூலம், அதிஸாரம், கிரஹணீ, மூத்திர க்ருச்சிர மென்னும் நீர்ச்சுருக்கு முதலியவை, பிரமேஹம், வித்ரதி, அண்ட வ்ருத்தி, குல்மம், மஹோதரம் முதலிய உதரத்தைப்பற்றிய வியாதிகள், பாண்டு, சோகை, குஷ்டம், ச்வித்ர மென்னும் வெண்குஷ்டம், வாதரோகங்கள் முதலிய ரோகங்களின் காரண-லக்ஷணாதிகள் 16-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

ஆக இந்த முதற்பாகத்தில் 52-அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. முகவுரையும், ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யாநமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிராசீன யந்திர சஸ்திரங்களென்ன, சரீர தத்துவங்களென்ன இவற்றை விளக்கும் சித்திரப் படங்கள் அநேகம் அச்சிடப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 450-பக்கங்களுக்கு மேல் கொண்டது. விலை ரூபா- 5-0-0.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

# அஷ்டாங்க ஹ்ருதயம்

இரண்டாம் பாகம்.

சிகித்ஸா-கல்ப ஸ்த்தாநங்கள் அடங்கியது.

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

சிகித்ஸா ஸ்த்தாநத்தில் :—ஜ்வரசிகித்ஸை, இரக்த-பித்த சிகித்ஸை, காஸ சிகித்ஸை, ச்வாஸ சிகித்ஸை, இராஜயக்ஷ்ம (க்ஷய) சிகித்ஸை, சர்தி (வாந்தி) இருதயரோக சிகித்ஸைகள், மூல (அர்சஸ்) சிகித்ஸை, அதிஸார சிகித்ஸை, கிரஹணீ சிகித்ஸை, மூத்திராகாத சிகித்ஸை, பிரமேஹ சிகித்ஸை, வித்ரதி சிகித்ஸை, அண்டவ்ருத்தி சிகித்ஸை, குல்ம சிகித்ஸை, மஹோதரம் முதலிய உதர ரோகங்களின் சிகித்ஸைகள், பாண்டுரோக சிகித்ஸை, ச்வயது (சோதை) சிகித்ஸை, குஷ்டரோகம் முதலிய சர்ம வியாதிகளின் சிகித்ஸைகள், வாத ரோகங்களின் சிகித்ஸை, இவை முதலிய அநேகம் வியாதிகளின் சிகித்ஸா விஷயங்கள் 22-அத்தியாயங்களில் விஸ்தாரமாக விவரிக்கப்படுகின்றன.

கல்ப ஸ்த்தாநத்தில்:—வமந கல்பம், விரேசந கல்பம், வமந-விரேசநங்களா லுண்டாகும் தீங்குகளைப் பரிஹரிக்கும் கல்பம், வஸ்தி கல்பம், வஸ்திப் பிரயோகத்தாலான வியாபத் பரிஹார கல்பம், பேஷஜ கல்பம் இவை முதலிய ஸித்தௌஷத சிகித்ஸா முறைகள் 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

ஆக இந்த இரண்டாம் பாகத்தில் 28 அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யானமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 250 பக்கங்களுக்கு மேல் கொண்டது. விலை ரூ. 3-12-0.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.



# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
Ayurveda Bhushan
Pandit M. Duraiswami Aiyangar A. K. A. C.
Senior Physician-in-charge, S. K. P D Hospital

பத்திராதிபர் :
ஆயுர்வேத பூஷணம்
பண்டித எ. துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி டி. ஆஸ்பத்ரியின் பிரதான டாக்டர்.

புஸ்தகம் 8. Vol. VIII. — துன்மதிவரு ஆனி ஆடி ஆவணிமீ JUNE, JULY & AUGUST 1921. — No. 6. 7, 8. ஸஞ்சிகை 6, 7, 8.


## ALBUMEN OR OJAS.

### ஓஜோதாது.

BY PANDIT H. SUBBARAYA SASTRI.

ஓஜோதாதுவைப் பற்றி இப்பத்திரிகையில் சில ஸமயங்களில் சிற்சில விஷயம் குறிப்பிடப்பட்டிருப்பது அதன் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அப்பதார்த்த விஷயமான சில தத்துவங்கள் இதனடியில் சிறிது விளக்கப்படுகின்றன. ஏற்கனவே இப்பத்திரிகையில் ஓஜஸ் என்பது ஆங்கிலத்தில் அல்ப்யூமென் எனக் கூறப்படும் தாதுப்பொருளென்று அநேக ஸமயங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

விஞ்ஞாந சந்த்ரிகா மண்டலியென்கிற ஆந்த்ர ஸங்கத்தார் "அல்ப்யூமென் என்பது 'ச்வேததாது' அல்லது வெண்கருவென்று வழங்கப்படும்" என்று வெளியிட்டிருக்கிறார்கள். இப்பதார்த்தம் நமது சரீரத்தில் மாம்ஸ கண்டாங்களை விருத்திசெய்வதற்கானமாம்ஸ'க்ருத்துகள்' (protieds) என்னும் பதார்த்தங்களைச் சேர்ந்ததாயிருக்கிறது. இதன் மூலமாகவே தசைநார்களும், நரம்புகளும் பெருகிப் பலம் பெறுகின்றன. இரத்தத்திலுள்ள நுண்ணிய பதார்த்தாம்சங்களில் இது பதினாறுவது பாகமாகச் சேர்ந்திருக்கிறது. இப்பதார்த்தம் கோழி முட்டையிலும், தானியங்கள் முதலியவற்றிலும் உண்டென்று முற்குறிப்பிட்ட ஸங்கத்தார், அவர்களால் ஆந்த்ரபாஷையில் வெளியிடப்பட்டுள்ள ஜந்து சாஸ்திரநூலில் எழுதியிருக்கிறார்கள். இவை மேனாட்டு முறைக்கு ஸம்பந்தமான அபிப்பிராயங்களாகும். மேனாட்டுக் கொள்கைப்படி மாப்பொருட்களுக்கு 'மாம்ஸ க்ருத்துகள்' எனப்படுபவை ஸம்பந்திக்கும். இந்த மாப்பொருட்களின் தத்துவாம்சங்களைப் பரிசோதித்துப் பார்த்தால், அவை, இதன் கீழ் குறிக்கப்படும் சேர்மானங்கள் அடங்கியவையென அறியப்படும்:—

| | | பாகம் |
|---|---|---|
| பிராணதாரக வாயு Oxygen | 100-க்கு | 22 |
| பாநுமண்டலவாயு- Hydrogen | ,, | 7 |
| விருக்ஷாதாரக வாயு-Nitrogen | ,, | 16 |
| நிச்வாஸ வாயு-Carbon | ,, | 53 |
| கந்தகம்-Sulphur | ,, | 2 |

இந்த மாப்பண்டங்கள் தேஹத்திற் பிரவேசித்து, பலவிதமாக ஸம்ஸ்கரிக்கப் பட்டு, அப்பால் வெளியில் தள்ளப்படும். அவ்விதம் வெளியில் தள்ளப்படும் அம்சத்தைப் பரிசோதிக்கையில் அதில் பின்வரும் பதார்த்தங்கள் அடங்கி யிருப்பதைக் காணலாம்:—

| | |
|---|---|
| மூத்திரக்ஷாரம்—Uria<br>ஜலம்—Water.<br>நிச்வாஸவாயு—$CO_2$ | இந்த மூன்று அம்சங்கள்மாத்திரம் மாம்ஸ க்ருத்துகளின் மாறுபாட்டில் கடைசிநிலைமையிலுண்டாகுபவை யெனத் தெரிகிறது. |

144985

மாம்ஸ க்ருத்துகளின் (protieds) வர்க்கீகரணம் பின் வருமாறு:—

மாம்ஸ க்ருத்:

1. ஸஹஜச்வேததாது-native albumens அண்டஜம்—egg albumen ($C_{204}$ $H_{322}$ $N_{52}$ $O_{66}$ $S_{2}$) இரஸஜம்—Serum albumen.
2. ஔரஸ ச்வேத தாது - derived albumen
3. குக்குடாண்ட கர்ப்பம்—globulin
4. தாந்தவம்—fibrin
5. ஜாந்தவம்—gilatin

ஓஜஸ் என்பதை சிலேஷ்மம் என்று பிரமித்துக் கூறியவருமுண்டு. அது தவறென்று இப்பரிசீலன விபாகத்திலிருந்து நன்றாகக் காணலாம். மாம்ஸ க்ருத் என்னும் பதார்த்தத்தின் விபாகமாகிய ஸஹஜ ச்வேததாதுவினுடைய இரண்டு பிரிவுகளுக்கே (அண்டஜ—இரஸஜ பாகங்கள்)ஓஜோதாதுவை ஒப்பிட்டுக் கூறவேண்டும். ஏனெனில் இரஸஜ ச்வேத தாதுகூட அடியிற் கூறப்படும் குணங்கள் பொருந்தியதா யிருக்கிறது.

1. இது இரஸ-இரக்தாதிகளில் காணப்படுகிறது.

144985

2. ஆகையினுலேயே இரக்த ஸ்தாநங்களாயுள்ள இருதயத்திலிருந்தும் புப்புஸங்களிலிருந்தும் தேஹமெங்கும் பரவும்.

3. இது சிலேஷ்ம ரூபமாயிருப்பதால் பசையுள்ளதாகவும், குளிர்ச்சியாகவும், நிர்மலமாகவும் இருக்கும்.

4. இரஸ-இரக்தாதி தாதுக்களை ஆச்ரயித்திருப்பதால், சாரீர-வாசிக-மாநஸிக க்ரியைகளுக்கு முக்கியாதாரமானதென்றும் கூறலாம்.

சரக ஸம்ஹிதையில் ஓஜஸ் என்னும் இத்தாதுவைப்பற்றி இவ்வாறு விவரிக்கப்படுகிறது.—"ஹ்ருதி திஷ்டதி யத் சுத்தம் ஸிக்த்தமீஷத் ஸபீதகம். ஓஜச் சரீரே ஸங்க்யாதம் தந்நாசே நா விநச்யதி." (இருதயத்தில் நிர்மலமாகவும், பசையுள்ளதாகவும், சிறிது மஞ்சள் நிறமாகவும் யாதொரு பதார்த்தமுண்டோ, அதுவே உடலெங்கும் வியாபித்து தேஹதாரணம் செய்யவல்ல ஓஜஸ் என்னும் பொருளாம்; அது அழிந்தால் மனிதன் இறந்து விடுவான் என்பது இதன் பொருள்.)

இந்த ச்லோகத்தின் கருத்தின்படி யேற்படும் பதார்த்தம் முற்கூறிய இரஸஜ ச்வேத தாதுவுக்கு ஸம்பந்தப்பட்டதாகக் கூறலாமென்பதும், "அது அழிந்தால் மனிதன் இறந்து விடுவான்" என்னும் வாக்கியத்தில் கூறப்படும் குணம் இரஸஜ ச்வேததாதுவுக்கு உண்டா இல்லையா வென்பதுமே விமர்சிக்கப்பட வேண்டிய விஷயம்.

ஒரு துளி இரத்தத்தை ஸூக்ஷ்ம தர்சநயந்திரத்தின் மூலமாய் பரீக்ஷித்தால், அணுமாத்திரமாய் வர்த்துளமான பதார்த்தங்கள் கோடிக்கணக்காகக் காணப்படும். ஒரு துளி இரத்தத்தில் முப்பது கோடி அணுக்கள் உண்டென்றும், ஒரு மனித தேஹத்தி லடங்கியுள்ள இரத்தத்தின் மொத்த எடையில் இவ்வணுக்களின் பிரமாணம் மூன்றில் ஒரு பங்கென்றும் மேனாட்டு சாஸ்திரஞ்ஞர் பரிசீலனை செய்து தெரிந்து கொண்டிருக்கிறார்கள். தேஹத்திலிருந்து ஒரு துளி இரத்தமெடுத்து, அதைச் சற்று ஆறவைத்தால்,இக்கணங்கள் சிக்குண்டு, லஸீகா (serum) என்னும் ஒருவித நிணநீர் வெளிப்படும். மேலும் அதில் சிறிது நீரை ஒரு குச்சியினால் கலக்கிக் கொண்டிருக்க அக்குச்சியின் முனையில் அந்த ஸூக்ஷ்ம கணங்களைக் கட்டியிருந்த மெல்லிய நூலிழைகள் சுற்றிக் கொண்டிருப்பதைக் காணலாம். இந்த நுண்ணிய இழைகளே தாந்தவமான (fibrin) அம்சம் எனப்படுகிறது. இவ்வித பந்தநம் இருப்பதாலேயே இரத்தம், இரத்தக் குழாய்



களிலிருந்து வெளிப்பட்டதும் தானே கட்டிக் கொள்கிறது.

லஸீகை யென்கிற நிணநீரில் அடியிற் குறிப்பிடப்படும் அம்சங்கள் அடங்கியிருக்கின்றன:—

| | | |
|---|---|---|
| இரஸஜ ச்வேத தாது | 100-க்கு | 8-பாகம் |
| உப்பு வகைகள் | " | 1 " |
| ஜலம் | " | 91 " |

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வதென்னவென்றால்—இரத்தத்தின் ஸூக்ஷ்ம கணங்களில் இரஸஜ ச்வேத தாது ஒரு முக்கிய பதார்த்தமாகச் சேர்ந்திருக்கின்றது என்பதேயாம்; ஆகவே அந்த ச்வேத தாது தேஹதாரணத்திற்கு இன்றியமையாததென்பதும் விளங்குகிறது. ஆகையால் இரஸஜ ச்வேத தாதுவை ஓஜஸ் என்று கூறுவதற்கு ஆக்ஷேபணையில்லை. "அது—ஓஜஸ்—அழிந்தால் மனிதன் இறந்து விடுகிறான்" என்று சரகர் ஓஜஸுக்குக் கூறிய குணம் இந்த ச்வேததாதுவுக்கு உண்டென்று முற்கூறிய தத்துவாம்ச விபஜனையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இதுவரையில் ஓஜஸ் என்றால் இரஸஜ ச்வேததாதுவென்று வாதித்து வந்தோம். இப்பொழுது இந்த தாது தூஷிக்கப்படுவதால் உண்டாகும் இலக்ஷணங்கள் எவையோ அவற்றைத் தெரிந்துகொண்டு, இதே லக்ஷணங்கள் ஓஜஸ் தூஷிக்கப் படுவதால் உண்டாகின்றனவா வென்று யோசித்துப் பார்ப்போம். மாதவநிதாநத்தின் பிரமேஹாத்தியாயத்தில், பிரமேஹ ஸம்ப்ராப்தி விஷயமாக பின்வருமாறு கூறப்பட்டுளது:—

"மேதச் ச மாம்ஸம் ச சரீரஜஞ் ச க்லேதம் கபோ வஸ்திகத: ப்ரதூஷ்ய. கரோதி மேஹாந்............" (வஸ்தியென்னும் மூத்ராசயத்தை யடைந்து கபமானது கோளாறடைந்து கொழுப்பு, மாம்ஸம், தேஹத்திலுள்ள பலவிதமான கசிவுப் பொருட்கள் இவற்றைக் கெடுத்து மேஹ ரோகங்களை யுண்டுபண்ணும் ..............) என்பதேயாம். மேலும் பிரமேஹ வியாதியில் வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் தோஷங்களாம் (தாதுக்களைத் தூஷிப்பிக்கும் அம்சங்கள்); இரஸம், இரத்தம், மாம்ஸம், மேதஸ் (கொழுப்பு), மஜ்ஜை, சுக்ரம், ஓஜஸ், நிணநீர் என்கிற தாதுக்கள் இவ்வியாதியில் தூஷ்யங்கள் (கோளாறடையுந் தன்மையுள்ள அம்சங்கள்) என்றும் பின்வரும் ச்லோகம் கூறுகிறது;—"கபஸ் ஸபித்த: பவநச் ச தோஷா: மேதோஸ்ர சுக்ராம்பு வஸாலஸீகா:. மஜ்ஜாரஸௌஜ:பிசிதஞ் ச தூஷ்யா:."

முன்கூறிய பிரமாணங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன? 1. ஓஜஸ் தூஷிக்கப்படுவதாலும் பிரமேஹ வியாதி யுண்டாகும். 2. ஓஜஸ் என்பது சுக்ரமுமல்ல, நிணநீருமல்ல, ஆஹாரரஸமுமல்ல வென்றும் தெரிகிறது. எனினும் சரீரத்திலுள்ள பலவித கசிவுப் பொருட்கள் ஓஜஸாக ஏன் இருக்கலாகாது? 'ஒருவித பசைகுணமுள்ளதாய்' திரவரூபமாகச் சரீர மெங்கும் பரவியுள்ள நீர் 'சரீரத்திலுள்ள கசிவுப்பொருள்' என்று தெரியவருகிறது. மேலும் "லாலா தந்த்ருயுதம் மூத்ரம் லாலா மேஹேந பிச்சிலம்" (லாலா மேஹம் என்கிற மேஹவியாதியில் சிறுநீரானது நார்போன்ற சொள்ளுநீருக் கொப்பானதாய் மிகப் பசையுள்ளதா யிருக்கும்) என்று கூறியிருப்பதிலிருந்து, சரீரத்தின் கசிவுப்பொருள் கோளாறடைவதாலேயே லாலா மேஹம் உற்பத்தி. யாவதாக ஏன் கருதக் கூடாது? இச்சரீரக்லேதமே (கசிவுத்திரவமே) இரஸஜ ச்வேததாது அல்லது ஓஜஸ் என்று தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கிறது. மேனாட்டு முறைப்படி மூத்திரம் பரிசோதிக்கப் படுங்கால், அதில், சில வியாதிகளில் சொள்ளுநீர்போல் நார் நாரான திரவதாது கலந்துவருவது தெரியவரும். அதாவது அவ்விதமான சிறுநீரை ஒரு கண்ணாடிக் குழலில் சிறிது ஊற்றி, அதை நெருப்பிற் காய்ச்சினால் முதலில் மேற்புறத்தில் வெளிறிய மப்பு கம்மிய மாதிரி தோன்றும்; அப்படியே காய்ச்சிக் கொண்டுவரும்போது, இந்த மப்பு போன்ற

பாகம் கிரமமாகக் குழலின் கீழேயிறங்கி மிருதுவாகவும், வெண்மையாகவும், பசையுள்ளதாகவுமான ஒருவித பதார்த்தமாக பாறும். இதை ஜயே மேனாட்டார் அல்ப்யூமின் என்கிறார்கள். இங்ஙனம் மூத்திரத்தில் இரஸஜச்வேததாது காண்பதற்கே அல்ப்யூமி நூரியா (Albumenuria) என்று பெயர்வழங்கப்படுகிறது. அதுவே, நாம் முன் விவரித்த பிரமாணங்களால் 'லாலா மேஹம்' என்று ஆயுர்வேத நூல்களில் விவஹாரத்தில் இருந்துவருவதாகத் தீர்மானிக்கப்படவேண்டும். இந்த லாலா மேஹத்தை (Albumenuria) ப்ரைட்ஸ் டிஸீஸ் (Brights disease) என்றும் வழங்குவர். இந்த வியாதியில் முக்கியமாகத் தோன்றும் குறிகள் பின்வருமாறு:—(1) சிறுகச் சிறுக அநேகம் தடவைகளில் மூத்திரம் வெளிவருவது; (2) முள்ளந்தண்டின் கீழ்ப்பாகத்தில் நோவுண்டாவது; (3) அஜீர்ணம்; (4) பலஹீனம்; இவ்வியாதியின் அந்தியாவஸ்தையில் (5) வ்ருக்கங்கள் (Kidneys) கெட்டுப்போவது; (6) நீர்க்கோவையுண்டாதல்; இருதயரோகம். ஆக இவைகளேயாம். ஆயுர்வேதத்திலும் லாலாமேஹத்திற்குக் கூறியுள்ள மேலே குறிப்பிட்ட இலக்ஷணங்கள் உபத்திரவக் குறிகளாக ஏற்படுவதாய் மொழியப்பட்டிருப்பது ஆயுர்வேத நூல்களைப் படித்தவருக்குத் தெரியும்.

அன்றியும் இரஸஜச்வேததாது (அல்ப்யூமின்) என்பது, கீழே குறிப்பிடப்படும் வியாதிமுதலியவைகளைக் காரணமாகக் கொண்டு மூத்திரத்தில் வெளிவருவதாகப் பரிசோதனைகளால் தெரியவருகிறது; அவ்வியாதி முதலியவைகளாவன:—(1) அஜீர்ணம், (2) கல்லீரலைப் பற்றிய ரோகங்கள், (3) மாம்ஸக்ருத்துக்களை அதிகமாகப் புஜிப்பது, (4) அதிக தேஹசிரமம், (5) துயரம், சிந்தை, கோபம் முதலிய மனக்கோளாறுகள், (6) பாண்டுரோகம், (7) மூத்திரம் சிக்கிக்கொள்ளும் வியாதிகள், (8) ஸ்த்ரீ மாதவிடாயாவது. (9) யாம்ஸரஸம் பருகுதல் ஆகியவையாம்.

மேலே குறிப்பிட்ட வியாதிகளில் ஓஜோதாது நஷ்டமாவதாக ஆயுர்வேதத்தில் நிதானக்கிரந்தங்களைப் படித்தவருக்குத் தெரிந்த விஷயமே. ஆகவே ஓஜோதாது வென்பது, இக்காலத்தில் மேனாட்டாரால் அல்ப்யூமின் என்று வழங்கப்படும் வஸ்துதான் என்று இவ்விமர்சத்தினால் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

---

## DYSMENORRHOEA.

### ருதுசூலை ரோகம்

By G. KANNUSAMI VAIDYAR.

இந்த ரோக உற்பவத்தால் விசேஷமாக இத்தேசத்துப் பெண்களுள் பலர், ருதுவானது முதல் அது நின்று விடுகிறவரை, சுமார் 30 வருஷங்களும் அதற்கு மேற்பட்டும் வருந்துவதையும், அதிலும் சிலர் அநேகமாய் ஸந்ததியின்றி மலடாகவே யிருப்பதையும் நாம் பார்த்து வருகிறோம். ஆனால் அத்தகைய ரோகத்தின் அவஸ்தைகள் அவரவர் தேஹப் பிரக்ருதிக்கேற்றவாறு வெகு விசித்திரமாகக் காணுவதுண்டு. பலவித துன்பம் தரும் இந்த ரோகத்தை மூன்று வகையாக வகுக்கலாம். (1) வாதஸம்பந்தமானது; இது நரம்பைப்பற்றிய ரோகமாகும். (2) கர்ப்பாசயத்தைப் பற்றியது மற்றொன்று. (3) ருதுகம் வருகிற வழி தடைபட்டு உண்டாவது இன்னொன்று. இக்கொடிய வியாதி பொதுவாய் அதிக உஷ்ண வேக்காட்டால் உண்டாகிறதென்றே புலனாகிறது. அதனாலேயே நாட்டு வைத்தியர்கள் இது வெட்டைச் சூட்டினாலுண்டாகிறதென்று சொல்லுகிறார்கள். ருதுகாலத்தில் வயிற்றில் வலி யெடுப்பதும், சில நாள் ருது நின்று நின்று வருவதும், நிறம் மாறி தண்ணீர் கலந்த உதிரம்போலும், ஊன்போலும், கஞ்சிபோலும், கழுவுநீர் போலும், சுண்ணாப்பு நீர்போலும், புலால் நாற்றத்துடனும் வெளியாகலாம். உதிரம் கறுத்தும், உறைந்த துண்டங்களாயும் சில ஸமயம் வெளிவருவதுண்டு. இரண்டு மூன்று மாதச் சிசுரூபத்துடன் கருச் சிதைவுற்று விழுந்து விடுவதையும் பார்த்திருக்கிறோம். வயிற்றில் கட்டிப் போலிருந்து கொண்டு, சில வேளை மார்பினுள் அக்கட்டி ஏறி அடைத்துக் கொள்வதுபோல் இருப்பதும், வாயில் அடிக்கடி நீர் சுரந்து, வாந்தி, விக்கல், ஏப்பம், கொட்டாவி, தும்மல் இவை உண்டாவதும், மயக்கம், மூர்ச்சை, கைகால் நடுக்கம், உதைத்துக் கொள்ளுதல் இவ்விகாரங்கள் காண்பதுமுண்டு. சிலர் கட்டைபோல் விறைத்துக் கிடப்பர். கண்ணீர் வடித்துச் சிலர் வாய்விட்டுத் தேம்பி அழுவர். சிலர் வாய் திறந்து நகைத்துக் கண்டபடியும் பிதற்றுவர். சில ஸமயம் மௌனமாகவேயும் இருந்துவருவர். ஒரு வேலையும் செய்வதற்கு விருப்பமின்றி, அயர்ந்திருத்தலுமுண்டு. இத்யாதிகள் இந்நோயின் ஆரம்பக் குறியென்னலாம்.



இதைப் போக்க வழிதேடாமலிருப்பின் இடுப்புவலி, ஸந்திக் குடைத்தல், தொடைவலி, முன் கை வீங்குதல், ஒரு ஸ்தனம் வீங்கி விறு விறுத்துப் புண்போல் வலித்தல், முதுகு முள்ளந்தண்டுக் கொடியில் வலியெடுத்தல், அடிக்கடி சிலருக்கு ஜ்வரம் உண்டாதல், அமிதமாக உதிரப் பெருக்குண்டாதல், அடிவயிறு கல்லைப்போல் கனத்துவிடுதல் ஆக இவை முதலிய குறிகள் காணும். சிலருக்கு மூத்திரத்துடன் சளி அல்லது முட்டையின் வெள்ளைக் கருபோன்றும், சிலருக்கு பால் முறிந்ததைப் போன்றும் தோஷம் வெளிப்படும். ஆடை ஆபரணங்களை விலக்கிப் போட்டுவிட்டு அங்குமிங்கும் ஓடித்திரிதலும், பேசொணாத வார்த்தைகளைப் பேசுதலும், சிலருக்கு போகவிருப்பமும், பலருக்கு போக வெறுப்பும் உண்டாதும். அநேகருக்கு மூத்திரம் அதிகமாயிறங்கும்; சிலருக்குக் குறைந்தும் எரிச்சலுடனும் இறங்கும். சிலருக்குத் தினவெடுத்து தோஷம் அதிகரிக்கும். வேறு சிலருக்கு மூத்திரவழிகள் வெந்தும், புண் உண்டாவதும், அஜீர்ணமும் உன்டாவது வழக்கம். மலபந்தமும், வயிற்றுப் போக்குமிருக்கும். இதனிடையே சிலருக்குக் குழந்தை உற்பத்தியாகி வெகு கஷ்டப்பட்டுப் பிரஸவிப்பதும், சிலருக்கு ஐந்தாறு மாஸங்களில் கர்ப்பம் அழிந்தும், சிலருக்குப் பிறந்து இறந்தும் போவதுண்டு. வயிற்றில் சிலருக்குக் கட்டியுண்டாகி (ஸூதகக் கட்டி). வயிறு, கால் இவை வீங்கி, கண் மஞ்சள் நிறமாகப் போய், சீக்கிரத்தில் உயிருக்கு அபாயம் நேரிடுவதும் வழக்கம். இவ்வித ரோகமுள்ள பெண்களைக் கண்ணுற்ற இத்தேசத்து வைத்தியர்களிற் சிலர் இதைச் சங்காதோஷமென்றும், பிசாசு பிடித்திருக்கிறதென்றும் சொல்லி, வீட்டிலுள்ளோரைப் பயப்படுத்தி, பூசாரிகளையும், மாந்த்ரீகர்களையும் கொண்டு மந்திரித்துப் பார்ப்பார்கள். சிலர் புத்தி மயங்கி கேட்ட கேள்விகளுக்கு ஏதோ தப்பும் தவறுமாகப் பதிலுரைப்பதும், சிலர் ஞானப்பைத்தியமாய் வேதாந்தமொழிகள் பேசுவதும் உண்டு.

இத்தகைய குண தோஷங்களையுடைய ரோகமானது ஆரம்ப சிகித்ஸையில் சிலருக்குச் சௌகரியமாகலாம். ஆனால் சிலர் தங்களுக்கிருக்கும் அவஸ்தையின் விவரத்தைத் தெரிவிக்காது தமக்குள்ளேயே வருந்தித் துன்பமனுபவிப்பர். அதனால் பித்தவாயு, குன்மம், வயிற்றுப்போக்கு முதலிய கொடிய உபத்திரவங்களுக்கு அவர்கள் வசப்படுகிறார்கள். பலருக்கு தேஹம் வற்றியும், ஆனால் சிலருக்கு தேஹம் ஸ்தூலித்தும் மேதாரோக சரீரியாய் மூச்சு அடைப்பு முதலிய தொந்தரவுகளும் காண்பதுண்டு. சிலருக்கு போகமின்மையால் இது நன்மை பயப்பதுண்டு. அதிக புணர்ச்சியினால் இந்த ரோகம் உண்டாகிறதென்று சொல்லுவதற்குமில்லை. ஏனெனில் பொதுவாய் வேசியர்களுக்கு இந்த ரோகம் அவ்வளவு உண்டாவதாகத் தெரியவில்லை. நாசுக்கான தேஹிகளுக்கும், பயப்பிரக்ருதி யுள்ளவர்களுக்கும் இது அதிகமாயிருக்கிறது.

இக்கொடிய வியாதிக்கு இதுவரை ஆங்கில வைத்தியர்கள் கண்டு பிடித்ததாய்க் கூறும் ஔஷதங்களையும் சிகிச்சைகளையும் ஏற்றுக்கொண்டும் பூர்ண சுகத்தைப் பெறாமல், அவதைப் படுவோர் அநேகர். ஆனால் காலாந்தரமாய் சிலருக்குப் பூர்ண சுகப்படுத்திய ஆயுர்வேதஸித்தௌஷதங்களையும், எனது சிறிய அறிவிற்கு எட்டிய அநுபோக முறைகளையும் அத்தகைய ரோகஸ்தர் அநுஸரித்து வர வேண்டிய சிற்சில முறைகளையும் இதடியில் குறிப்பிடுகிறேன். அவைகளில் நம்பிக்கை வைத்துப் பொறுமையோடு உபயோகிப்பின் குணமடையலாமென்பது எனது கொள்கை.

1. ஆமணக்கெண்ணெயை அடிக்கடி பேதிக்குச் சாப்பிடவேண்டும். வேலிப்பருத்தி, தேங்காய்ப்பால் இவகைளையாவது, கச்சைக்காய் கும்மட்டிக்காய் சேர்ந்த எண்ணெயையாவது, விழுதியிலை ரஸம் சேர்ந்த எண்ணெயையாவது சாப்பிட்டு பத்தியமிருக்க வேண்டும்.

2. நாக்குப் பூச்சி மருந்து சாப்பிட்டு தம்மேலே விரேசன மருந்துகளை உட்கொள்ளுதல் நலம்.

3. கலிங்காதிலேஹ்யம் சாப்பிடுதலும் உத்தமம்.

4 பலஹீனமாயிருப்பின், வேப்பம்பட்டைக் கஷாயம், அல்லது நிலவேம்பு, வெள்ளாறு இவற்றின் கஷாயம், அயச்சிந்தூரம் இவையும் நல்ல பலனைத் தரும்.

5. மஹாராஸ்நாதிக்வாதம், பலக்ருதம், ஹிங்க்வாதி சூர்ணம் இவைகள் மெத்த நல்ல குணம் செய்யக்கூடிய ஔஷதங்கள். ஆனால் இவைகளை ஸாவதானத்துடனும் நம்பிக்கையாகவும் உபயோகிப்பின் பூர்ண குணம் உண்டாகிறதென்பது என் அநுபவஸித்தாந்தம்.

பகல் நித்திரை, சாம்பல் மண் தின்னல், காப்பிக்குடித்தல் இவைகளைமுற்றும் விலக்கி, தேஹவுழைப்பு மிதமாகச் செய்தல், வென்னீரில் ஸ்நானம் செய்தல், மாப்பண்டங்களைத் தின்னாமை ஆக இவைகள் மிகவும் நன்று. தேவாராதனை முதலியதும் சில ஸமயங்களில் மிகவும் பயன் தரக்கூடியது.

---

# THE WATER AND ITS USES.

## ஜலமும் அதன் உபயோகங்களும்.

BY THE LATE VAIDYA RATNAM
PANDIT D. GOPALACHARLU.

ஆயுளைக் காப்பாற்றுவதின் பொருட்டு உபயோகிக்கும் திரவ வஸ்துக்களில் தண்ணீர் பிரதானமானது. இது ஆகாயத்திலிருந்து மழை ரூபமாய் விழுவது, பூமியில் கிடைப்பது என்னும் வேற்றுமைகளால் இருவகைப்பட்டிருக்கின்றது. இவைகளையே நாபஸம் அல்லது ஆந்தரிக்ஷம் என்றும், பௌமம் என்றும் வழங்குகின்றனர். இவைகளில் நாபஸம் என்பது, தாரம் (தாரையாய் பெய்யும் மழை), காரம் (ஆலங்கட்டி மழை), துஷாரம் (திவிலை போல் பெய்யும் மழை), ஹைமம் (பனி) என்று நான்கு வகையா யிருக்கின்றது. இவைகளில் தாரமென்பது காங்கம், ஸாமுத்ரம் என்றிருவகைப்படும். சம்பா அன்னத்தை ஒரு வெள்ளிப் பர்த்திரத்தில் போட்டு, அந்த வெள்ளிப் பாத்திரத்திற்குள் மழைஜலம் விழும்படி மழையில் வைக்கவும். மழைநீருடன் கூடிய அப்பாத்திரத்திலுள்ள அன்னமானது இயற்கையான ஸ்வரூபம், இயற்கையான சுவை முதலியவைகளை அடைந்திருந்தால் அந்த மழைநீர் காங்கமென்றும், இயற்கைக்கு மாறான நிறம் முதலியவைகளை அந்த அன்னம் அடைந்தால் ஸாமுத்ரமென்றும் பரிசோதனைகளால் முற்காலத்திய நமது சாஸ்திரஞ்ஞா கண்டறிந்தனர். காங்கம் லகுகுண முள்ளதாகையால் உத்தமமானதெனக் கூறப்படுகிறது. ஆகாயம் கீட லூதாதி (புழுக்கள், எட்டுக்கால் பூச்சி முதலிய) விஷஜந்துக்களுடன் கூடியிருப்பதினால் வர்ஷருதுவினுடைய துவக்கத்தில் அவை மழையில் சேருவதால் காங்கமானாலும் உபயோகிக்கத் தகாதெனநிஷேதித்தனர். அகஸ்திய நக்ஷத்திரம் உதித்த பிறகு இத்தகைய விஷக்கிருமி முதலியவைகள் இல்லாமல் ஆகாயம் நிர்மலமாயிருக்குமாகையால், ஐப்பசி மாதத்தில் பெய்யும் மழை

---



ஜலமாகிய நாபஸோதகமானது காங்கமா ஸாமுத்ரமா என்று பரீக்ஷிக்காமலே உபயோகிக்கத் தகுமென்றார்கள். இதையே ஹம்ஸோதக, ஐந்த்ரோதகங்க ளென்னும் பெயர்களால் வழங்கியிருக்கிறார்கள். இதில் இனிப்பு முதலிய சுவைகளெதுவும் வியக்தமாகாததால் அவ்யக்தரஸமென்றும், தோஷப் பிரகோபத்தை யுண்டாக்கும் சக்தியற்றதா[illegible]ால் அம்ருதமென்றும், பிராணதாரண ச[illegible]ப யும், ஸௌம்யதாதுக்களையும், ஓஜஸ்ஸை[illegible]யும் விருத்தி செய்வதால் ஜீவநமென்றும், சஸ்திரங்கள் தாக்குவது விழுதல் முதலிய காரணங்களினால் உண்டாகும் மூர்ச்சைகளைச் சமநம் செய்து சரீரத்தைத் தரிப்பிப்பதால் தாரணமென்றும், மனதிற்குத் திருப்தியை யுண்டாக்குவதால் தர்ப்பணமென்றும், சூக்ஷ்மமான ஸ்ரோதோ மார்க்கங்களுள்ள மனிதர்களுக்குப் பிராணபலத்தை யுண்டாக்குவதால் ஆச்வாஸஜநகமென்றும், விசேஷமாக ஹ்ருதயத்திற்குப் பிரியத்தையும் நல்ல பலத்தையும் உண்டாக்குவதால் ஹ்ருத்யமென்றும், ஸர்வ இந்திரியங்களுக்கும் சுகத்தைத் தருவதால் ஹ்லாதியென்றும், பிரஞ்ஞைக்கு (அறிவிற்கு) விகாஸத்தை யுண்டாக்குவதால் புத்திப் பிரபோதநமென்றும், ஜிஹ்வேந்திரியத்திற்கு (நாக்கு)ப் பிரியமானதாகையால் மிஷ்டமென்றும், ஸ்பர்ச (தொடுதல்)-வீரியங்களால் குளிர்ந்ததாகையால் சீதளமென்றும், சீக்கிரமாக பாகம் ஆகிறதினால் லகுகுண முள்ளதென்றும் தெரிந்து வெளியிட்டனர். இது அம்ருதத்திற்குச் சமானமானதாகையினால் பௌமோதகத்திற்குண்டாகும் கலக்கம் முதலிய கெடுந்தோஷங்களுண்டாகிறதற்கிடந் தரக்கூடியதாக இல்லை. உயரமான உப்பரிகைகளுடைய மேல்பாகங்களில் சுத்தமான பிரதேசத்தில் பாத்திரங்களை வைத்து, அவைகளின்மீது பரிசுத்தமான துணிகளை மூடிச் சுத்தமான ஆகாயத்திலிருந்து பெய்யும் காங்கோதகத்தைக் கிரஹிக்க வேண்டும். இது கெடாமலிருக்கும்படி நல்ல பாத்திரங்களில் வைத்து, பண்டைக் காலத்தியவர்கள் எல்லாக்காலங்களிலும் உபயோகப்படுத்திக்கொண்டிருந்ததாக "ஐந்த்ரமப்பு ஸ[illegible] பாத்ரஸ்த்தம் அவிபந்நம் ஸதா பிபேத்" என்னும் வாக்படர் முதலியோருடைய வாக்கியங்களினால் தெரிகின்றது. இத்தகைய காங்கோதகத்தை உபயோகித்தால் எவ்வித நோய்களும் அணுகாவென்பது திண்ணம். இதனாலேயே இப்பொழுதும் வைத்திய விசாரதர்கள் பல சுத்தமான மழைநீரைக் கையிருப்புவைத்து பலவிதநோய்களில் உபயோகிக்கின்றனர் பே[illegible]லும். நமது வைத்திய சாஸ்திரஞ்ஞர் வேண்டியவளவு காங்கோதகம் கிடைக்காதபோது பரிசுத்தமானதும், கருத்த அல்லது வெளுத்த மண்ணுடன் கூடியதும், காங்கோதகத்தைப் போன்ற குணங்கள் உடையதுமான பூமியிலுள்ள தண்ணீரை யுபயோகித்தல் தகுமென்றறிவித்தனர். பௌமமென்பது கௌப[illegible] (செங்கல்களினால் விசாலமாகக் கட்டப்பட்ட கிணற்று நீர்), ஸாரஸம் (தானகவே ஏற்பட்ட குளம் அல்லது ஏரியின் நீர்), தாடாகம் (ஏ[illegible] ஜலம்), பிரஸ்ரவணம் (மலையருவிஜலம்), சௌண்ட்யம் (குளத்து நீர்), ஔத்பிதம் (ஊற்று ஜலம்), வாபி (நடைகிணற்று நீர்) நாதேய[illegible] (ஆற்று நீர்) என்று எட்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. இவைகளில் வாபியென்பது அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் அதிகமாக பெ[illegible] ழியப்பட்டுள்ளது. பௌமோதக மென்பது நாடு, நிலம், காலம் முதலியவைகளின் வேற்றுமைகளை யநுஸரித்து உபயோகித்தால் ஹி[illegible]முண்டாக்குவதாகும். அவைகளில் வர்ஷருதுவில் ஆந்தரிக்ஷமென்பதும், ஔத்பிதம் என்பதும் விசேஷகுணத்தைத் தருபவை. சர[illegible]ருதுவில் எல்லா ஜலங்களும் நிர்மலமாக விருக்குமாதலால் அவை யெல்லாம் உபயோகிக்க[illegible] தக்கவைகளாம். ஹேமந்தருதுவில் ஸாரஸம் தாடாகம் என்பவை நன்மை தருபவை. வஸந்[illegible] க்ரீஷ்மருதுக்களில் கௌப, பிரஸ்ரவணங்கள் குணத்தைத் தருபவை. சிசிரருதுவில் சௌண்ட்யம் என்பது உபயோகத்திற்குரி[illegible]தாம். வர்ஷருதுவில் வெவ்வேறு இடங்களி[illegible]

புதிதாய் பெய்திருக்கும் மழையின் தண்ணீரானது மலம், மூத்திரம், புழுக்கள், அழுகிய பதார்த்தங்கள் இவைகளால் மிகவும் விகாரம் அடையும். இத்தகைய நீரை வெயிலில் வைத்து சூடாகச்செய்வதால் அழுக்கு நீங்கும். ஸாமானிய தோஷங்கள் இருக்கும்பொழுது இரும்புக்குண்டை நன்றாகச்சுட்டு ஜலத்திற் போடுவதினாலாவது, காய்ச்சியமணலையும் ஓட்டுத்துண்டுகளையும் போடுவதினாலாவது பரிசுத்தப்படுத்தலாம். நாககேஸரங்கள், ஸம்பங்கி, அல்லி, பாதிரி முதலிய புஷ்பங்களை ஜலத்திற் போட்டால் அதிலுள்ள நாற்றம் முதலியதோஷங்கள் நீங்கி, நிர்மலமாகி இயற்கையான வாஸனையுண்டாகும். தேற்றுங்கொட்டைகள், புஷ்பராகமணி, தாமரைக்கிழங்கு, பாசிவேர், முத்துக்கள், ஸ்படிகக்கல் முதலியவைகளை ஜலத்தில் போட்டால், சேர் முதலியவைகளுடைய கெடுதிகளைப் போக்கடித்து ஜலத்தை நிர்மலமாக்கும். மேற் சொல்லிய உபாயங்களில் பலவற்றை இன்றைக்கும் இத்தேசத்தியவர்கள் அனுஷ்டானத்தில் வைத்துக்கொண்டு இருக்கின்றனர். பௌதிக சாஸ்திர ஸஹாயத்தைக் கொண்டு இருபதாவது நூற்றாண்டில் ஜலசோதனோபாயங்கள் பல கண்டறியப்பட்டு அநுபவத்திலிருக்கின்றன. சாஸ்திரீயமெனப்படும் குழாய் ஜலமும் கூட தற்சமயம் பல ஸாங்க்ராமிக நோய்களுக்குக் காரணமாயிருத்தல் பலர் அறிந்ததேயாகும். இந்தக்குழாய்ஜலமானது இயந்திரம் முதலியவைகளின் ஸஹாயத்தைக்கொண்டுசுத்தப்படுத்துமிடத்தில் மாத்திரம் சுத்தமா யிருக்குமெனக் கூறத்தகும். பிறகு இரும்புக் குழாய் வழியாகச் செல்லுதலும், அதில் சூரிய சந்திர கிரணங்களாவது, சுத்த காற்றாவது படாமலிருப்பதும், அதினால் அந்நீரில் பலவித கெடுதிகள் உண்டாகிறதற்கு இட மேற்படுதலும் ஸஹஜம். பிரஜைகளுடைய அளவற்ற பணத்தைச் செலவழித்து ஜலஸௌகரியத்தை புண்டாக்க முயன்றும் ஆரோக்யம் உண்டாகாமலிருக்கின்றது. ஸாமானியமாக எவ்வேரியிலோ எக்கிணற்றிலோ ஜலம் கெட்டுப்போனால் அதையுபயோகிப்பவர்களுக்கு மாத்திரம் ஆரோக்கியத்தன்மைக்குக் குறையுண்டாகலாம். ஆனால், இக்குழாய்நீர் அப்படியல்லாமல் குழாய்ஜலத்துக்கு இருப்பிடமாகிய விடத்திலேயே ஜலம் கெட்டுப்போகும் பக்ஷத்தில், அது செல்லும் எல்லாவிடத்திலுள்ளவர்களுக்கும் ஏககாலத்தில் ஆரோக்கியம் கெடலாமென்பதற்கு ஐயமில்லை. இது விசேஷ கெடுதல் அல்லவா? நாம் விசேஷமான ஆசைகளுக்குச், செல்லாமல், பரம்பரையாக வந்தவையும் சுலப ஸாத்தியங்களுமான நம் பண்டைக்காலத்திய ஆசாரங்களுக்கு உட்படுதல் மேன்மையுண்டாக்குவதாகும். பட்டணவாஸிகளாவது, கிராமவாஸிகளாவது ஜலத்தை யுபயோகிக்கும் பொழுது மேற்சொல்லிய உபாயங்களில் எதையாவது செய்து, சுத்தமான ஜலத்தை ஸ்நானபானங்களுக்கு உபயோகித்தல் ஆரோக்கியத்தைத் தருவதாகும். ஜலத்தைக் காய்ச்சியோ, சில விதங்களில் வடிக்கட்டியோ, மற்றும் வேறெந்த வழியிலேனும் சுத்தப்படுத்தியோ ஸ்நானபானம் முதலியவைகளுக்கு உபயோகித்தல் அத்தியாவசியமென்பதை ஆங்கில வைத்தியர்களும், நகர பரிபாலக ஸங்கத்தின் ஆரோக்கிய அதிகாரிகளும் வற்புறுத்திக் கூறுகின்றார்களென்பது மிகப் பிரஸித்தம். எல்லா உபாயங்களினும் ஜலத்தை நன்றாகக் காய்ச்சி, நான்கு ஐந்து மடிப்பாக மடித்திருக்கும் துணியினால் ஏழு தடவை வடிகட்டினால், அத்தண்ணீரானது நிர்மலமாகி கெடுதியற்ற நிலைமையையடையுமென ஆயுர்வேத அறிஞர்கள் அங்கீகரிக்கின்றனர். எல்லாப் பிராணிகளுடையவும் ஜீவிதத்திற்கு ஜலம் முக்கியமென்பது ஸர்வ ஸம்மதமாதலால், நிர்மலமான காங்கோதகத்தை யெப்பொழுதும் உபயோகித்தல் உத்தமம். அது கிடைக்காத பொழுது பூமியிலுள்ள ஜலத்தை மேற்கூறிய உபாயங்களைக்கொண்டு சுத்தமாக்கி உபயோகித்தல் அவசியம்.



## THE IMPORTANCE OF EARLY DIAGNOSIS OF CANCER IN WOMEN.

## ஸ்த்ரீகளின் வல்மீகவியாதியை ஆரம்பத்திலேயே பரிசோதித்து அறிவதன் ஆவச்யகம்.

By D A. R. ANFRANC, M. R. C. S., L. R. C. P. & C.

வல்மீகம் (அல்லது ஒருவித கடுஞ்சிலந்தி) புருஷரைக் காட்டிலும் ஸ்த்ரீகளுக்கு அதிக ஸாதாரணமா யுண்டாகிறது. இதற்குக் காரணம், ஸ்த்ரீகளுடைய இரண்டு முக்கியமான அவயவங்கள் இந்த வியாதி பற்றுவதற்கு ஏற்ற விடங்களா யிருக்கின்றன வென்பதேயாம். கர்ப்பாசயமும் (கருப்பை) ஸ்தநமுமே அவ்விரண்டு அவயவங்களாம். மனிதருக்குப் பொதுவாக எல்லா அவயவங்களையும் பற்றி யுண்டாகும் ஸகல விதமான வல்மீக வியாதிகளையும், ஸ்த்ரீகளுக்கு கர்ப்பாசய-ஸ்தநங்கள் ஆகிய இரண்டு அவயவங்களை மாத்திரம் ஆச்ரயித்துக் காணும் அவ்வியாதியையும் கணக்கிட்டு ஒத்திட்டுப் பார்த்தால், இவ்விரண்டு அவயவங்களைப் பற்றியவை மாத்திரம் நூற்றுக்கு இருபத்தைந்துக்கு மேல் இருப்பதாய் அறியப்படுகிறது. இவ்வல்மீக மென்னும் வியாதி மிகக் கொடியது; இது அவ்விரண்டு அவயவங்களையும் பற்றியதாய், வருஷந்தோறும் நூற்றுக்கணக்கான ஸ்த்ரீகளின் உயிர்களைச் சூறைபாடி வருகிறது; இதன் மிக்க பயங்கரமான குறிகள் பெரும் ான்மையான பெண்மக்களுடைய மனதைத் திடுக்கிடச் செய்கின்றன. ஆகவே இவ்வியாதியை முளையிலேயே எளிதிற் கிள்ளியெறியவேண்டுமானால், ஆரம்பத்திலேயே இதைப் பரிசோதித்து வைத்தியர் மூலமாய் உள்ள நிலைமையைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஸ்தநத்திலுண்டாகும் வல்மீகம்:—(சிலர் ஸ்தந வித்ரதியென்று இதை பிரமித்துக் கூறுவர்; வித்ரதியென்பது சீழ்க்கட்டி; அது காலக்கிரமத்தில் பழுத்து உடைந்து ஆறக்கூடிய வியாதி; சிகித்ஸிப்பதற்கும் எளிது. வல்மீகமென்பது ஒருவித துர்மாம்ஸ வளர்ச்சி; புற்று என்றும் கூறலாம். இது பலமான சஸ்திர சிகித்ஸையினால் நிவ்ருத்திக்கக் கூடியதாகவோ நிவ்ருத்கக் கூடாததாகவோ இருக்கும். ஆகவே ஸ்தநவித்ரதி யென்பது முற்றிலும் வேறுபட்ட வியாதி.) கர்ப்பாசயத்திற்கு அடுத்தபடியாக, ஸ்த்ரீகளில் வெகு ஸாதாரணமாய் வல்மீகம் உண்டாவதற்கு ஏற்ற ஸ்த்தலம் ஸ்தநந்தான். மார்பில்இந்த அவயவங்கள் ஏதோ விசேஷ உபயோகத்தின் பொருட்டு சில குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு இயற்கையில் ஏற்படுகின்றன. மற்ற அவயவங்களோடு ஸம்பந்தம் ஸ்தநங்களுக்கு இல்லையென்று நினைக்கக் கூடாது; ஏனெனில், தேஹத்தில் மற்றெல்லா அவயவங்களோடும், முக்கியமாய் கர்ப்பாசயத்தோடும் இவற்றிற்கு நரம்புகளின் மூலமாய் நெருங்கிய ஸம்பந்தம் (nervous connection) உண்டு. ஸ்த்ரீகளுடைய மார்பின் சுபாவமான சுருசுருப்புத் தன்மை நீங்கிவரும் வயதில் (யௌவனப் பருவம் குறைந்து வருந்தருணத்தில்), அவ்வயவம் விசேஷ மாறுதலைப் பெற்று வருவதால், வல்மீகமென்னும் துர்மாம்ஸ வளர்ச்சி முதலியவியாதிகளுக்கு அதுஆதாரமாவது வழக்கம். ஆகையினாலேயே ஸ்தந வல்மீகம் நாற்பதிலிருந்து ஐம்பது வயது வரையில், வெகு ஸாதாரணமாய் பல ஸ்த்ரீகளுக்கு ஸம்பவிப்பதுண்டு. இவ்வல்மீக வியாதி, குழந்தைகளைப் பெற்றெடுத்த ஸ்த்ரீகளுக்கும், பிள்ளைப் பேறு இல்லாமலே யிருப்பவர்களுக்கும் ஒரே சீரா யுண்டாகிறது. அநேக ஸமயங்களில் ஏதோ அடி தாக்கியதால் அவ்வவயவம் வீங்கியதென்று பிரமையினாலும் கூறக் கேட்டிருக்கிறேன். ஸ்த்ரீகள் மார்புக் கச்சைகளை வெகு அழுத்தமாகக் கட்டிக்கொள்வது, இவ்வியாதிக்கு ஒரு பிரதாந காரணமாகிறதென்றும், ஆகவே அக்காரணத்தினா லுண்டாகும் வல்மீக வியாதியால் வருந்துபவர் கொஞ்ச நஞ்சமல்ல வென்றும் நாம் நம்புகிறோம். (மேனாட்டு ஸ்த்ரீகள் மார்புக் கச்சுகளை இறுகக் கட்டிக்கொள்வது வழக்கம்.) ஆனால் இந்தக் காரணத்தை எந்த

புஸ்த்ரீயும் தானுகக் கூறுவது மில்லை, ஆனல் கேட்டாலும் 'ஆம்' என்று ஒப்புக் கொள்வது மில்லை யாகையால், இவ்வியாதிக்குக் காரணம் கண்டு பிடிப்பதில் இவர்களுடைய வார்த்தையை நம்பி ஒன்றும் நிச்சயித்து விடமுடியாது.

ஸ்தநங்களில் இரண்டு விதமான வல்மீகங்கள் உண்டாகும். அவற்றுள் ஒன்று அவயப் பொருளையே பற்றியுண்டாகும்; மற்றொன்று ஸ்தநக் கிரந்தியின் குழலிலே உற்பத்தியாகும். இவைகளில் முதலிற் கூறியது வெகு ஸாதாரணமா யுண்டாவது வழக்கம். ஸ்தநத்தின் தாதுப் பொருளின் சிரழிந்து வரும் நுண்ணறைகளைச் சுற்றியுள்ள தாந்தவ தாதுக்களின் (fibrous tissues) அளவுக்கேற்றபடி. இது சில விதங்களில் பேதப்படும். தாந்தவ தாதுக்கள் வியாதிகள் வராமல் தடுப்பதற்கு இயற்கை யணைகளாய் அமைந்திருக்கின்றன. இந்த வியாதி மிகவும் கடுமையானது; வெகு ஜடிதியிலும் வளர்ந்துவிடக் கூடியது. ஆரம்பத்தில் இது ஒரு சிறிய அர்புதம் (tumour) போல் தோன்றும். அது கல்லைப்போல் கெட்டியாகவு மிருக்கும். இரண்டாவதாகக் கூறிய வல்மீகமோ வென்றால் சர்மத்தோடு பதிந்ததாயிருக்கும்; இது எந்த ஸ்தநத்தில் புறப்படுகிறதோ அந்த ஸ்தநம் மற்றொன்றைவிட ஒருவாறு சிறுத்துப் போவதோடு, முலைக்காம்பு ஸ்தநத்துடன் படிந்து குறுகிப் போகும்.

பிறகு சீக்கிரத்திலேயே அங்குளில் நெறிகட்டும்; அதற்குச் சிகித்ஸை செய்யாவிட்டால் அதற்கு அருகில் வேறு சில வளர்ச்சிகளும், உள்தாதுக்களில் (எலும்பிலுங்கூட) பலவித கோளாறுகளும் காணும். கடைசி நிலைமையில் இரத்தக் குழாய்களில் அமுக்கம் அதிகரிக்கவே கை மிகவும் வீங்கிப்போய், தேஹத்தில் சோர்வு மேலிட்டு, மரணம் ஸம்பவிக்கும்.

இதில் தீவ்ர நிலைமையிலுள்ள வியாதியைப் பார்ப்பது அரிது; ஸ்தநக்கிரந்தியின் குழலைப் பற்றி யுண்டாகும் வல்மீகமும் அங்ஙனமே அவ்வளவு அதிகமாய் காணுவதில்லை. இரண்டாவது குறிப்பிட்டதில் ஒருவாறு இறுகிய இரத்தம் கலந்த ஸ்ராவம் ஒரு விசேஷக் குறியாகும்.

ஸ்தநவல்மீகத்தின் காலவளவு பலவாறு மாறுபடுகிறது. ஸாதாரணமான ஸ்தநவல்மீகத்திற்குச் சராசரி காலவளவு ஐந்து முதல் ஆறு வருஷமாம். கடுமையான வல்மீக வியாதி (மரணத்தை யுண்டுபண்ணுவதான இது) ஒரு வருஷத்திற் குட்பட்ட காலத்திலேயே அதன் முழுப்பலனையும் காட்டிவிடும். நீடித்த காலம் தொடரக்கூடிய சுபாவமுள்ள வியாதியானது 'சிலாவல்மீகம் (stone cancer) என்று வழங்கப்படும் வகை—சில ஸமயம் இருபது வருஷங்கள் வரையிலுங்கூட நீடிப்பதுண்டு.

தனது உயிரைப் பெரிதாகக் கருதும் பிணியாளி யொவ்வொருத்தியும், மார்பில் ஏதோ ஸாதாரண கட்டி அல்லது சிலந்தி யுண்டாவதாகச், சிறிதளவேனும் தெரிந்தவுடனே, பயிற்சி பெற்றவரிடம் வைத்தியபரிசோதனை செய்துகொள்ளவேண்டும். இப்படி முன் ஜாக்கிரதையா யிருந்து பரீக்ஷித்துக் கொண்டு ஆரம்பத்திலேயே தகுந்த பரிஹாரம் செய்து கொள்வதால், அப்பால் நேரிடக்கூடிய அபாயகரமான நிலைமையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். அஜாக்கிரதையா யிருந்து வியாதியை முதிரச்செய்து கொண்டாலோ, பிராணாபாயமாவது நேரிடும், அல்லது பலமான சஸ்திர சிகித்ஸையாவது செய்துகொள்ள வேண்டி யிருக்கும்; அப்படிச் சஸ்திர சிகித்ஸை செய்கையில், ஒவ்வொரு ஸமயம் வியாதிகொண்ட ஸ்தநம் முழுமையுமே விலக்கிப் போடும்படியாகவும் நேரிடும். சில விரணத்திலிருந்து துர்நாற்றமுள்ள சீழும் இரத்தமும் கலந்த நீர் வடியும்; கிருமிஹரமான திராவகங்களை யிட்டு அப்போதைக் கப்போது கழுவி, முறைப்படி தகுந்த ஔஷதங்களிட்டு பந்தநம் செய்துவர வேண்டும்.

கர்ப்பாசய வல்மீகம்:— கர்ப்பாசயத்தில் உண்டாகும் வல்மீக வியாதி (இது ஆயுர்வேதத்தில் இரக்த-குல்மம் எனப்படுகிறது. ப-ர்-) முற்கூறிய வேறு அவயவங்களிற் காணும் வல்மீகத்திற்குப் பெரும்பாலும் ஸமானமான சுபாவமுள்ளது. இவ்வவயவத்தில் ஸாதாரணமாய் இரண்டு பாகங்களில் இச்சிலந்தி ரோகம் உண்டாவது வழக்கம்; அவற்றுள் ஒன்று கர்ப்பாசயத்தின் மத்திய உடல், மற்றொன்று கர்ப்பாசயக்கழுத்து. இரண்டாவது குறிப்பிட்ட பாகத்தில் பிரஸவ ஸமயத்தில் நேரிடும் கோளாறுகளால் (குழந்தை வெளிவருகையில் அவ்விடம் தாக்கப்பட்டு புண்படுவது, ஆயுதப் பிரயோகத்தினால் உண்டாகும் ஏதாவது சிதைவு இவற்ருல்) வல்மீகக் கோளாறு விசேஷமாகக் காண்கிறது. இது உண்டாவதற்கேற்ற வயது நாற்பதிலிருந்து ஐம்பது வரையிலுமென்று அனுபவத்தில் தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிறது. நோவு இரத்த ஸ்ராவம், ஒருவித துர்நாற்றமுள்ள கசிவு இவை காண்பது பொதுவான இலக்ஷணமாகும். இடுப்பு, மார்பு, கால்கள் இவற்றில் வலியுண்டாகும்; அவ்வலியானது தன்மையில் வலைக்கப்படுவது போன்றும், நறுக்கப்படுவதுபோன்று மிருக்கும். இது பெரும்பாலும் கடைசி நிலைமையில் நேரிடும் குறி. இரத்தம் கலந்த கசிவு மிகச் சிறிதளவேனும் எப்பொழுது கருப்பையிலிருந்து வெளியாகின்றதோ, அப்பொழுது அதையே கர்ப்பாசயப் புற்று (கர்ப்பாசய வல்மீகம்) உண்டாயிருப்பதற்கான முதற்குறி யென்றறிக; இவ்விதமான ஸம்பவம் ஸாதாரண நிலைமையில் உண்டாகுமென்று நினைக்கலாகாது; அதிலும் மாதவிடாய் மாறிப்போய் நின்றுவிடுந் தருவாயில் அல்லது நின்றுபோன பின்பு இக்கோளாறு சிறிதேனும் கண்டால், அது அந்த ஸ்த்ரீயின் ஆரோக்கிய நிலைமைக்கு ஆபத்துண்டா யிருப்பதாக அறிவிக்கும் குறி யென்றுணருக. உடனே சஸ்திர சிகித்ஸையில் நிபுணரா யிருப்பவரிடம் சென்று கர்ப்பாசயத்தை முற்றிலும் பரிசோதனை செய்யச் செய்து, ஆரம்பத்திலேயே வியாதி நிலைமை யறிந்து ஜடிதியில் பரிஹாரம் தேடிக்கொள்ள வேண்டும்.

கர்ப்பாசயத்தின் உடலைப்பற்றி வல்மீகம் அவ்வளவு விசேஷமாய் உண்டாவதில்லை. ஆனால் எல்லா ஸ்த்ரீகளுக்குமே—புருஷ ஸம்பந்த மிருப்பவருக்கும் சரி விவாஹமாகாமலிருப்பவருக்கும் சரி—இது பொதுவாகக் காண்கிறது. இரண்டு விதமான இவ்வல்மீக வியாதிகளும் சீக்ரத்திலேயே சஸ்திர சிகித்ஸையினாலும் பரிஹரிக்க முடியாதனவாய் விடுகின்றன; ஏனெனில், அவ்வவயவம் ஜீவாதாரமான மர்ம ஸத்தாநமாகவும், மிகவும் நெருக்கமான ஸ்த்தலத்தினுள் அமைக்கப்பட்டதாகவும் இருப்பதால், கர்ப்பாசயத்திலும் சரி கர்ப்பாசயக் கழுத்திலும் சரி அந்த வியாதி வெகு துரிதமாகப் பற்றிப் பரவுகின்றது. அநேக ஸமயங்களில் கர்ப்பாசயத்தைச்சார்ந்த கிரந்திகளும், கர்ப்பாசயமும் முற்றிலுங்கூட விலக்கி வெளிப்படுத்தப்பட வேண்டியவைகளாய் விடுகின்றன.

ஸ்த்ரீகளுக்குண்டாகும் வல்மீக வியாதிகளில், கர்ப்பாசயத்தைப் பற்றிய வல்மீகமே (இரத்த குல்மம்) வெகு ஸாதாரணமாய் ஸம்பவிப்பதாகும். வல்மீக வியாதியால் இறக்கும் ஸ்த்ரீகளில் மூன்றிலொரு பாகம் ஸ்த்ரீகளும் கர்ப்பாசய ஸம்பந்தமான வல்மீகத்தினாலேயே இறந்து போகிறார்கள். ஏன் இவ்விதம் என்றால்—இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது—கர்ப்பாசயமானது சுபாவமாகவே கொடிய கோளாறுகளுக்கு எளிதில் வசப்படக்கூடியதா யிருக்கிறது; ஏனெனில், ஸாதாரணமாக கர்ப்பாசயத்தினுட் புறத்தைக் கவிந்திருக்கும் கலைகளில் அல்லது கண்ணறை தாதுக்களில் (Cellular elements) நடுப்பிராயத்தில் பலவிதமான மாறுதல்கள் ஏற்படுகின்றன. இரண்டாவது—இன்றைக்கும் அநேகம் ஸ்த்ரீகள், ஸங்கோசம் அல்லது இலஜ்ஜை யென்கிற ஒரு வீண் வியாஜத்தைக் கருதி, வியாதி முதிர்ந்து அஸாத்திய நிலைமைக்கு வருகிறவரையில் வைத்தியரிடம் தன் கோளாறைக் குறித்துப் பரீக்ஷித்து அதற்கு ஏற்ற பரிஹாரம் செய்து கொள்ள முயலாமலே இருந்து விடுகின்றனர்.

சிகித்ஸை செய்வதில் சில காலம் தாமதம்

செய்வதால் நேரிடும் பலன் இன்னதென்பதைச் சற்று இங்கு விசாரிப்போம். ஒரு ஸ்த்ரீக்கு சில வியாதிக் குறிகள் தோன்றியிருப்பதாக நாம் நினைத்துக் கொள்வோம்; அக்குறிகள், கடுமையான சில துர்மாம்ஸ வளர்ச்சியை கர்ப்பாசயத்தில் விளைவிக்கக்கூடிய நிலைமையைக் கொண்டுவிடுவதாகவும் கருதுவோம். இக் குறிகளால் தினசரி க்ருத்யங்களைச் செய்வதற்கு இடையூறான நிலைமை தேஹத்தில் ஸம்பவியாதவரையில், வைத்தியரிடம் சென்று அவரது யோசனையைத் தெரிந்து கொள்வதற்காக முயலும் விஷயத்தில் பிணியாளி அச்சங்கொண்டு, தனக்குண்டாயுள்ள கோளாறுகளை அலக்ஷியம் செய்துவருவது வழக்கம். இதற்கிடையில், அந்த ஸ்த்ரீ பலவிதமான சில்லரை அசௌக்கியங்களை அனுபவிக்கிறாள்; தேஹத்தில் ஒவ்வொரு ஸமயத்தில் உளைத்தலும், அதுபற்றி பல ஸமயங்களில் மனோவேதனையும் காணும்; கடுமையான வேதனைகளை காலக்கிரமத்தில் அனுபவிக்க நேரிடும். கடைசியாக, இனி நோவைப் பொறுத்துக் கொண்டு பிழைத்திருக்க ஸாத்தியமில்லை யென்று தோன்றக்கூடிய ஸ்திதி வரும்போது, வைத்திய உதவியைத் தேட அவள் ஓடுகிறாள். இதற்குள்ளாக, அச்சதை வளர்ச்சி அஸாத்தியமென்று தீர்மானிக்க வேண்டியதாய் விடும்படி அவ்வளவு பெரிதாக வளர்ந்து விடுகிறது; அல்லது கர்ப்பாசயத்திற் பெரும்பான்மையான பாகத்தைச் சிதைத்து சஸ்திர சிகித்ஸையினால் விலக்கிப்போட வேண்டிய நிலைமையையாவது பெற்று விடுகிறது; அப்படிச் சிதைத்துத் தள்ளிய பிறகுகூட, சிலகாலம் கழித்து மறுமுறை அச்சதை வளர்ச்சி அவ்விடத்தில் ஏற்பட்டாலும் ஏற்படும். இது நிற்க, இந்த ஸ்த்ரீயே வியாதிக்குறி தோன்றியவுடனே வைத்திய உதவியைப் பெற்றுவிட்டதாகக் கருதுவோம்; அப்படியானால், பிறகு நேரிடக்கூடிய எல்லா நோய்களும், மனத் தொல்லைகளும் அனுபவிக்கப் படாமற்போவது ஒரு பெருத்த இலாபம்; வியாதி எளிதில்—அவயவத்திற்கு அதிக சேதமில்லாமல்—நிவ்ருத்திக்கப்படு மென்பது மற்றொரு இலாபம்; வல்மீக மென்கிற இச்சதை வளர்ச்சி பற்றறவே ஒழிக்கப்பட்டு, மீண்டும் உண்டாக வழி யில்லாமற் செய்துவிடுவதற்கு ஸௌகர்யம் ஏறபடுவது மூன்றாவது இலாபம்; ஆரம்பத்திலேயே வியாதியை யொழிப்பதால் திரவ்யமும் மிக்க மிதமாகச் செலவாவது நான்காவது இலாபம்.

இவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளாத அநேகம் ஸ்த்ரீகள் வருஷந்தோறும், வீணில் தமது உயிரை மாய்த்துக் கொண்டு, ஒரு சொற்ப காரணத்திற்காகத் தமது குடும்பத்திற்கு அநேக விதமான தொல்லையை விளைவித்துப் போகிறார்கள் என்பது எவ்வளவு விஸனகரமான விஷயமோ யோசித்துப் பாருங்கள். ஏதேனும் வியாதிக்குறி இரண்டொன்று தோன்றியதும், தகுந்த வைத்தியரிடம் சென்று பரிசோதனை செய்துகொண்ட பிறகு, வல்மீக வியாதி யில்லையென்றும், அக்குறிகள் வேறொரு ஸாதாரணமான தேஹக்கோளாறின் குறிகளே யன்றி வேறல்லவென்றும் தீர்மானமாக வைத்தியர் தெரிந்து சொல்லி விட்டால், அப்பொழுதும் வல்மீக வியாதி யுண்டாய்விடுமோ வென்றிருந்த மனத்தொல்லை யொழிந்து மனதுக்கு அமைதி யேற்படுவதும் ஒரு விசேஷ இலாபமாகும்.

தேஹத்தில் எப்பொழுதுமே, இயற்கைக்கு மாறான ஏதேனும் குறி தோன்றியவுடனே ஸாதாரணமாய் எல்லா வியாதிக்குமே, விசேஷமாக இவ்வல்மீக வியாதிக்குச் சிறிதும் தாமதம் செய்யாமல் தக்க பரிஹாரம் தேடிக் கொள்ள முயலவேண்டு மென்று பல வைத்திய சாஸ்திரஞ்ஞர் கூறியிருப்பதை வாசகநேயர்கள் நினைப்பில் வைக்க வேண்டுமென்று நானும் இங்கு வற்புறுத்தி யெழுதுகிறேன்.



## Prevention and Treatment of Constipation.

### மலபந்தத்தைத் தடுப்பதும் சிகித்ஸிப்பதும்.

BY G. KANNUSAMI VAIDYAR.

மனுஷ்ய தேஹத்திலுண்டாகும் பழையனவும் புதியனவுமான பல ரோகங்களுக்கும் காரண பூதமாயிருப்பது மலபந்தம். இந்த மலபந்தத்தை நிவாரணம் செய்யவும் தடுக்கவும் ஒவ்வொருவரும் கவனம் செலுத்திவர வேண்டும். மலபந்தத்தினால் நேரிடும் ரோகங்களை யெல்லாம் ஒன்று விடாமற் குறிப்பிடுவது கஷ்டம். ஆகிலும் சிலவற்றைச் சொல்லுகிறேன்; அஜீர்ணம், குடல்வாயு, வயிற்றுவலி, குன்ம ரோகம், அண்டவாயு, விஷஜ்வரங்கள், கீல்வாயு, இருதய ரோகம், மூலம், அதிஸாரம், சீதபேதி, மூத்திரஸம்பந்தமான சில வியாதிகள், பவுத்திரம் என்னும் பகந்தரம், உந்மாதம் என்னும் பித்து, பார்ச்வவாயு, சுக்ர தோஷம், கர்ப்பாசய ஸம்பந்தமான கோளாறுகள், சோகை, பாண்டு, பலவித சர்மரோகங்கள் முதலியன. ஆகையால் மலபந்தம் ஏற்படாவண்ணம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது அவசியம். ஆனால் இதற்காக அடிக்கடியும் வாந்தி வெகுட்டல் முதலிய தொந்தரவைக் கொடுத்துக் கொண்டு அஸாத்தியமாய் பேதியாகும் மருந்து வகைகளைச் சாப்பிடலாகாது. கிரமமாய் குடலிலிருந்து மலம் காலையில் அல்லது மாலையில் (அவசியமானால் இரண்டு வேளையிலும்) கழியக்கூடிய ஸதாரண ஆஹாரங்களை உட்கொண்டு வருவதுதான் உத்தமம். அதிகாலையில், எழுந்தவுடனே சுத்தமான கிணற்று நீரையாவது நீராஹாரத்தையாவது வேண்டியவளவு சாப்பிடுவதால் மலபந்தம் நீங்கக்கூடும்.

நிலாவாரை, கடுக்காய்த்தூள் முதலியவைகளை உணவுடன் சிறிதளவுசேர்த்துச் சாப்பிடுவது நலம். நன்றாகக் காய்ச்சிய பசும் பாலில் சிறிதளவு ஆமணக் கெண்ணெயைச் சேர்த்து இரவில் போஜனத்திற்குச் சிறிது நேரம் பின்னால் குடிப்பதும் நல்ல பயனைத் தரும். மேலும் பிஞ்சுக்கடுக்காய் அல்லது மஞ்சட்கடுக்காயை எலுமிச்சம்பழரஸத்தில் ஊறவைக்கவும்; அதில் சிறிது உப்பையும் கூட்டவும். பிறகு அதை உலர்த்தி ஊறுகாயைப்போல் பக்குவம் செய்து வைத்துக்கொண்டு, மாலை நேரங்களில் போஜனத்துக்கு முந்தியோ அல்லது பிந்தியோ உபயோகித்து வந்தால் மலபந்தம் நிவ்ருத்தியாகும்; இரத்தமும் சுத்தியடையும்; இதையே நீடித்து உபயோகித்து வந்தால் மலபந்தம் பற்றறவே தீர்ந்து, அதனால் ஏற்படக்கூடிய வேறு பலவித ரோகங்களும் தடுக்கப்பட்டுப் போம். ஜீவசக்தியையும் இது கிரமமாகப் பெருக்கும். உணவும் இதனுபயோகத்தினால் நன்றாக ஜீர்ணமாகும். தவிரவும் கடுக்காயை லேஹ்யமாகவும், வடகமாகவும், துவையலாகவும், மற்றும் தகுந்த முறைகளாகவும்பக்குவம் செய்துவைத்துக்கொண்டு உபயோகிக்க (முக்கியமாய் இரவு நேரத்திலுபயோகிக்க) மலம் காலையில் தாராளமாகக் கழிந்து, அதனால் பிறகு உண்டாகக் கூடிய துன்பங்கள் தடுக்கப்பட்டும் போகும்.

---

## THE RESEARCH COMMITTEE.

### ஆயுர்வேத பரிசீலனைக் கமிட்டி.

ஆயுர்வேத வைத்திய முறையை அங்கீகரித்து ஆதரிக்கும் விஷயமாய் இந்த மாகாணத்தில் பின்பற்ற வேண்டிய வழிகள் எவை யென்று கவர்ன்மெண்டார் அறிய விரும்புகிறார்கள். இவ்வைத்திய முறையில் வியாபகராயிருப்பவர்களை விசாரித்துத் தகவல்களை அறிந்துகொள்வதற்காக ஒரு கமிட்டியை நியமிக்க கவர்ன்மெண்டார் தீர்மானித்தார்கள். உத்தியோகப் பற்றில்லாத கனவான்களைக் கொண்டே இக்கமிட்டி அமைக்கப்படும், கமிட்டியார் ஆயுர்வேத முறையைப் பரிசீலனை செய்வதற்கு எவ்வெவ்வழிகளை அநுஸரிக்க வேண்டுமென்பதற்குப் பூர்வாங்கமாயுள்ள சில வேலைகளைத் திட்டப்படுத்துவதற்காக முதலில் கான் பஹதூர் முகம்மத் உஸ்மான் ஸாஹெப் அவர்களை அக்கமிட்டியின் அக்கிராஸநாதிபதியாகவும், ஸ்ரீமான் ஜி. ஸ்ரீநிவாஸமூர்த்தி யென்பவரை காரியதர்சியாகவும் கவர்ன்மெண்டார் நியமித்திருக்கிறார்கள். இந்தக்கமிட்டி எப்பொழுது வேலை செய்யத் துவக்குமோ தெரியாது. இக்கமிட்டியால் ஏதேனும் தேசத்திற்கு நன்மையுண்டாகுமென்பதிலும் நமக்கு நம்பிக்கையில்லை.

வைத்திய கலாநிதி
துன்மதி௵ ஆனி-ஆடி-ஆவணி௴

## MEDICINE IN INDIA.

### இந்தியாவில் வைத்திய முறை.

இந்திய வைத்திய முறைக்குள்ள சிறப்பைப் பற்றி மேனாட்டு வைத்தியன் ஒருவன் புகழ்ந்தால், அப்பொழுதுதான் இந்தியர்களிலும் பலருக்கு அதில் விசேஷ விச்வாஸம் உதிக்கின்றது. கற்றறிந்து நாகரிகமாக வாழும் இந்தியர்களிற் பலர் ஆங்கில வைத்தியர்களிடம் சிகித்ஸைக்குச் செல்லும் வழக்கத்தை விட்டுவிட முடியாதவர்களா யிருப்பினும், ஒவ்வொரு ஸமயத்தில் அவர்களுள் சிலரேனும், மேனாட்டு வைத்திய முறையிற் பயின்றவரின் சொற்களைக் கேட்ட் பின்பாவது, இந்திய வைத்திய முறையை வாய் மொழியினாலாவது ஆதரிப்பதைக் கண்டு நாம் ஒருவாறு ஆறுதலடைகிறோம். அவர்களுள் ஸோஷல் ரீபார்மர் பத்திரிகையின் ஆசிரியரைப்பற்றி நாம் இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. அவர் தமது ரீபார்மர் பத்திரிகையில் எழுதியிருக்கும் தலையங்கத்தின் ஸாரம்சம் சிலவற்றை இதனடியில் பெயர்த்துப் பிரசுரம் செய்கிறோம்:—

இந்துக்களுடைய வைத்திய முறையைப் பற்றி மேனாட்டு வைத்தியர்கள் புகழ்வதை நாம் எப்பொழுதேனும் அபூர்வமாகத்தான் கேள்விப்படுகிறோம். ஆயுர்வேத - யூனானி முறைகளைப்பற்றி காலஞ்சென்ற ஸர் பர்டேலூகிஸ் என்கிற வைத்திய வித்வான் அவ்விதம் சிலாகித்த விஷயம் ஒன்றுதான் நாம் இதுவரையில் முக்கியமாகக் குறிப்பிடக்கூடியதாயிருந்தது. இப்பொழுது டாக்டர் ஸிஸில் வெப்-ஜான்ஸன் (Dr. Cecil Webb-johnson) என்பவர் 'ஈஸ்டு இந்தியா அஸோஸியேஷன்' முன்னிலையில் "இந்தியாவில் வைத்தியமுறை" என்னும் விஷயமாகச் சிறந்த வியாஸமொன்று படித்தார். அவ்வியாஸத்தின் பெரும் பகுதியில் இந்துக்களுடைய வைத்திய முறையைப் பரிசீலனம் செய்த விஷயத்தை அவர் நன்கு விளக்கியிருக்கிறார். "பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கற்பிக்கப்பட்டுவந்த இந்துக்களுடைய வைத்திய முறையிலடங்கிய கோட்பாடுகள் வெகு நேர்மையானவை; இன்றைக்கும் சில பெரிய ஸமூஹத்தாரின் நன்மைக்காக அனுபவத்தில் உபயோகக்கிரமத்தில் அம்முறை இருந்து வருகிறது" என்று அவர் கூறுகிறார். இப்பொழுது கவர்ன்மெண்டினால் ஆதரிக்கப்பட்டுவரும் மேனாட்டு வைத்திய முறைக்கு இந்தியர்கள் அவ்வளவு அனுகூலமாயில்லையென்றே சொல்லவேண்டும்; ஏனெனில், இம்மேனாட்டு முறை தேச விசேஷங்களின் பாகுபாடுகளையாவது, கற்பனா பேதங்களையாவது, தலைமுறை தத்துவமாய் அனுபவத்தில் வந்துள்ள வழிகளையாவது அனுஸரித்ததாயில்லை; மேலும் அநேக நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து ஜனங்கள் உபயோகித்து வருகிற, இன்றைக்கும் இத்தேசத்தில் அனுபவத்தில் இருந்து வருகிற இந்திய வைத்திய முறையை மேனாட்டுவைத்தியம் அடியோடு அலக்ஷியம் செய்து வருகிறது. ஒழுங்காகவும், பரிமாணமுறையில் சீர்திருந்தியதாகவுமுள்ள (systematised and standardised) மேனாட்டு வைத்தியம் இந்தியாவிலும் பிரயோகிக்கப்பட்டதைப்பற்றி நமக்கு ஸந்தோஷமே; ஆனால் இந்திய வைத்திய முறையை ஆராய்ந்தறிந்து அதிலிருந்தும் நல்ல விஷயத்தை கிரஹித்துக் கொள்வது அவசியம்; இந்திய மக்களுக்கு எது சுபாவமாகவே உபயோகமுள்ளதென்று தோன்றுகிறதோ அதனை யேற்றுக் கொள்வதில் தடையொன்றும் இருக்கக்கூடாது. இந்திய வைத்திய முறையைக் கற்றுப் பரிசீலனை செய்ய இதுவரையிலுமே சில முயற்சிகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பண்டைக் காலத்திய முறைகளைப் பரிசீலனை செய்யும் சலவுக்கென்று சிறிது தொகை ஒதுக்கி [illegible]க்கப்படும் விஷயமாய் சில சட்ட ஸபைகளில் சொற்ப முயற்சிகள் செய்யப்பட்டது வாஸ்தவமாயினும், பிறகு பயன் தரத்தக்கதாகப் பெரு முயற்சி யேதும் செய்யப்படவில்லை. மேலும் உஷ்ணாந்த ரேகையிலுள்ள பூப்பிரதேசத்தில் சூரிய கிரணம் சிறந்த இரஸாயனச் செயல்களுக்கு அனுகூலமான உஷ்ணத்தைத் தந்து எப்பொழுதுமே இயற்கையில் வேலை செய்துவரவே, ஓஷதிகளெல்லாம் வெகு மிதமான உஷ்ணகுணமுள்ள மற்றப் பிரதேசங்களிலிருப்பவைகளைவிட மேலான ஸத்துள்ளவைகளாகவும், ஆகவே குணத்தில் விசேஷச் சிறப்புள்ளவைகளாகவும் இருந்து வருகின்றன. தனது கடுஞ்சூடான கிரணங்களைப் பரப்பி, அவற்றின் வீர்யத்தினால் மூலிகைகளுக்கு எப்பொழுதுமே குணவிசேஷங்களையுற்பத்தி செய்வதினால், அம்மூலிகைகளைக் கொண்டு, ஸாஸ்திரஞ்ஞர் செய்யும் ஔஷத பாகங்களும் குணத்தில் மேன்மையுற்றனவாகும் டாக்டர் வெப்-ஜான்ஸன் அடியில் வருமாறு பின்னும் கூறுகிறார்:—

"இந்து வைத்தியர்கள் ருதுக்களுடைய சுபாவ சக்திகளைப்பற்றி விசேஷமாகப் படித்துத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; அங்ஙனமே சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஓஷதிகளின் மீதுள்ள நாட்டத்தையும், அதனால், ஓஷதிகளுக் கேற்படும் குணவிசேஷங்களையும் அவ்வைத்தியர்கள் கற்றுணர்ந்திருக்கிறார்கள்; எந்தெந்த ஓஷதிகள் எந்தெந்த காலங்களில் முளைத்துப் பயிராகின்றனவென்பதையும், அவற்றைச் சேகரித்து வைப்பதற்கேற்ற காலங்கள் இவையென்பதையும் அவர்கள் அறிவார்கள். ஓஷதிகளிலிருந்து ஸ்வரஸம் பிழிந்து உபயோகிக்கையில், அவற்றை வீர்யத்தில் உஷ்ணமென்றும் சீதமென்றும் அவர்கள் பகுத்து விவஹரிக்கிறார்கள்; சூர்யனுடைய வீர்யம் எவற்றில்விசேஷமாக ஊடுறுவி நிற்குமோ அவை உஷ்ண வீர்யமென்றும், சந்திரனுடைய வீர்யம் எவற்றிலுண்டோ அவற்றைச் சீதவீர்யமென்றும் பகுத்துக் கூறுகிறார்கள். உஷ்ண-சீதவீர்யங்களைப்பற்றி க்ரீக் தேசத்துப் புராதன வைத்தியரான காலென் (Galen) என்பவரது கோட்பாடும் இவ்விதமானதே. ஜனவரியிலிருந்து ஜூன்வரையிலும் (உத்தராயணத்தில்) சூர்யனுடைய உஷ்ணமான கிரணங்கள் பூஸாரங்களை ஆகர்ஷணம் செய்வதும், ஜூன் முதல் டிசம்பர் வரையில் (தக்ஷிணாயனத்தில்) சூர்யகிரணங்கள் ஒருவாறு குளிர்ந்து மழை, பனி ரூபமாகவும் வேறுவித ஸத்துவாம்சங்களாகவும் பூமியிலுள்ள ஓஷதிகளுக்கு வீர்யங்களைப் பொழிவதும் இயல்பென்பது அவ்வைத்தியர்களின் கொள்கை. இந்தியாவில் சந்திரனுடைய கிரணங்களுக்குள்ள சக்தி வெகு பலமானது; ஆகவே அக்கிரணங்கள் அத்தேசத்திய ஓஷதிகளிடம் விசேஷ ஸத்துவத்தைப் புகட்டக் கூடியவைகளாயிருக்கின்றன. இந்தியாவில் மூலிகைகள் வீர்யம் நிரம்பி செழித்து வளர்வதற்கு இது ஒரு முக்கிய முகாந்தரம்."

உபயோகமுள்ள வழியில் முயற்சி செய்து ஏதேனும் சிறந்த காரியத்தைச் செய்து முடிப்பதற்கு முன்பு, முதலில் மூடத்தனமாகச் செய்யப்படும் சிலரது வைத்தியத்தொழிலை, ஒருவாறு நிவாரணம் செய்யவேண்டும். சிலர் அரைகுறையாக வைத்தியம் தெரிந்தவராயிருக்கின்றனர்; அதற்குத் தலைமுறை தத்துவமாய் தோன்றியவாறு வைத்தியம் செய்து வருவதாகும் குறையும், தகுந்த பயிற்சியின்மையும், ஒழுங்காக வேலை செய்யத் தெரியாமையுமே காரணமாகும். ஆகவே இவ்வைத்திய முறையை நல்லெண்ணத்துடன் பரிசீலனை செய்தால் இச்சாஸ்திரம் மீண்டும் மேன்மையுற வகையுண்டு; மூலிகைகளுக்குள்ள ஔஷதகுணங்களையும், அவற்றில் சேர்ந்துள்ள உபயோககரமான பலவேறு சேர்மான

திகளையும் கண்டுபிடித்து, இவ்வைத்திய முறையைச் சீர்திருத்தி புநருத்தாரணம் செய்யவேண்டும். சஸ்திரசிகித்சை விஷயத்திலும் நமது பிராசீன வைத்திய சாஸ்த்ரிகள் அறிவில்லாதவராக யிருந்திருக்கவில்லை; அவர்களுக்கு இதில் அறிவும் அத்துடன் விசேஷ அநுபவமும் ஏற்பட்டிருந்தது; ஸுச்ருதர் என்பவர் சஸ்திர சிகித்சைக்கு ஆதியில் ஏற்பட்ட சிறந்த அதிகாரி யென்றும் கருதப்படுகிறது.

வைத்திய சாஸ்திரத்திற்கு ஸம்பந்தப்பட்ட வேறு சில சாகைகளையும் கவனிப்போம். நமது சாஸ்திரங்களில் கூறப்பட்டும் அநுபவத்தில் இருந்து வருபவையுமான சுகாதார முறைக்கு ஸம்பந்தப்பட்ட தத்துவங்கள் பாராட்டக்கூடியன. வியாயாமக் கிரமமென்ன, பிராணாயாமம் என்கிற ச்வாஸ வியாமமென்ன, மர்த்தநக்கிரியையென்ன, ஸ்நேஹ கர்மம் என்கிற தைல லேபநத்தினால் தேஹத்தை ஸம்ஸ்கரிப்பதென்ன, பாதங்களுக்குத் தைல மிடுவதென்ன, பற்களையும் வாயையும் சுத்தம் செய்யுமுறையென்ன, ஏதேனும் சாப்பிட்ட பிறகு வாயைக் கழுவுவதென்ன ஆக இத்யாதி கிரமங்கள் பண்டைக்கால முதல் இன்றைக்கும் ஆங்காங்கு அநுஷ்டாநத்தில் இருந்துவருவதைப் பார்த்து நாம் சிறிதுஆறுதலடைகிறோம். ஜலக்கரைகளிலாவது ஜலத்திலாவது துப்பியும் அழுக்குகளைத் தோய்த்தும் அவற்றை அசுத்தமாக்கக் கூடாதென்பதற்கு கண்டிப்பான நியமங்கள் நமது சாஸ்திரத்தில் ஏற்பட்டிருக்கின்றன; ஆனால் இக்காலத்தில் நமது ஜனங்கள் அந்த நியமங்களை அலக்ஷியம் செய்து பானம் செய்வதற்குப் பிரயோகமான ஜலத்தில் ஸ்நாநம் செய்தும், எச்சிலைத் துப்பியும் அசுத்தம் செய்வதை நாம் பார்த்துவருகிறோம்; குளக்கரை முதலியதை மல-ஜல விஸர்க்கங்களுக்கு ஏற்ற ஸ்தலமாகக் கருதி அவிவேகத்தினால் அசுத்தமாக்குகிறார்கள். ஈ, கொசு, குளவி, எலி, மூட்டைப்பூச்சி இவை முதலிய ஜந்துக்கள் உஷ்ணபூமியான இத்தேசத்தில் வியாதிகளைப் பரப்புவதற்கு முக்கிய முகாந்தரங்களா யிருக்கின்றன வென்பதை யறிந்து, அவற்றால் நமது ஆரோக்கிய நிலைமைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் படித்த வகுப்பினரில் கூட வெகு சிலரே சிரத்தையுடன் பிரவ்ருத்திப்பவராயிருக்கின்றனர். மநு ஸ்ம்ருதியில் சுகாதார விஷயமாகக் கூறப்பட்டுள்ள விதிகள் கண்டிப்பாக அநுஸரிக்கப்படுவதில்லை. அம்முறைகளையெல்லாம் சரிவரவே பின்பற்றி நமது ஜனங்கள் நடந்து வருவார்களானால், தேசத்தின் சுகாதார நிலைமை மிகவும் சிலாகிக்கத் தகுந்ததாய்விடும். ஸாதாரணமாகவே இந்தியர்களுக்கு நகரவாஸம் மிகவும் புதிதாக ஏற்பட்டதாகும்; அதற்கிணங்க அவர்கள் தமது மனப்போக்கையும் மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. அழுக்கடைந்த (அசுத்தமான) தண்ணீரில் அடிக்கடியும் முழுகுவதால் தேஹாரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. கிராமவாஸம் செய்பவர் நகரத்தில் வாஸம் செய்யநேரிட்ட பிறகு, அவ்விடத்திற் குழாய்களில் வரும் மிக்க நிர்மலமானதும், தாராளமானதுமான ஜலத்தை யுபயோகிக்க ஆரம்பிக்கையில், அவன் ஒருவாறு பட்டணவாஸத்தைப் புகழ நேரிடுகிறது. இந்தியாவில் இது விஷயம் இப்படியிருக்க, மேனாடுகளில் நகரவாஸம் இவ்விதமாயிருக்குமென்று நமக்கு ஒருவாறு தெரியவந்தாலும் அவ்விடங்களிலுள்ள கிராமங்களில் ஜலாதாரங்களுக்கு ஜனங்கள் என்ன ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களென்று, அவ்விடங்களிலிருந்து திரும்பிவருகிறவர்கள் நமக்கு நன்றாகச் சொல்லுவதில்லை. மேனாடுகளில் கிராம வாஸிகளின் சுகாதாரமுறை எத்தகையதென்று நாம் நன்கு அறிந்து கொள்ளமுடியவில்லை.

(இந்திய வைத்திய நூல்களில் தினசர்யை-ருதுசர்யை முதலியவைகளை விவரிக்கும் பிரகரணங்களும், இத்தேசத்திய தர்ம சாஸ்திரங்களில் ஆஹ்நிக க்ருத்யங்கள் முதலியவற்றைக் கூறும் பாகங்களும், இந்நாட்டில் பண்டைக்காலமுதல் அநுஷ்டாநத்தில் இருந்துவரும் வைதிகாசார கிரமங்களும் இந்தியாவில் கிராமாந்தரங்களிலாகட்டும் நகரங்களிலாகட்டும் சுகாதார முறைகள் வெகு திருப்திகரமான சீர்பாடுள்ளவைகளா யிருந்தன வென்பதை விளக்குகின்றன; நாகரிகம் மேலிட்டதாகக் கூறப்படும் இந்நாட்களிலும் மேனாடுகளில் கிராம சுகாதாரமுறை, நமது பிராசீன சுகாதாரக் கோட்பாடுகளிலும் தாழ்ந்த நிலைமையில்தான் இருக்கின்றதென்பதை ஸோஷல் ரீபார்மர் நன்குணரவில்லை போலும்.)

டாக்டர் வெப் ஜான்ஸன், அவரது வியாஸத்தின் பிற்பகுதியில் இத்தேசத்திய வைத்திய ஸம்பந்தமான அநேக விஷயங்களைப் பற்றி ஆக்ஷேப ஸமாதாநங்களைச் செய்திருக்கிறார். ஆனால் பொதுவாகக் கூறுமிடத்து, வியாஸமானது முற்றிலும் வெகு நேர்மையாகவும், நியாயம் நிரம்பியதாகவும், மித்வாதம் செய்வதாகவும் அமைந்துள்ளது.

---

## THE FLY-A DISEASE CARRIER.

### வியாதியைப் பரவச் செய்யும் ஈ.

கோடையில், மற்றும் உஷ்ணம் அதிகரித்துள்ள காலங்களில் ஈ விருத்தியாய் எங்கும் வியாபிப்பது வழக்கம். கோடை காலத்தில்—பொதுவாக உஷ்ணமதிகரித்த ஸமயங்களில்—சில குறிப்பிட்ட வியாதிகள் விசேஷமாய் பரவுவதையும் நாம் கவனித்து வருகிறோம். அங்ஙனம் சில வியாதிகள் உஷ்ண காலங்களில் அதிகரிப்பது, ஈக்கள் அந்த வியாதிகளுக்குக் காரணமான தோஷங்களைப் பரவச் செய்வதாலேயே யென்பதை பல வைத்திய நிபுணர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

வியாதியை வெல்லுவதற்கு, வியாதி வந்த பிறகு சிகித்ஸை செய்வதைவிட, அதை வரவிடாமல் தடுப்பதில் முன் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்வதே மிகவும் புத்திசாலித்தனமும் மிகவும் பிரயோஜனகரமுமான முறையாகும். மேலும் "ஒரு பலம் ஆரோக்கிய பரிபாலநம் ஒரு வீசை சிகித்ஸைக்கு ஸமானமானது" என்றவாறு மேனாட்டார் கூறும் மிகப் பழைய பழமொழி இச்சந்தர்ப்பத்தில் நாம் குறிப்பிடக்கூடிய சிறந்த பிரமாண மொழியாகும். வியாதியைத் தடுப்பதென்கிற காரியம் ஒவ்வொருவராலும் எளிதில் அநுஷ்டிக்கக்கூடியதே; இதற்கு விசேஷ வைத்திய சாஸ்திரப் பயிற்சி அவசியமில்லை; இதற்காகச் செலவு அதிகமாய் செய்யவேண்டி யிருக்குமென்று யோசிக்கவேண்டிய விஷயமும் ஒன்றுமில்லை.

வியாதிகளை, முக்கியமாக உஷ்ணகால வியாதிகளைப் பரவச் செய்வதற்கு ஏற்பட்டுள்ள பிரதாந ஸாதநங்களுள் ஈயும் ஒன்று. வீடுகளில் வெகு ஸாதாரணமாகப் பறந்துகொண்டிருக்கும் இந்த எளிய ஜந்துவை நுட்பமாகப் பரிசோதித்துப் பார்த்தால் இதனுடம்பின் மீது தடித்துச் சிலிர்த்துக் கொண்டுள்ள மயிர்கள் அடர்ந்திருக்கக் காணலாம். அதிலும் விசேஷமாக இதன் கால்களில்தான் அவ்வித மயிர்கள் வெகு கனமாக முளைத்திருக்கும். இதன் சின்னஞ் சிறிய பாதங்கள் மயிர்கள் அடர்ந்து மெத்தையைப்போன்றிருப்பதால், மிருதுவாகவும் ஈரமாகவு முள்ள எந்த வஸ்துவின் மீது இது உட்கார்ந்தபோதிலும், அவ்வஸ்துக்கள் இதன் பாதங்களில் ஒட்டிக் கொள்கின்றன.

ஈயின் பழக்கத்தைக் கவனித்தோமானால், அதை நாம் வெகு தூரத்தில் விலக்கவேணுமென்று நிச்சயமாய் எண்ணுவோம். அதற்கு ஒவ்வொரு வஸ்துவினிடமுள்ள விருப்பத்தை நோக்குங்கால், அதைப் பார்க்கும்போது நாம் அடக்கமுடியாத அருவருப்பு கொள்ளவேண்டிவருகிறது. துர்க்கந்தமான கச்மலங்கள் அதற்கு விருந்துணவாம். எங்கெங்கே கச்மலம், அழுகிப் பதன் கெடும் பொருள், வியாதிகொண்டு கெட்டுப்போன தாது இவற்றின் நாற்றம் கிளம்புகிறதோ அங்கங்கே ஈ ஆவலுடன் ஓடி மொய்த்துக் கொள்ளும். வியாதி கொண்டவர் துப்பும் எச்சில் அல்லது கோழை யென்

வைத்திய கலாநிதி. [துன்மதி௵ ஆனி-ஆடி-ஆவணி௴

ன, புண்களிலிருந்து வெளியாகும் கசிவுகளென்ன, அழுகிக் கெடும் இதர மலாதிகளென்ன இவற்றின் மீது ஸந்தோஷமாய் உட்கார்ந்து நடமாடுவதும், அவற்றை உறிஞ்சுவதும் ஈக்கு வெகு இன்பமாயிருக்கும். அதற்கு மிகவும் உவப்பாயுள்ள இவ்வஸ்துக்களின்மீது ழுன்று இவற்றை வயிறுற உண்ட பிறகு, ழுடுத்தாற்போல இது உட்கார்ந்து சிரமபரிஹாரம் செய்வதற்கு அனுகூலமாக உபயோகமாகும் இடம் நீங்கள் புஜிக்கும் உணவுகள், ங்களுக்கு உணவுகளைப் பரிமாறுவதற்கு உபயோகிக்கப்படும் கரண்டி முதலிய பாத்திரங்கள், குழந்தைகளுக்குப் பாலூட்டும் பாலாடை முதலிய கருவிகள், உங்களுடைய கலத்தில் உரிந்து வைத்துள்ள கனிகள் முதலியவைகளேயாம். அதற்கு முழுக வேண்டுமென்று தோன்றினால், உனது பால் கலத்தில் குதித்து ந்தக்கூடும்; அல்லது நீ வைத்துள்ள காப்பி முதலிய பானவகையில் திடீரென்று விழுந்து அது தற்கொலை செய்து கொள்ளலாம்; அன்றேல், வேறு வகையில் அதற்கு முடிவுகாலம் வந்தால், நமது பலஹாரத்திற்கு அல்லது சிற்றுண்டி செய்வதற்கென்று கரைத்து வைத்துள்ள மாப் பண்டம் முதலியதில் நமக்குத் தெரியாமலே வீழ்ந்து அத்துடன் கலந்துபோவதுண்டு. மலங்களைச் சுமக்கும் இச்சிறிய தாட்டி இன்னவிடத்தில்தான் அலைந்து நடாடு மென்றாவது, இறுதியில் இந்தவிதமான காரிய பலனைத்தான் உண்டுபண்ணுகிற தென்றாவது தீர்மானமாக விவரித்துக் கூறிவிட முடியாது; என்றாலும் வியாதிக்கிருமிகள் அடர்ந்துள்ள கெட்ட மலாதிகளில் சேர்ந்து அக்கிருமிகளை தாராளமாய் நாலாப்பக்கங்களிலும் பரப்பும் வேலையை இந்த ஜந்து வெகு நன்றாகச்செய்து வருகிறது.

துப்பப்பட்ட எச்சிலென்ன, தோழத்திலுள்ள எருவென்ன, சில நாட்கள் அழுகிப் போகும்படி எறியப்பட்டுள்ள மற்ற மலின வஸ்து வென்ன இவைபோன்ற பதார்த்தங்களைத் தின்று ஈ பிழைத்துவருகிறது. இது அத்தகைய குப்பை அழுக்குகளிலேயே முட்டையிடுகிறது. இந்த முட்டைகள் வெகு சொற்ப காலத்திலேயே பெரிய ஈக்களாக ஆய்விடுவதை நீங்கள் கவனித்து வந்தால் அது உங்களுக்கு ஆச்சரியமாகத் தோற்றும். இங்கிலாந்தில் சுகாதார இலாகாவின் மந்த்ரிமார் ஈக்களை அழித்து ஜனங்களுடைய ஆரோக்கிய நிலைமையை அதிக ஒழுங்குக்குக் கொண்டுவர இப்பொழுது பலமான முயற்சி செய்து வருகிறார்கள். ஈ, பல பெருவாரி வியாதிகள் பரவுவதற்கு ஒரு முக்கிய ஸாதகமா யிருக்கிறன்றதென்பதைப் பிரத்தியக்ஷ பரிசோதனைகளால் தெரிந்து கொண்டு, அவ்விலாகா அதிகாரிகள் சில முக்கியமான ரிபோர்ட்டுகளையும் பிரசுரித்திருப்பதாகத் தெரிகிறது. அத்தேசத்து சுகாதார அதிகாரிகள் ஈயால் நேரிடும் தீங்குகளைச் சுறுசுறுப்பாக ஜனங்களுக்குப் போதித்து வருவதாகவும் அறிகிறோம்.

நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஈயும் மாடுகள் அல்லது குதிரைகளுடைய மக்கிப் போகிற சாணங்களைத் தின்றுப் பிழைப்பதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு பெண் ஈயும் ஒரு தடவையில் 120 முட்டைகளிடுகின்றன. அந்த முட்டைகள் 30-மணி ஸாவகாசத்திற்குள்ளாகவே சிறிய புழுக்களாகப் பரிணமிக்கின்றன. அப்பால் இரண்டொரு தினங்களில் இப்புழுக்கள் கைகால்களுள்ள வேறொருவகையான புழுக்களாக மாறி, பிறகு சில நாட்களில் ஸாதாரண ஈ ஸ்வரூபத்தைப் பெறுகின்றன.

ஈக்கள் உற்பத்தியாவதைத் தடுக்கவேண்டுமானால், அதற்கேற்ற வழி கழிவுப்பொருட்களை அழுகிப்போகாமல் நன்றாக வுலர்த்திப் போடவேண்டும்; அல்லது ஆழத்தில் புதைத்துவிடவேண்டும்; அல்லது எரித்துவிடவேண்டும்; அன்றேல் தோஷஹர திரவங்களைக் (Disinfectents) கொட்டி முற்றிலும் சுத்தி செய்யவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் அவரவருடைய வீடு வாயில்களில் ஈக்கள் உற்பத்தியாவதற்கு முடியாதபடி செய்து கொண்டீர்களானால், ஊர் முடியவும் ஈக்கள் விருத்தியாக வழியில்லாமல் பொதுஜன ஆரோக்கிய முறை காக்கப்படுவதற்கு அதுவே போதுமான உபாயமாகும்.



உங்களுடைய வீட்டைச் சுற்றிலும் ஈக்கள் வியாபித்திருந்தால், வீட்டு ஜன்னல்களைத் திரைகளிட்டு மூடிவிடவும். அப்பால் வீட்டுக்குள்ளிருக்கும் ஈக்களை அழித்துவிடவோ வெளியில் முடியவும் ஓட்டிவிடவோ வேண்டும். சிறிது ஜாக்கிரதையாயிருக்கச் சோம்பி, இச்சிறிய ஜந்துக்களை—பெரிய தீங்கு விளைவிக்கக்கூடிய பூச்சிகளை—உங்களுடைய வீட்டில் புகவிடுவது யுக்தமல்ல.

---

## RIGISTRATION OF INDIGENOUS MEDICAL PRACTITIONERS.

## தேசீய வைத்தியர்களைப் பதிவு செய்தல்.

ஆங்கில வைத்தியர்களுக்குள் கட்டுப்பாடு உண்டாகவேண்டுமென்பதையும், அவர்களுடைய புரோவ்ருத்தியையும் கருதி 1914-ம் வருஷத்தில் மேனாட்டு வைத்தியங்கற்றவர்களைப் பதிவு செய்வதற்கென்று ஒரு சட்டம் சென்னைச் சட்ட ஸபையாரால் ஏற்படுத்தப் பட்டது. இதற்கான மஸோதா 1913-௵ நவம்பரில் பிரேரேபிக்கப்பட்டது. டாக்டர் நாயர் முன் நின்று பிடிவாதத்துடன் அந்த மஸோதாவைச் சட்டமாக நிறைவேற்றிவைத்தார். ஆயுர்வேத யூனானி வைத்தியர்களுடைய நன்மையின் பொருட்டு அவ்வித மஸோதா அவர்களைப் பதிவு செய்து கொள்ளும் விஷயமாய் பிரத்தியேகமாகக் கொண்டு வந்தால் நலமாயிருக்குமென்று கருதி 1913-ம் வருஷம் டிசம்பர் மாஸத்திய வைத்திய கலாநிதியில் விஸ்தாரமாக ஒரு வியாஸம் எழுதி வெளியிட்டிருக்கிறோம். ஆனால் அது முதல் இவ்விஷயமாய் எவரும் ஒரு முயற்சியும் செய்யவில்லை. இப்பொழுது (செப்டம்பர் 1921 முதலில்) டாக்டர் ஸ்லேட்டர் என்னும் மெம்பர் ஆயுர்வேத-யூனானி வைத்தியர்களைப் பதிவு செய்வதன் ஸம்பந்தமாய் அடியில் வரு மாறு ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்:—

"ஆயுர்வேத-யூனானி வைத்தியர்களைப் பதிவு செய்யவும் அவர்களைக் கொண்டு ஒரு ஸபையை நிர்மிக்கவும், கவர்னர் அந்த ஸபையின் அங்கத்தினராகச் சிலரை நியமிக்கவும், இந்த ஜாப்தாவிற் பதிவாக விரும்புவோர் பெறவேண்டிய கல்வி-பரீக்ஷை முறை முதலியவற்றை ஏற்படுத்தவும், தொழில் முறைக்கு விரோதமாக நடப்பவர்களை ஜாப்தாவிலிருந்து விலக்கவும், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுக்குத் தகுதியான பட்டங்களை அளிக்கவும் ஸௌகர்யம் ஏற்படும் படி சட்டமொன்றை ஏற்படுத்தவேண்டும்." என்பதே தீர்மானம்.

ஆயுர்வேத-யூனானி வைத்தியங்கள் விருத்தியடைவதற்கும், அத்தொழில் புரிபவர் தமது தொழிலை ஒழுங்காக நடத்தி முற்போக்கு பெறுவதற்கும் இத்தீர்மானம் வெகு உடயோககரமானது. இவ்விஷயத்தில் சிரத்தையும், அபிமானமுமுள்ள கனவான் வேறு எவரும் இருப்பதாக நன்கு உணரப்படாத இக்காலத்தில், டாக்டர் ஸ்லேட்டர் அவர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தியது நமக்கு ஸந்தோஷகரமா யிருந்தது. டாக்டர் ஸ்லேட்டர் தமது தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசிய சில வார்த்தைகளையும் நாம் இங்கு குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. "ஆயுர்வேத-யூனானி முறைகளை ஆதரிக்க வேண்டுமென்று இச்சபை தீர்மானம் செய்திருக்கிறது. எந்தெந்த வழிகளில் ஆதரவளிக்கலா மென்பதைக் குறிப்பிட்டே இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆயுர்வேத-யூனானி வைத்தியர்களுக்கு அந்தஸ்தும் திறமையும் ஏற்பட்டு அவர்கள் சீரடைய வேண்டுமென்பதே இத்தீர்மானம் கொண்டு வருவதன் உத்தேசமாகும். வைத்திய வஸதிகளைப் பெருக்குவதால் மரண விகிதங்களைக் குறைக்கலாம். ஆயுர்வேத முறையில் எனக்கு அதிக அனுபவமில்லாத போதிலும், ஆயுர்வேத வைத்தியர்களுடைய யோக்கியதை குறைவாயிருந்து வருவதை நான் விரும்பவில்லை. வைத்திய தொழிலை ஒழுங்கான நிலைமையில் வைக்

ருசிகரமான உயர்ந்த உணவாயிருந்தபோதிலும், அவற்றால் சுகவீனம் நேரிடும்போது அவற்றை உண்பது உசிதமல்ல; ஏனெனில் அவ்வுணவால் நன்மையுண்டாகாது. அது மட்டுமோ! அதனால் உன் குடலுக்கும் பொதுவாக உன் ஆரோக்கியத்துக்கும் தீமையுமுண்டாகும்.

"இதெல்லாம் இருக்கட்டும்; இவ்வித சுகவீனமான நிலைமையில் இனிய வஸ்துக்களும் ஏன் வாய்க்கு நன்றாயிருப்பதில்லை?" என்று நீ கேட்கிறாய். நாக்கின் முனையில்தான் மதுர ரஸத்தை உணரக்கூடிய மர்மங்கள் அமைந்திருக்கின்றன. அசௌக்கிய நிலைமையில் உனது நாக்கின் முனையிலும் மேற்புறத்திலுமுள்ள சுவையுணரும் அந்த மர்மம் சில தோஷங்களால் மறைக்கப்பட்டிருக்கும். நீ அப்பொழுது உணவுண்டால் அந்த உணவைவிட நாக்கின் மேற்புறத்தையும் முனையையும் மறைத்துள்ள அழுக்கையே அம்மர்மங்கள் அதிகமாகத் தொட்டு உணருகின்றன. நாக்கின் முனையிலுள்ள மர்மம் நன்கு வேலை செய்வதில்லை; ஆகையினாலேயே மதுரமான பதார்த்தங்களை உனது நாக்கு முன்போல் தகுந்தவாறு உணர முடியாமலிருந்து விடுகிறது; அதனால் இனிய சுவைகூட நன்றாயிருப்பதில்லை. நாக்கின் இரண்டு பார்ச்வங்களுங்கூட ஒருவாறு சுருசுருப்பற்றுப் போய் அவற்றின் இயற்கை வேலையை போதுமாறு செய்ய முடியாதவைகளாயிருக்கின்றன. அப்பார்ச்வங்களில் தான் இலவணாம்லரஸங்களை யுணரும் மர்மங்கள் இருக்கின்றன. ஆகவே ஒரு உப்பான வஸ்துவை வாயிலிட்டால் அது சுபாவமாய் எவ்வளவு உப்பாயிருக்குமோ அதிற் பாதிதான் உணரப்படும். நாக்கின் பின் புறத்தில் தான் கைப்பான சுவை உணரப்படுவதற்கான மர்மம் அமைந்திருக்கிறது; இந்த பாகந்தான் நீ அசௌக்கியமாயிருக்கையில் வெகு சுறுசுறுப்பாகும்; உன் குடல் கோளாறடைந்திருக்கையில் நாக்கின் பின்புறத்து மர்மமானது இயற்கையினும் இருமடங்கு அதிகமாய் வேலை செய்கிறது; அது அவ்வளவு சுறுசுறுப்பாயிருப்பதால் இனிப்பான வஸ்துவையும் கைப்புபோல் அது உணரச் செய்து, எதையுமே உண்ணமுடியாதபடி அருவருப்பாகச் செய்து விடுகிறது. இந்த நிலைமை உனது பித்தக் கோளாறு நிவ்ருத்தியாய் நாக்கில் படிந்துள்ள அழுக்கும் பற்றறவே நீங்கும் வரையில் நீடித்திருக்கும். இந்த நிலைமையானது நீங்கள் தோன்றியவாறு இனிய தின்பண்டங்களைத் தின்பது சரியல்லவென்றும், ஒருவரும் நாக்கு அழுக்கடைந்திருப்பதை அலக்ஷியம் செய்துவரலாகாதென்றும் உங்களுக்கு அறிவூட்டக் கூடியதாயிருக்கிறது.

---

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### கடிதங்கள்.

#### கலா-ஆஜார்.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு,
அன்பார்ந்த ஐயா,

தாங்கள் பிரசுரித்துவரும் "வைத்திய கலாநிதியை" நான் மிகுந்த ஆவலோடு படித்துவருகிறேன். (a) வைத்திய கலாநிதியின் முதற் புஸ்தகம் 42-ம் பக்கத்தில் கலா-ஆஜார் என்ற விஷம ஜ்வரத்தைப்பற்றி "வரப்போகிற ஸஞ்சிகைகளில் விவரமாய் எழுதுவோம்" என்று குறிப்பிட்டும், நாளது வரையில் அதன் விவரம் ஒன்றையும் காணோம். 8-வது புஸ்தகம் 5-வது பக்கத்தில் "விஷயஜ்வரம்" என்னும் தலையங்கத்தின் கீழ் எழுதிய வியாஸத்தில் "கலா-ஆஜார் என்னும் ஜ்வரத்திலும் ஷை ஔஷதங்கள் விசேஷ குணம் தருபவை" என்று மட்டும் தெரிவித்திருக்கிறீர்கள். மேற்கண்ட ஜ்வரத்தின் உற்பத்தி, வியாபகம், குறி, குணம், செய்கை, சிகித்ஸா கிரமம், அநுபானம், பத்தியம், ஸாத்யாஸாத்யக் குறிகள் இவை முதலிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் தாங்களாவது, நிரூப நண்பர்களில் எவராவது ஷை விஷயங்களுக்கு வைத்தியகலாநிதி மூலமாய் விடையளிக்கக் கோருகிறேன். (b) மேலே கண்ட 8-வது புஸ்தகத்தில் விஷம ஜ்வரம் என்னும் விசேஷ வியாஸத்தில் குறிப்பிட்டுள்ள சீதாம்சுரஸம், ராமபாண ரஸம், தாளகேச்வரம், வாதாக்நிகுமாரம், பஞ்ச திக்தம் ஆகிற இவைகளைச் செய்யும் முறை எந்த ஆயுர்வேதக் கிரந்தத்தில்



மொழியப்பட்டிருக்கின்றன என்கிற விஷயத்தையும் தெரிவித்தால் மிகவும் உபகாரமாயிருக்கும்.

வி. நே. கிருஷ்ண ஸ்வாமி.

விடை:—(a) 1913-ஞு அக்டோபர்மீ வெளியான வைத்திய கலாநிதி 1-வது புஸ்தகம் 2-வது ஸஞ்சிகையில் "சென்னையில் வழக்கமாய் உண்டாகும் சில விஷம ஜ்வரங்கள்" என்கிற வியாஸத்தின் கடைசி பாகத்தில் தாங்கள் கூறுகிற விஷயம் குறிப்பிடப்பட்டிருப்பது வாஸ்தவமே. அந்த வியாஸம் டாக்டர் பி. என். இரங்கஸ்வாமி என்பவரால் எழுதப்பட்டது. அந்த (கலா-ஆஜார் என்கிற) விஷயத்தைப்பற்றி அவர் மறுபடியும் எழுதியனுப்பவில்லை. கலா-ஆஜார் என்கிற வியாதியைப்பற்றிய விவரங்களையெழுதியனுப்பும்படி ஷை டாக்டருக்குத் தெரிவிப்போம். அவரிடமிருந்து வியாஸம் வந்ததும் கலாநிதியில் பிரசுரிக்கப்படும். (b) சீதாம்சுரஸம் என்பது சீதாரிரஸம் என்றும், சீதபஞ்ஜீரஸம் என்றும் கூறப்படுகிறது. சார்ங்கதர ஸம்ஹிதையில் சீதாரிரஸ முறை விவரிக்கப்பட்டிருக்கின்றது. இரஸேந்த்ர ஸாரஸங்க்ரஹத்தில் ராமபாணரஸம் கூறப்படுகிறது. தாளகேச்வரம் இரஸ ரத்நஸமுச்சயத்திலும், வாதாக்நி குமாரம் (அக்நி குமாரம் என்றும் ஸாதாரணமாய் இது வழங்கப்படும்) சிந்தாமணியிலும் விவரிக்கப்படுகின்றன. ப-ர்.

---

#### நரம்புச் சிலந்திக்குப் பரிஹாரம்.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு,
அன்பார்ந்த ஐயா.

தமது பெருமை தங்கிய வைத்திய கலாநிதியைப் படித்துக் கொண்டு வருகிறேன். நான் ஒரு விஷயம் அறிய விரும்புகிறேன். அதாவது:—நாடீவ்ரணம் என்கிற நரம்புச் சிலந்தியால் எனது நண்பர்களில் சிலர் கஷ்டப்படுகிறார்கள். அவ்வியாதிக்கு சிகித்ஸை செய்ய சஸ்திரத்தை யுபயோகித்து நோயாளியை அநேக வைத்தியர்கள் துன்புறுத்துகிறார்கள். இந்த வியாதிக்கு உத்க்ருஷ்டமான சிகித்ஸா முறையேதேனுமிருந்தால் அதை வைத்திய கலாநிதி மூலமாய் பிரசுரித்து உதவி புரியவேணுமாகக் கோருகிறேன்.

காரைக்குடி. து. வேங்கட ராமய்யர்.

விடை:—நரம்புச் சிலந்தியில் சஸ்திர சிகித்ஸை செய்வது முற்றிலும் பிசகு. அப்படிச் செய்வதால், வியாதி நிவ்ருத்தியாகாமற் போவதோடு, வேறு உபத்திரவங்களும் உண்டாகும். நரம்புச் சிலந்தி ஒருவனுக்கு வந்தால் அதற்குப் பின்வரும் உபாயத்தை அநுஸரித்து, மிகவும் நீண்ட அக்கிருமியை வெளிப்படுத்த வேண்டும். நரம்புச் சிலந்தி தேஹத்திலிருந்து வெளிப்புறப்படுந்தருணத்தில், காலில் ஓரிடத்தில் கொப்புளம் உண்டாகும். அக்கொப்புளம் உடைந்து, நரம்புச்சிலந்தி அவ்விரணத்தின் வாயிலிருந்து வெளிக்கிளம்ப ஆரம்பிக்கும். முதலில் ஒரு நரம்பு அல்லது வெண்மையான நூல் போல அது தென்படும். உடனே ஒரு ஈர்க்குத் துண்டை யெடுத்து, நரம்பு போன்ற அக்கிருமியின் வெளிவந்துள்ள பாகத்தைச் சுற்றி விடவேண்டும். ஆனால், நாம் பலவந்தமாக அதைப் பிடித்து இழுக்கக் கூடாது. இழுத்தோமானால் பாதியில் அறுந்துபோய், மிச்சமுள்ள பாகம் நமது தேஹத்தினுள்ளேயே தங்கிப்போய், விரணத்திலும், விரணமுண்டான காலிலும் வீக்கம் ஏற்பட்டு, பலவித துன்பம் அப்பால் நேரிடும். ஆகவே வெளிவந்துள்ள பாகத்தை மாத்திரம் ஈர்க்குக் குச்சியில் சுற்றி, விரணத்திற்கு அருகிலேயே சிறிது பஞ்சை வைத்து, அதன் மேல் கிருமி சுற்றப்பட்டுள்ள ஈர்க்கை வைத்து, அதன்மேலும் பஞ்சுவைத்து கட்டிவிடவும். கட்டப்பட்டுள்ள விடத்திற்கு அருகாமையில் வெந்நீர் விட்டு ஒத்தடம் கொடுப்பது நலம். இப்படியே தினந்தோறும் கிருமியின் வெளிவரும் பாகத்தை ஈர்க்கில் மேன்மேலும் சுற்றிக் கொண்டுவரவேண்டும். அது முற்றிலும் தானாகவே வெளியாய் விட்ட பிறகு, ஈர்க்கை யெடுத்து எறிந்து விடவும்; (அப்பூச்சியுடன் கூடிய ஈர்க்கைப் பள்ளத்தைத் தோண்டி புதைத்து விடுவது நலம்). கிருமி வெளிவந்த பிரதேசத்தில் இரண்டு மூன்று நாள் வெந்நீரால் ஒத்தடம் கொடுத்துவரவும். அறியாமையாலோ, ஈர்க்கில் சுற்றப்பட்டு வருகையில் அஜாக்கிரதையினாலோ நரம்புச்சிலந்தி அறுபட்டுப் போனால், அந்த முகத்தில் வீக்கமும் வலியும் அதிகரித்து ரோகி துன்பப்படுவான். அப்பொழுது வேப்பிலை, மஞ்ஜிஷ்டி, எள்ளு, ஆளிவிதை இவற்றைச் சமையெடையாகக் கூட்டி அரைத்து, அவ்வீக்கத்தின் மேல் போட்டலியாகக் கட்டிவரலாம். இதே ஸஞ்சிகையில் "ஔஷதங்களும் சிகித்ஸையும்" என்கிற வரிசையில் நரம்புச்சிலந்திக்கு ஒரு நிரூபருடைய சிகித்ஸாக்ரமம் வெளியிடப்பட்டிருக்கிறது; அதையும் கவனிக்கவும். ப-ர்.

---

#### சிசு ஸம்ரக்ஷணை:

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு,
ஐயா,

இந்தத் தடவை (இந்த ஸஞ்சிகைக்கு முன்னால்) வெளிவந்த கலாநிதியில் "சிசு ஸம்ரக்ஷணையை"ப்பற்

றிய சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. (a) குழந்தைகளுக்கு ஆமணக் கெண்ணெய் கொடுக்காமலிருக்கலாமா? இப்பொழுது பிறந்திருக்கிற குழந்தை ஒன்றுக்கு எண்ணெய் கொடுக்காமலிருக்கிறோம். இங்கிலீஷ் வைத்தியர்கள் எண்ணெய் கொடுக்க வேண்டாமென்கிறார்கள். குழந்தை பிறந்து சுமார் ஒரு மாஸம் ஆகிறது. இதற்கு எண்ணெய் கொடுக்காமலிருந்தால் கட்டி யென்கிற வியாதிக்கு இடமுண்டாகுமோ? (b) 'சங்க பஸ்மம்' என்கிற மருந்தைப் பாலுடன் கலந்துப் போட்டினால் வயிறு வெந்துவிடும், என்று சொல்லுகிறார்களே? அது வாஸ்தவந்தானா? (c) சிறு மல்லிகை வேரைப் பாலில் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கலாமா? அதற்கு என்ன குணம்? எவ்வளவு பிரமாணம் கொடுக்கலாம்? இவ்விஷயங்களைப் பற்றி தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தக் கோருகிறேன்.

கும்பகோணம். ப. லக்ஷ்மி அம்மாள்.

விடை:—(a) தென்னாட்டில் பெரும்பாலும் அனைவருமே இளங்குழந்தைகளுக்குப் பிரதிதினமும் (ஒரு வயது நிரம்பும் வரையில்) காலையில் ஆமணக்கெண்ணெய் கொடுத்து வருவது வழக்கம். முலைப்பாலுக்கு சிறிது மலவிரேசன குணம் உண்டு. தாய்க்குப் போதிய பால் இருக்கையிலும், தகுந்த உணவு குழந்தைக்குக் கொடுக்கப்பட்டு வருகையிலும் உணவு தானே ஜீர்ணமாவது போலவே, மலமும் தானே வெளியாகும். ஆனால் குடலிலுள்ள மலம் முடியவும் தினந்தோறும் வெளிவராமல், பழைய மலம் குடலில் சிறுகச் சிறுகச் சேர்ந்து விடக்கூடுமாகையால், ஒரு வாரத்திற்கு அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறை ஆமணக் கெண்ணெயைக் கொடுத்து, பழைய மலத்தைக் குடலிலிருந்து கழுவித் தள்ளுவது உசிதம். ஆமணக்கெண்ணெயை தினந்தோறும் கொடுப்பதால் பிறகு மலபந்தம் அதிகமாவதற்கு அது காரணமாகும். ஆமணக்கெண்ணெய் கொடாமலிருப்பதால் வயிற்றில் குழந்தைக்குக் கட்டியுண்டாகுமென்று கற்றறிந்த வைத்தியர் எவரும் சொல்லமாட்டார். கட்டியென்றால் இன்னவிதமான கட்டியென்றும் தாங்கள் விவரமாகக் குறிப்பிடவில்லை. யக்ருத்தாலி யென்கிற மாந்தக் கட்டிதான் தங்களால் குறிக்கப்படுவதாய் ஊஹிக்கிறோம். தினந்தோறும் எண்ணெய் கொடுப்பதும் சரியல்ல, அடியோடு கொடாமலிருப்பதும் உசிதமல்ல. (b) வயிற்றில் புளிப்பு, அஜீர்ணம் முதலியது சேராமலிருப்பதற்கு 'சங்க பஸ்மத்தைப்' பாலில் கலந்து இளங்குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். வேளைக்கு 5 முதல் 10 நெல்லெடை வரையில் பாலிற் கலந்து கொடுப்பது நலம். வயிறு இதனால் வெந்துவிடுமென்று ஸந்தேஹப்படுவதற்குக் காரணம் நமக்குத் தெரியவில்லை. மிதமிஞ்சி கொடுத்தால் ஸாதாரண உணவு கூடத்தான் வயிற்றில் அழற்சியை யுண்டுபண்ணும். (c) பாலில் சிறு மல்லிகை வேரைச் சேர்த்துக் கொடுக்கலாமா வென்று வினவுவதன் கருத்து விளங்கவில்லை. ஆகிலும் அதைப் பாலில் குழந்தைக்குக் கொடுக்கலாம். இது கபத்தைக் கண்டிக்கும்; சிலேஷ்ம ஜ்வரத்தைத் தணிக்கும்; அதிஸாரத்தைச் சாந்தமாக்கும்; வாத விகாரங்களைப் பரிஹரிக்கும்; இத்யாதி குணங்கள் இதற்குண்டு. இதன் சூர்ணத்தைக் குழந்தைகளுக்கு நாலைந்து குன்றுமணி யெடை முற்கூறிய உபயோகங்களுக்காகக் கொடுக்கலாம். ப-ர்.

---

## கநக ஸுந்தர ரஸம்.

வைத்தியகலாநிதி பத்திராசிரியர் அவர்களுக்கு,

ஐயா,

கநக ஸுந்தர ரஸம் என்கிற ஔஷதம் எனக்குத் தேவையாயிருக்கிறது. அம்மருந்தின் முறையை தயவு செய்து விவரமாக எழுதும்படிக்குத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலப்பாவூர். இ. சங்கியா பிள்ளை-வைத்தியர்.

விடை:—சுத்தி செய்த ஜாதிலிங்கம், சுத்த கந்தகம், சுத்த கருநாபி, வெங்காரம், மிளகு, திப்பிலி, ஊமத்தவிதை இவற்றைச் சமபாகம் எடுத்து, அனைத்தையும் நன்கு சூர்ணம் செய்து கொண்டு, கஞ்சாயிலைச்சாற்றால் ஒரு யாம காலம் அரைத்து, உளுந்து அளவாக மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தியெடுக்கவும். இது "கநக ஸுந்தர ரஸம்." (இரஸ ரத்ந ஸமுச்சயம் 16-அத்.) ப-ர்.

---

## வேப்பம் பிசின்.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு,

ஐயா,

வேப்பமரத்திலிருந்து பால் (அல்லது பிசின்)ஒன்று சில ஸமயங்களில் வடிகிறதே. அந்தப் பால் எந்த வியாதிக்கு உபயோகமாகும்? நாட்பட வைத்திருந்தால் அதன் குணம் என்ன? இவ்விஷயத்தைக் கலாநிதியில் எழுதி, இதற்குத் தகுந்த விடையும் அதன் மூலமாய் அறிவிக்க வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

திருவாரூர். ஜி. கண்ணுசாமி வைத்தியர்.

விடை:—வேப்பம் பிசினை விசேஷமாய் ஔஷத முறைகளில் சேர்ப்பது வழக்கமில்லை. அந்தப் பிசினுக்கு ஸ்தம்பித்த குணம் உண்டு. கிருமிஹரமாகவும் அது வேலை செய்யுமென்று நாம் கேள்விப்படுகிறோம். சில சூர்ணங்களை மாத்திரையாகச் செய்ய இந்தப் பிசினை இளக்கிச் சூர்ணத்தில் சேர்த்து உபயோகிக்கலாம். திருஷ்டாந்தமாக—த்ரிபலாகுளிகை முதலியதைச் செய்ய இப்பிசினைச் சேர்த்துக் கொள்ளலாம். வருஷக் கணக்காகப் பழகினாலே யொழிய இது தன்மையில் சீர் கெடுவதில்லை. ப-ர்.

---



# DRUGS AND THERAPEUTICS.

# ஔஷதங்களும் சிகித்ஸையும்.

## ஜம்பூ வென்கிற நாவலின் குணங்களும் உபயோகங்களும்.

(1) தந்வந்தரி நிகண்டுவின் பிரகாரம்;—நாவல் வாதத்தை விருத்தி செய்யும், க்ராஹி, கப பித்தங்களைத் தணியச் செய்யும், மார்பிலும் தொண்டையிலுமுள்ள கபாதி தோஷங்களை அறுத்துத் தள்ளக்கூடியது, ஆக இவை ஜம்பூ வென்கிற நாவலின் குணங்களாகும். (2) இராஜ நிகண்டுவின் பிரகாரம்:—நாவல் சிறிது துவர்ப்பும் இனிப்புங்கலந்த சுவை பொருந்தியது, சோர்வு-பித்தம் அழற்சி-தொண்டை நோவு-சோஷம் என்கிற க்ஷயம் இவற்றைச் சமநம் செய்ய வல்லது. கிருமிஹரம், ச்வாஸம்-அதிஸாரம்-கபம்-காஸம் இவற்றைப் போக்கக் கூடியது. அதிக ஸ்தம்பந குணம் (மலாதிகளைக் கட்டுந் தன்மை) பொருந்தியது. நாக்கில் நற்சுவையையும் ஜாடராக்னியையும் விருத்தி செய்யும். இவை சிறுநாவலின் குணங்களும் செயலகளுமாகும். இராஜ ஜம்பூவென்கிற பெரு நாவலின் குணதிசள் பின் வருமாறு:—உஷ்ணவீர்யம, இனிப்பும் துவர்ப்புங் கலந்த சுவை, சிரமஹாரம், அரோசகஹாரம், ஸ்வர்யம் (குரலை ஒழுங்கு செய்தல்), அதிக ஸ்தம்பநம், க்ஷயரோக நிவாரகம்; இக்குணங்களும், அதிஸாரம்-ச்வாஸம்-காஸம்-கபதோஷம் இவற்றைப் பரிஹரிக்குந் தன்மையும் பெரு நாவற் கொட்டைக்கு உண்டு. (3) அஷ்டாங்க ஹ்ருதயத்தின் பிரகாரம்:- நாவற்கொட்டை குருகுணம், அதிக ஸ்தம்பநம், சீத வீர்யம், கபஹாரம், பித்தஹாரம் இக்குணங்களையும, வாதத்தை மிக்க விருத்தி செய்யுந் தன்மையையும், மல-மூத்திரங்களைக் கட்டிவிடக்கூடிய சுபாவத்தையும் உடையது. (4) வேறு சில நூல்களின் பிரகாரம்:—நாவற் கொட்டையை உலர்த்தி யிடித்து, சூர்ணம் செய்து வைத்துக் கொண்டு, வேளைக்கு 15 நெல்லெடை வீதம் தினத்திற்கு மூன்று முறையாகச் சாப்பிட்டு வந்தால், மது மூத்திரரோகம் நிவாரணமாகும் என்று கருதப்படுகிறது. நாவற் கொட்டையை உலர்த்தி, சூர்ணம் செய்து, பட்டைச் சாராயத்தில் ஊறவைத்து உட்கொண்டால் மது மூத்திரம் சீக்கிரத்தில் ஸ்வஸ்தமாகும் என்றும தெரியவருகிறது. இதற்குள்ள ஸ்தம்பந குணமும், சிறிது துவர்ப்பாயுள்ள சுவையுமே இத்தகைய குணங்களைத் தரக்கூடியவையா யிருக்கின்றன. இந்த விதையைக் கஷாயமிட்டு நாட்பட்ட சீதபேதியால் வருந்துபவருக்குக் கொடுத்தால் சீக்கிரம் குணமுண்டாகும. இது ஸாதாரண அதிஸாரத்திலும உபயோகிக்கத் தகுந்தது, நாவல் வித்தைவிட நாவற்பட்டைக்கு மதுமேஹநிவாரண சக்தியும், அதிஸாராதிகளைக் கட்டுந் தன்மையும் விசேஷமாயுண்டு.

---

## ஆடாதோடை தேள் விஷத்திற்கு.

திருவாரூரிலிருந்து ஸ்ரீயான் ஆர். ஆத்மாராமன் என்பவர் நமக்கு அடியில் வருமாறு எழுதுகிறார்:— அடியில் நான் கூறும் விஷயம் பலருக்கும் உபயோகப் படுமென்று தோன்றுகிறபடியால், தயவு செய்து இதைத் தாங்கள் கலாநிதியில் பிரசுரிக்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதாவது:—

காசியிலிருந்து பிச்சுவையர் என்று ஒருவர் இங்கு வந்திருக்கிறார். அவர் எப்பொழுதும் காசியிலேயே வஸிப்பவர். அவர் எனக்கு நெருங்கிய பந்து. ஆயுர்வேத வைத்தியத்தில் நல்ல வியுத்பத்தியுள்ளவர். அநேகரிடமிருந்து நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்றிருக்கிறார். தேள் விஷத்திற்கு ஆடாதோடை சிறந்த ஔஷதம் என்று அவர் சொல்லுகிறார். "ஆடாதோடை யிலையை அரைத்து, கொஞ்சம் ஜலத்தில் கரைத்து, தேள் கொட்டியவனுக்கு உட்கொள்ளக் கொடுத்து விடவும். தேள் விஷம் இதனால் உடனே குறைந்து விடுகின்றது. இவ்விதம் அநேகம் பேருக்குக் கொடுத்து, குணமடைந்திருப்பது பிரத்தியக்ஷத்தில் தெரிந்து கொள்ளப் பட்டிருக்கிறது." என்று அவர் சொல்லுகிறார். அநுபவத்தில் பிரயோஜனப்படுவதாகக் கூறப்படுவதாலும, இந்த மூலிகை எளிதில் எங்கும் கிடைக்கக்கூடியதாகையினாலும்; பிரயோக முறையும் வெகு ஸுலபமாயிருப்பதாலும் நமது வாசக நண்பர்களும் இதை யுபயோகித்துப் பார்க்கலாம்.

---

## தாளக பஸ்ம முறை.

பசுஞ் சாணத்தினால் ஒரு மூசை செய்து அதை உலர்த்தி யெடுத்துக்கொள்ளவும். நாயுருவி உப்பு ஒரு பலம் அளவு அதில் போடவும்; அதன மேல் 1 பலம் தாளகத்தை வைத்து, அதற்கு மேலே மீண்டும நாயுருவி யுப்பைப் போட்டு மூடிவிடவும். மூசைவாயை சாணத்தினால் மூடி யுலாத்தி யெடுக்கவும. இந்த மூசையின் மேலே இரண்டு வரிசை சீலை-மண் செய்து உலர்த்திக் கொள்ளவும். அப்பால் கீழே 15 வறட்டியும், மேலே 15-வறட்டியும வைத்துப் புடம்போடவும். இப்படிச் செய்ய தாளகம் பஸ்மமாகும்.

இதை 2-நெல்லெடை வீதம் உபயோகிக்கலாம். ச்வாஸ-காஸம், ஜ்வரம் முதலியவற்றிற்கு இது சிறந்த ஔஷதம். இங்ஙனம மிஸ்டர் வி. கண்ணுசாமிப் பிள்ளை யென்கிற வைத்தியர் நமக்கு அறிவிக்கிறார்.

---

## ச்ருங்கம் என்கிற மான் கோம்பு பஸ்மம்.

மிஸ்டர் வி, கண்ணுசாமிப் பிள்ளை யவர்கள் மான் கொம்பை பஸ்மம் செய்யு முறையைப்பற்றியும் நமக்குப் பின் வருமாறு அறிவிக்கிறார்:—

ஒரு தோலா ஓமத்தையும், அதே அளவான வெடியுப்பையும் தண்ணீர் விட்டு ஆட்டி மையத்து, ஒரு தோலா யெடையுள்ள மான் கொம்பை மேல முழுவதும் மறைத்துப் பூசிவிடவும். அதன் மீது சீலை செய்துவிடவும. இவ்விதம் கவசமிட்ட மான் கொம

ருயெடுத்து, பற்களால் கடித்து மென்று விழுங்கிவிட்டார். ஒவ்வொரு வஸ்துவையும் மென்று விழுங்கியதும் ஒரு வாய் ஜலத்தைக் குடித்து வந்தார். பாதரஸத்தைப் பருகினர். வத்ஸநாபியையும் மென்றுத் தின்று விட்டார். நைட்ரிக் ஆஸிட்டில் சிறிதளவு ஒரு காலணாவை பூமியில் வைத்து, அதன்மீது ஊற்றப்பட்டது. அக்காலணா உருகியது; அந்த அக்னித் திராவகத்தை (நைட்ரிக் ஆஸிட்டை) கையில் தாராளமாய் விட்டுக்கொண்டு ஆசமநம் செய்தார். கடைசியாக மேஜையின் மீதிருந்த ஈயத்தை நெருப்பில் உருக்கி, அதையும் குடித்துவிட்டார். இது எவ்விதம் ஸாத்யமென்று அங்கு வந்திருந்த வைத்திய சாஸ்திரஞர் எவருக்கும் புரியவில்லை. இரண்டு ஐரோப்பிய சாஸ்திரஞர்களும் அச்சமயம் வந்திருந்தார்கள். கடைசியில் நாங்கள் அவருடைய வாயை நன்ருகப் பரிசோதித்துப் பார்த்தோம். அவரது நாக்கிலும், உள் தவடையிலும் சுடப்பட்ட இரண்டொரு குறிகள் மாத்திரம் தென்பட்டன. இவருக்குப் பசியானல் ரொட்டியானலும் சரி, இலைச்சிரகுகளானலும் சரி, மரங்களின் பட்டைகளானலும் சரி எதை வேண்டுமானலும் மென்றுத்தின்று பசிதீர்த்துக் கொள்வராகக் கூறுகிருர். ஸர்ப்பம் முதலியதைக் கொண்டுவந்து கொடுத்தாலும், அவர் மென்று விழுங்கிவிடுகிறேன் என்கிருர். இவருக்கு ஸர்வ பக்ஷியென்னும் பட்டம் வெகு பொருத்தமானது. ஆனல் இவர் எங்ஙனம் இவற்றை யெல்லாம் பக்ஷிக்கிருர் என்பதே சாஸ்திரஞருடைய புத்திக்கு எட்டவில்லை.

---

## வாயால் மூச்சு விடுவதாலான தீமை.

தொண்டை, ச்வாஸாசயம் இவ்வயவங்களைப்பற்றிய வியாதிகளிலும் சிகித்ஸைகளிலும் நிபுணரான ஸர். எஸ். க்ளேர் தாம்ப்ஸன் என்கிறவர் அடியில் வருமாறு கூறுகிருர்.—"இருபத்திநாலு மணி ஸாவகாசத்தில் நாம் நாசியினலே ச்வஸித்து வரும்போது 336,000 நுண்ணுயிர்களை நமது தேஹத்தினுட் செல்லவிடாமல் நாசியானது தடுத்து வருகிறது. நாம் வாயைத் திறந்து கொண்டு (வாயால) மூச்சு விட்டோமானல், இவ்வளவு ஸூக்ஷ்ம கிருமிகளும் நமது ச்வாஸாசயத்தினுள் ச்வாஸவாயுவோடு பிரவேசித்து, ச்வாஸப்பைக்குப பெருந்தீங்கு விளைவிக்கும ஆகவே அனைவரும் வாயை மூடிக்கொண்டு நாசியின் மூலமாகவே மூச்சுவிடுங்கள்."

---

## விவாஹத்தின் பலன்.

"தர்மப்ரஜார்த்தம் வ்ருணீமஹே" (தர்மம்-ஸந்தாநஸம்ருத்திக்காகவே விவாஹம செய்துகொள்கிறோம்) என்று இந்துக்கள் கல்யாண ஸமயத்தில் ஸங்கல்பம் செய்து கொள்வது வழக்கம், ஆனல் பேனுடுகளில் விசேஷமாக (இத்தேசத்திலும ஒவ்வொருவர்) ஸந்தாந வ்ருத்தியால் குடும்ப நிர்வாஹம் கடினமாய் விடுமென்று அஞ்சி, ஸ்த்ரீகள் கருத்தரிக்காமலிருக்க வேண்டுமே யென்று கவலைப்படுகிருர்கள். "குழந்தைகளைப் பெற்று ஸந்தான விருத்தி செய்வதில் நோக்கமில்லாமல் கல்யாணம் செய்து கொள்கிற மனிதன், நியாயம் செய்பவனக மாட்டான்" என்று டாக்டர் ஐஸோபால் பல்டினி என்பவர் கூறுகிருர்.

---

## கண்ணுசாமியம்.

ம-ா-ா-ஶ்ரீ கண்ணுசாமிப் பிள்ளை யவர்கள், கவர்மெண்டு ரிகார்டு ஆபீஸில் ஊழியம் செய்து வருபவர். அவர் தமக்கு ஒழிந்த நேரங்களை வீணுக்காமல் வைத்திய நூல் எழுதுவதில் சிரத்தையெடுத்துக் கொண்டது குறிப்பிடத் தகுந்த முக்கிய விஷயமாகும். இவர் தமது பெயரைக் கொண்டே, கண்ணுசாமியம் என்கிற ஒரு புஸ்தகம் இயற்றி அச்சிட்டு வெளியிட்டிருக்கிருர். நமதிடம் அவர் அன்புடன் கொடுத்த அப்புஸ்தகப் பிரதி யொன்றைப் படித்துப் பார்த்தோம். வாத பித்த கபங்கள் ஸம்பந்தமான நாடிகளைப்பற்றியும், அநேக ஔஷத முறை முதலியவைகளைப்பற்றியும் இதில் கூறியிருக்கிருர். இவ்விஷயங்களை யெல்லாம் செய்யுள் ரூபமா யெழுது வதற்கு ஆசிரியர் எடுத்துக்கொண்டுள்ள சிரமம் பாராட்டத் தக்கது திருஷ்டாந்தமாக இரண்டு மூன்று பாடல்களை நாம் கீழே குறிப்பிடுகிறோம்:—

### தங்கலிங்க மெழுகு. கலி விருத்தம்.

"வாங்கு லிங்கம் வழங்கிடு மோர் பலம்
சேங்கனி தரும் சீர்தயிலஞ்சுறுக்
காங்குத் தந்தே யதனுடனற்பரி
கோங்கு லாவவி ராகனெடை கொண்டே
கொண்டு முன்ன நாங்கூறிய நெய்யையே
விண்டரைத்து விளங்கிடு கெர்ப்பரை
கண்டுள் மேவிடக்காண்குவை பால் படி
யண்டு மைந்தினலாவி யெரிகோடே
எரித்த வஸ்துவை யேற்க வுளுந்தெடை
சரித்த தேகந்தளர்ச்சியை பற்றிடும்
வருத்துங் காற்பிணி வந்த வழி செல
பெருத்த ரோகங்கள் பேசுதற்கில்லையே."

இப்பாடல்களைக்கொண்டே புஸ்தகம் எவ்வாறு எழுதப் பட்டிருக்கிற தென்றும், அது எவ்வளவு உபயோகமுள்ள தென்றும் ஒருவாறு அறியலாம். சுமார் 150-பக்கங்களில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ 2-0-0. சென்னை சிந்தாதரிப்பேட்டையிலுள்ள ஆசிரியருக்கு எழுதி வேண்டியவர் பெற்றுக் கொள்ளலாம்.

ஶ்ரீ:

# மாதவ நிதாநம்

என்னும்

# ரோக விநிச்சயம்.

144985
600 008.

## I. பஞ்ச லக்ஷண நிதாநம்.*

இஷ்டதேவதா நமஸ்காரம்:—உலகத்தின் ஸ்ருஷ்டி - ஸ்திதி - ஸம்ஹாரங்களுக்குக் காரணமாகவும், ஸ்வர்கம் மோக்ஷம் இவற்றைப் பெறுவதற்குப் பிரதாந வாயிலாகவும், மூவுலகங்களுக்கும் முக்கிய இரக்ஷகனகவுமுள்ள சிவபெருமானைப் பணிந்து இக்கிரந்தம் ஆரம்பிக்கப்படுகிறது. [1]

கிரந்தத்தின் பெயரும் இதை இயற்றுவதின் நோக்கமும்:—அறிவிற் சிறந்த அநேக வைத்தியர்களுடைய அநுமதியின்பேரில், பல முனிவரது வசநங்களைப் பிரமாணமாகக் கொண்டு, அக்கிரந்தங்களிலுள்ள விஷயங்களை ஸங்கிரஹித்து, ரோக விநிச்சயம்[1] என்கிற இந்நூல் இயற்றப்படுகிறது; இதில் உபத்ரவம், அரிஷ்டம், நிதாநம், லிங்கம்[2] என்கிற விஷயங்களின் விவரணம் அடங்கியிருக்கும். அநேகவிதமான கிரந்தங்களைக் கிடைக்கப் பெருதவரும், பிரபலமான பல நூல்களைப் படித்தறிவதற்குப் போதிய திறமையில்லாதவருமான வைத்தியர்கள், வியாதி நிலைமையை எளிதிற் கற்றறிவதற்கு இக்கிரந்தமே ஏற்ற கருவியாயிருக்கும். 2, 3.

பஞ்ச லக்ஷணங்கள்:—நிதாநம், பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி என்கிற இவை வியாதிகளைத் தெரிந்துகொள்வதற்கான ஐந்து உபாயங்களாக நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன.[3] 4.

---

* நிதாநம் (அல்லது காரணம்), பூர்வரூபம் ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி என்பவை பஞ்ச லக்ஷணங்கள். இவற்றை விவரிக்கும் பிரகரணம் "பஞ்சலக்ஷண நிதாநம்" எனப்படுகிறது. இங்கு ஒவ்வொரு அத்தியாயம் அல்லது பகுதியும் நிதாநம் என்கிற பெயரால் அழைக்கப்படும். பஞ்ச லக்ஷணங்களுடைய விவரணம் இனி கிரமமாகக் கூறப்படும்.

1. மாதவகரன் என்கிற ஆசிரியரால் இயற்றப்பட்ட நிதாநக்கிரந்தமானதால் இது மாதவ நிதாநம் என்றுபிரஸித்தமாகக் கூறப்படுகிறது; ஆனல் இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் ரோக விநிச்சயம் என்பதே.

2. ஒரு வியாதியை ஆதாரமாகக் கொண்டு உண்டாகும் மற்றொரு வியாதி 'உபத்ரவம்'; மரணஸூசகமான குறி 'அரிஷ்டம்'; வியாதிக்குக் காரணம் 'நிதாநம்'; வியாதியின் குறி 'லிங்கம்' அல்லது 'இலக்ஷணம்'. இவற்றின்மற்ற விவரணம் பின்னல் வரையப்படும்.

3. நிதாநம் முதலிய ஐந்து அம்சங்களும் தனித்தனியாகவும், ஒருமிக்கவும் வியாதி நிலைமைகளைப் பற்றி அறிவிக்கக் கூடியனவாதலால், இவை பொதுவாகப் "பஞ்ச லக்ஷணங்கள்" எனப் படுகின்றன. மேலும் ஹேது-லக்ஷணங்களை நிர்தேசம் செய்வதால், அல்லது அவற்றை நிச்சயிப்பதற்கு ஸாதகமாயிருப்பதால் இவ்வைந்தும் "நிதாநம்" என்கிற பொதுப்பெயராலும் வழங்கப்படுகிறது. ஆகவே இவ்விஷயங்களை விவரிக்கும் நூலுக்கும் "நிதாநக் கிரந்தம்" என்று பெயரிட்டனர். நிதாநம் என்பதற்கு மூலகாரணம் என்கிற பொருள் பிரஸித்தமாகையால், அதன்படி வியாதிக்குக் காரணம் என்கிற பொருளிலும் இது முக்கியமாக வ்யவஹரிக்கப்படும். இவற்றிற்குப் "பஞ்ச நிதாநம்" என்றும் பெயருண்டு.

நிதாநம்:—நிமித்தம், ஹேது, ஆயதநம், ப்ரத்யயம், உத்தாநம், காரணம், நிதாநம் ஆக இவற்றை வியாதிக்கு மூலகாரணமென்னும் பொருளைக் குறிப்பிடும் பர்யாய சப்தங்களாக வழங்குவர்.[1] 4¾.

பூர்வரூபம்:—(1) பூர்வரூபம் அல்லது ப்ராக்ரூபம் என்றால் முற்குறி; ஒரு வியாதி, குறிப்பிட்ட எத்தோஷ ஸம்பந்தமான குறியையும் பெறுமளிருக்கையிலேயே எந்த இலக்ஷணத்தினால் அது ஒருவாறு முன்னதாய் அறியப்படுகிறதோ அது பூர்வரூபம். (2) உண்டாகப்போகிற வியாதியின் குறி சொற்பமாயிருக்குமாகையால் இந்த நிலைமையில் வியாதிக்குறி விளங்கத் தோன்றாது; இப்பூர்வரூபமென்கிற முற்குறி அந்தந்த வியாதிக்குத் தகுந்தவாறு பேதப்படும்.[2] 5, 6.

1. வாதாதி தோஷங்களைக் கோளாறடையச் செய்து வியாதியை உற்பத்தி செய்வதற்கு ஆதாரமாயிருப்பது நிதாநம் எனப்படுகிறது; அல்லது வாதாதி தோஷங்களே நிதாநமாயிருப்பதுண்டு. நிதாநம் நான்கு விதமாகக் கருதப்படுகிறது:—(1) ஸந்நிக்ருஷ்ட நிதாநம்: ஸமீபித்த காரணம் எனப்பொருள்; ஸாதாரணமாய் பகல், இரவு, போஜநம் முதலியவை தோஷப்பிரகோபத்திற்கு உடனே காரணங்களாகின்றன; சயாவஸ்தை முதலியதை இக்காரணங்கள் எதிர் பார்ப்பதில்லை; ஆகவே இவை ஸந்நிக்ருஷ்ட காரணங்கள். (2) விப்ரக்ருஷ்ட நிதாநம்: தூரத்திலுள்ள காரணம் எனப்பொருள்; க்ரீஷ்மருதுவில் சயாவஸ்தையை அடைகிற வாயு, பிறகு வர்ஷருதுவில் பிரகோபித்து வியாதியையுண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது; இங்கே வாத தோஷம் வர்ஷருதுவில் வியாதியுண்டு பண்ணுவதற்கேற்றவாறு க்ரீஷ்மருதுவில் அதற்குச் சயாவஸ்தை ரூபமான கோளாறை யுண்டுபண்ணுவதற்குக் காரணம் ஏற்படுகிறதாகையால் இது விப்ரக்ருஷ்ட காரணமாகும். (3) வ்யபிசாரி நிதாநம்:—வியாதியை முற்றிலும் நன்கு உண்டு பண்ணுவதற்குப் போதிய சக்தியில்லாத காரணம் எனக் கருத்து; அல்லது வியாதியை எளிதில் உண்டு பண்ணுவதற்கு அனுகூலமான துர்பல தாதுக்களுடன் கூடிய தேஹத்திற் பிரவேசிக்காமல், பலமான தேஹத்திற் பிரவேசித்த ஸாதாரண வியாதிகாரணம் என்றும் சொல்லலாம். (4) பிரதாந நிதாநம்:—பலமான காரணம்; விஷம் முதலியது இதற்கு திருஷ்டாந்தம். வேறு வகையில் நிதாநத்தை மூன்று விதமாகவும் பகுக்கலாம். (1) தோஷப்பிரகோபஹேது:— தோஷங்களின் சய-ப்ரகோப-ப்ரசமங்களுக்குக் காரணமாய் அந்தந்த ருதுவில் ஏற்படும் மதுராதி ஸ்வபாவம் நிரம்பிய வஸ்து முதலியது. (2) வியாதிப்பிரகோபஹேது:—மண் உண்பது பாண்டு ரோகத்திற்குக் காரணமாகும் என்பது. (3) உபயப்பிரகோபஹேது:—விதச்த்தமான (காந்தல்) உணவு முதலியதை யுண்பவனுக்கு இரத்தம் அழன்று போய், வாதமும் பிறகு கோளாறடைந்து, வாத ரக்தம் என்கிற வியாதி யுண்டாகிறது; இதில் தோஷம் வியாதி இரண்டும் ஒரே ஸமயத்தில் பிரகோபிக்கும்.

2. இவ்விதமான வியாதி இனி உண்டாகப் போகிறதென்பதை முன்னதாகவே ஸூசிப்பிக்கும் குறி பூர்வரூபம். இது ஸாமாந்ய பூர்வரூபம், விசேஷ பூர்வரூபம் என்று இருவகைப்படும். வியாதியின் காரணம் தேஹத்திற் பற்றி, தோஷ-தாதுக்களுக்குக் கலவரத்தைத் தந்து, ஜ்வரம் முதலிய ஒரு குறிப்பிட்ட வியாதியுண்டாகப்போகிறதென்பதை மாத்திரம் முன்னதாகத் தெரிவிக்கும் பொதுக்குறி ஸாமாந்ய பூர்வரூபம். இக்குறி, உண்டாகப்போகிற வியாதி வாத ஸம்பந்தமானதா, பித்த ஸம்பந்தமானதா என்கிற இவை முதலிய பேதங்களைப் பகுத்து அறிவிக்கக்கூடியதன்று. ஜ்வரம் உண்டாவதற்கு முன்பு சிரமம், அமைதியின்மை, முகம் முதலியதிற் கலக்கம் முதலியவை அவ்வியாதிக்கு ஸாமாந்ய பூர்வரூபக் குறிகளாகும். உண்டாகப் போகிற வியாதி வாதாதிதோஷங்களில் இதனிதன் கோளாறால் முக்கியமாய் உண்டாகுமென்று ஒருவாறு ஊஹித்தறியக் கூடிய குறி விசேஷபூர்வரூபம் எனப்படும். ஜ்வரத்தில் அது நன்கு உண்டாவதற்கு முன்பு முற்கூறிய ஸாமாந்யக்குறிகளோடு கொட்டாவி அதிகமாயுண்டானால், உண்டாகப் போகிற ஜ்வரம் வாத ஸம்பந்தமாயிருக்குமென்றும், கண்களில் அழற்சி யேற்பட்டால் பித்த ஜ்வரம் உண்டாகுமென்றும், அன்னத்தில் அருசியுண்டானால் அது கபஸம்பந்தமாயிருக்குமென்றும் ஊஹிக்கலாம். இவை விசேஷபூர்வ ரூபத்திற்கு திருஷ்டாந்தமாகும். மேலே முதலிற் குறிப்பிட்ட (1) என்கிற பாகம் ஸாமாந்ய பூர்வரூபத்திற்கும், இரண்டாவது குறிப்பிட்ட (2) என்கிற பாகம் விசேஷ பூர்வரூபத்திற்கும் இலக்ஷணங்களெனக் கருதவேண்டும். குளிர்ந்த காற்று வீசுவதும், கார்மேகம் ஆகாயத்திற் சூழ்வதும் மழை வரப் போகிறதென்பதை முன்னதாய் அறிவிக்குமாப்போலே, பூர்வரூபங்கள் என்கிற சில முந்திய தோற்றங்கள் பிறகு வரக்கூடிய வியாதிக்கு ஸூசகங்களாம்.



ரூபம்:—அப் பூர்வரூபக்குறியே நன்கு விளங்கத் தோன்றிவிட்டதானால் ரூபம் எனப்படும். இதுவே ஸம்ஸ்தாநம், வ்யஞ்ஜநம், லிங்கம், இலக்ஷணம், சிஹ்நம், ஆக்ருதி என்கிற பெயர்களாலும் வழங்கப்படும்[1] 7.

உபசயம்—(உபசயமும் அநுபசயமும்)[2]:—வியாதியின் காரணத்திற்காவது வியாதிக்காவது இயற்கைத் தன்மையில் நேர் எதிரிடையாயிருப்பவையான, அல்லது அவற்றிற்கு எதிரிடையாகக் காரியங்களையாவது செய்யக்கூடியவையான ஔஷதமென்ன, உணவென்ன, வேலையென்ன இவற்றின் பிரயோகத்தினால் வியாதி நிவாரணரூபமான சுகத்தை உண்டுபண்ணும் யாதொரு உபயோகம் உண்டோ, அதை உபசயம் என்று அறிக; இவ்வுபசயமே வியாதிக்கு 'ஸாத்மியம்' என்று கருதப்படுகிறது. அப்படிக்கின்றி முற்குறிப்பிட்ட ஔஷதாதிகளின் உபயோகம் வியாதியை நிவ்ருத்திக்காமற் போனால், அவ்வநுகூலமின்மையானது அநுபசயம் என்றும், வியாதிக்கு 'அஸாத்மியம்' என்றும் கூறப்படுகிறது. 8, 9.

1. ரூபம் என்றால் வியாதி யுற்பத்தியான பிறகு காணும் குறி. ரூபத்தைக் கொண்டு வியாதி யின்னதென்று அறிகிறோம்; ரூபமின்றி வியாதியுண்டாகாது. அருசி, அமைதியின்மை, தாபம் முதலியவை சேர்ந்தால் ஜ்வரம்; பிறகு விவரிக்கப்படுமாறு காஸம் முதலிய, பதினொரு இலக்ஷணங்கள் சேர்ந்தால் அவை க்ஷயம் அல்லது இராஜயக்ஷ்மாவைக் குறிப்பிடும். ஆகவே ரூபங்களை வியாதியின் காரியங்களெனக் கூறலாம். "அப் பூர்வரூபக்குறியே......" என்பதால், விசேஷ பூர்வரூபக்குறி முக்கியமாகக் குறிக்கப்படுகிறது. பெரும்பாலும் பூர்வரூபம் தோன்றியே அப்பால் ரூபம் காணப்படுமாகையால் "அப் பூர்வரூபக்குறியே" எனக் கூறப்பட்டது. பூர்வரூபத்திற்குப் பிறகு 'ஸம்ப்ராப்தி' உண்டாவது இயல்பு; ஆகவே பூர்வரூபத்திற்குப் பிறகு ஸம்ப்ராப்தி விஷயம் கூறப்பட்டு அதன் பிறகே ரூபவிஷயம் மொழியப்பட வேண்டும். அங்ஙனம் செய்யாமல் பூர்வ ரூபத்திற்குப் பிறகு ரூபம் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்குக் காரணம், ஸம்ப்ராபதியைப்பற்றிய விஷயம் சிறிது விரிவாகக் கூறப்படவேண்டி யிருக்கிற தென்பதே; ஆகையால் ஸம்ப்ராப்தி விஷயமான விவரணம் பஞ்ச லக்ஷண நிதாநத்தில் கடைசியில் கூறப்படுகிறது. சரகர், வாக்படர் முதலிய கிரந்த கர்த்தாக்களும் இதே கிரமத்தை அநுஸரித்து பூர்வரூப-ரூபாதி விஷயங்களை விவரித்திருக்கின்றனர்.

2. உபசயம் என்றால் வியாதி நிவ்ருத்தியாதல். இதையே சிறிது விளங்கக் கூறுவோம்:—நிதாநம் எனப்படும் ரோககாரணத்திற்காவது, ரோகத்திற்காவது குணத்தில் எதிரிடையான ஔஷதத்தையும், உணவையும், வேலையையும் உபயோகிப்பதால் வியாதிக்கு உபசயம் (உபசாந்தி) உண்டாகும்; என்றால்—ஹேதுவிபரீதமான அல்லது வியாதி விபரீதமான ஔஷத அன்ன விஹாரங்களால் வியாதிக்கு உண்டாகும் தணிவு உபசயமாகும். நிதாநத்திற்காவது வியாதிக்காவது எதிரிடையல்லாத குணமுள்ளவைகளாகத் தோற்றுபவையும், இறுதியில் (பலனில்) அவற்றிற்கு எதிரிடையான காரியங்களைச் செய்பவையுமான ஔஷத-அன்ன-விஹாரங்கள் ஹேது விபரீதார்த்தகாரிகள் என்றும், வியாதிவிபரீதார்த்தகாரிகள் என்றும் கூறப்படும். உதாரணங்கள்:—(1) ஹேதுவிபரீதமான ஔஷதம்—குரு ஸ்நிக்த சீதங்கள் என்னும் காரணங்களால் உண்டான வியாதியில், இலகு ரூக்ஷ உஷ்ணங்கள் என்கிற குணங்களையுடைய பதார்த்தங்களை முறையே பிரயோகித்தல். (2) ஹேது விபரீதமான அன்னம் — ஸந்தர்ப்பணத்தினால் (தேஹத்துக்கும் மனதுக்கும் த்ருபதி யுண்டுபண்ணி பலந்தரும் சிகித்சையால்) உண்டான வியாதியில் அபதர்ப்பணமான (இலங்கம் முதலிய) சிகித்ஸையைச் செய்தல். (3) ஹேதுவிபரீதமான விஹாரம்—மிதமிஞ்சி உழைப்பதால் ஏற்பட்ட வியாதியில் உடம்பு அசையாமல் அமைதியாயிருத்தல். (4) கபத்தினால் உண்டான ஜ்வரத்தில் சிருதபானம் செய்வித்தல் வியாதி விபரீதமான ஔஷதமாகும். (5) அதே கபஜ்வரத்தில் பேயா என்னும் கஞ்சிவகைகளை உபயோகித்தல் வியாதி விபரீதமான அன்னமாம். (6) அதே ஜ்வரத்தில் அமைதியாகப் படுத்திருப்பது வியாதி விபரீதமான விஹாரமாம். (7) ஹேது விபரீதார்த்த காரியான ஔஷதம்—பித்தப்பிரதானமான வீக்கத்தில் பித்தகரமான உஷ்ணமாயுள்ள பிசுமுதலிய ஒற்றடங்களை உபயோகித்தல்; இதனால் பித்தவீக்கம் தணியும். (8) ஹேது விபரீதார்த்த காரியான அன்னம்—அதே பித்தவீக்கத்தில் உஷ்ண வீர்யமான விதாஹி குணமுள்ள உணவுகளை உபயோகித்தல். (9) சர்த்தியில் விரல் குச்சி முதலியவற்றைத் தொண்டையில் செலுத்தி சர்த்தியையே உண்டுபண்ணுதல் ஹேதுவிபரீதமான செயல் அல்லது விஹாரமாகும். (10) சர்த்தியென்னும் வாந்தியில் அதையே உண்டாக்கக்கூடிய உப்பு முதலியதை உபயோகித்தல் வியாதி விபரீதார்த்தகாரி ஔஷதமாம். (11) அதிஸாரத்தில் விரேசன முண்டுபண்ணும் பாலையே உட்கொள்ள, சில விரேசநம் ஆய் அதிஸாரம் நிற்கும்; இது வியாதி விபரீதார்த்த காரியான அன்னம். (12) உட்புகுந்து துன்பமளிக்கும் சல்யத்தை வெளிப்படுத்த ரோகியை வண்டியில் ஏற்றி மேடுபள்ளங்களில் இழுப்பது வியாதி விபரீதார்த்த காரியான விஹாரமாகும்.

[ஸாத்மியம் என்றால் அநுகூலமானது. அஸாத்மியம் என்றால் அநுகூலமல்லாதது. இவை நிதாநக்கிரந்தத்தில் வியாதி ஸாத்மியம் என்றும், வியாத்ய ஸாத்மியம் என்றும் அல்லது உபசயம் என்றும், அநுபசயம் என்றும் முறையே வழங்கப்படும்.]

ஸம்ப்ராப்தி:—தோஷம் முதலிற் கோளாறடைந்த வகைகளையும், அப்பால் அத்தோஷம் தேஹத்தில் வியாபிக்கும் விதங்களையும், அதனால் வியாதியுண்டாகும் கிரமத்தையும் அறிவிக்கக்கூடிய முறையானது ஸம்ப்ராப்தி எனப்படும். இதற்கே ஜாதி யென்றும் ஆகதியென்றும் பெயராம்.[1] இது ஸங்க்யாஸம்ப்ராப்தி யென்றும், விகல்பஸம்ப்ராப்தி யென்றும், பிரதாந ஸம்ப்ராப்தி யென்றும், பல ஸம்ப்ராப்தி யென்றும், காலஸம்ப்ராப்தி யென்றும் அநேக வகைப்படும். இதன் பிறகு அடுத்த நிதாநத்திலேயே ஜ்வரம் எட்டுவிதம் என்று ஆரம்பித்து ஒவ்வொரு வியாதியின் உட்பிரிவுகளைப் பகுத்து, அவற்றின் எண்ணிக்கைகளைக் குறிக்கப்போகிற விஷயம் ஸங்க்யா ஸம்ப்ராப்தி யாகும்.[2] பல தோஷங்கள் சேர்ந்து வியாதியை யுண்டாக்கையில், பிரகோபமடைந்த அத்தோஷங்களுக்குள்ள தாரதம்யங்களை, அல்லது தோஷங்கள் பிரகோபிப்பதற்குக் காரணமான ரூக்ஷாதி குணங்களைப் பகுத்தறிந்து, அவற்றின் அம்சங்களாகவோ அல்லது அவ்வம்சங்களின் சில பகுதிகளாகவோ பகுக்கப்பட்டு நிர்ணயிக்கப்படும் விகற்பம் விகல்ப ஸம்ப்ராப்தி யெனப்படும்[3]. சுதந்திர வியாதியென்றும், பரதந்திர வியாதியென்றும் பகுத்து, ஒரு வியாதிக்குப் பிராதாந்யத்தைக் கூறுவது பிரதாந ஸம்ப்ராப்தி யென்று வழங்கப்படும்.[4] ஒரு வியாதிக்கு நிதாநம் முதலிய பஞ்ச லக்ஷணங்கள் முற்றிலும் ஸம்பவித்திருப்பதையும், அல்லது அவற்றில் சிற்சில இலக்ஷணங்கள் மாத்திரம் ஏற்பட்டிருப்பதையும் கொண்டு ரோகம் பலமானது அல்லது துர்ப்பலமானது என்று பேதம் கூறுதல் பல ஸம்ப்ராப்தியாகும்.[5] வியாதியானது இரவிலாவது, பகலிலாவது, ஒவ்வொரு ருதுவிலாவது, ஆஹாரம் உட்கொண்டபொழுதாவது இவ்வாறு ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்தில் அந்தந்த தோஷத்தின் தன்மைகளை அநுஸரித்து ஸம்பவிக்கும் வகையைக்கொண்டு, வியாதிக்குக் காலநிர்ணயம் செய்யும் முறையா

1. ஜ்வரத்தில் வாதாதி தோஷங்கள் அவற்றிற்குக் காரணமான பிரதிகூல பதார்த்தங்களால் அல்லது செயல்களால் கோளாறடைய (ஆமதோஷாதிகளால் வாதாதிகள் விகாரமடைய) அதனால் தேஹத்தில் ஸ்ரோதோமுகங்கள் என்னும் விணநீர்க்குழாய் முதலிய த்வாரங்களில் ஆமதோஷம் அபிவிருத்தியாய், அதனால் தாதுக்களில் இயற்கையில் ஸம்பவிக்கும் பாசகவேலை ஸ்திமிதப்பட்டு, உட்புற உஷ்ணவேகம் வெளியில் பரவவே ஜ்வரம் ஸம்பவிக்கின்றது என்பது இவ்வியாதியின் ஸம்ப்ராப்தியாகும்.

2. ஸங்க்யா ஸம்ப்ராப்தி—ஜ்வரம் எட்டுவிதம் என்றும், காஸம் ஐந்துவிதம் என்றும், குன்மம் எட்டுவிதம் என்றும் இவ்வாறு ஒவ்வொரு வியாதிக்கும் தோஷாதி விசேஷங்களி லேற்படும் வித்தியாஸங்களைக் குறிப்பிட்டு எண்ணிக்கையில் கூறப்படும் பேதம் ஸங்க்யா ஸம்ப்ராப்தியாம்.

3. விகல்ப ஸம்ப்ராப்தி—வாதாதி தோஷங்கள் தனித்தனியாகவோ, இரண்டிரண்டாகவோ, மூன்றும் ஒருமிக்கச் சேர்ந்தோ வியாதியை யுண்டுபண்ணுகையில் அவற்றின் பிரிவுகளையும், அவற்றுள் ஒவ்வொரு தோஷத்திற்குமுள்ள ஏற்றக்குறைவான அளவுகளையும் குறிப்பிடும் விஷயமாம். அல்லது வாதாதி தோஷங்கள் அதததற்குள்ள காரணங்களில் (ரூக்ஷ-இலகு-சீதாதிகளில்) எந்தெந்த அம்சத்தினால் கோளாறடைந்தன வென்று குறிக்கப்பட்டாலும் அது விகல்ப ஸம்ப்ராப்தியைச் சேர்ந்ததே.

4. பிரதாந ஸம்ப்ராப்தி—வியாதி சுதந்திரமானதென்றும், பரதந்திரமானதென்றும் இருவகைப்படும்; சுதந்திரமான (வாதாதிப்ரகோப ரூபமான) காரணங்களால் உண்டாகும் வியாதிகள் சுதந்திரங்கள்; ஒவ்வொரு வியாதியைக் காரணமாகக்கொண்டு உண்டாகும் மற்றொரு வியாதி பரதந்திரமாகும். சுதந்திரமான காரணத்தினால் அஜீர்ணம் உண்டாகும்; அஜீர்ணத்தினால் அதிஸாரம் உண்டாகலாம்; இவற்றுள் அஜீர்ணம் சுதந்திர வியாதியாகவும், அதிஸாரம் பரதந்திரவியாதியாகவும் கருதப்படுகின்றன. இவ்வாறு வியாதிகளுக்கு சுதந்திர பரதந்திர (பிரதான அப்பிரதான) பேதங்களைக் குறிப்பிட்டு விவரிக்கப்படும் விஷயமே ஸம்ப்ராப்தியாம்; ஆகவே பிரதான ஸம்ப்ராப்தி யென்று சொல்லும்போது தானாகவே அப்பிரதான ஸம்ப்ராப்தி யொன்று உண்டென்பதும் ஏற்படுகிறது. ஆகவே சுதந்திரமென்பதால் பிரதாந ஸம்ப்ராப்தியும், பரதந்திரமென்பதால் அப்பிரதாந ஸம்ப்ராப்தியும் குறிக்கப்படுகின்றன.

5. பல ஸம்ப்ராப்தி—(இதில் துர்பல ஸம்ப்ராப்தி யென்பதும் அடங்கியிருக்கிறது.) ஒவ்வொரு வியாதிக்கும் என்னென்ன காரணங்கள் உண்டோ, அவ்விதமே பூர்வரூப-ரூபாதிகள் எவ்வளவு உண்டோ அவையெல்லாம அந்தந்த வியாதியில் பூர்ணமாகக் கண்டிருந்தால் அது பலமான வியாதியாயிருக்குமாகையால், அது பல ஸம்ப்ராப்தி யென்றும், அவற்றில் ஏதாவது சில பாகங்கள் மாத்திரம் காணப்படுமானால் அந்த ஸம்ப்ராப்தி துர்பலமானதென்றும் கருதப்படும்.



னது காலஸம்ப்ராப்தி யென்று வழங்கப்படும்.[1] 10—13.

வியாதிக்குப் பொதுக் காரணங்கள்:—இங்ஙனம் மேற்கூறியவாறு நிதாநஸம்பந்தமான[2] விஷயம் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது. இனி இவ்விஷயங்களை விவரித்துக் கூறப்படும்.[3] எல்லா வியாதிகளுக்குமே, பிரகோபமடைந்த தோஷங்கள் காரணமாகும். அத்தோஷங்கள் பிரகோபமடைவதற்குக் காரணம் பலவிதமான ஹிதமல்லாத ஆஹாரங்களை உபயோகிப்பதும், அஹிதமான காரியங்களைச் செய்வதுமேயாம்.[4] 14, 14½.

ரோகமே வேறு ரோகத்திற்குக் காரணமாவது: ஒரு ரோகம் வேறு ரோகத்திற்கு நிதாநரூபமாகப் பலனில் முடிவதுண்டு.[5] அதெங்ஙனமெனில்—(1) ஜ்வரத்தின் கடுஞ்சூடானது, இரத்த-பித்தம் என்கிற வியாதியைக் கிளப்பிவிடும். (2) இரத்த-பித்தத்தைக் காரணமாகக் கொண்டு ஜ்வரமும் உண்டாவதுண்டு. (3) ஜ்வரம், இரத்த-பித்தம் இவ்விரண்டாலும் சோஷம் என்கிற இராஜயக்ஷ்மா காணும். (4) ப்லீஹம் வீங்குவதால் உதரரோகம் உண்டாகலாம். (5) மஹோதரத்தினால் சோதை யென்கிற வீக்கம் உண்டாகும். (6) அர்சஸ் என்கிற மூலவியாதியிலிருந்தும் உதரரோகம் உற்பத்தியாகலாம். (7) அர்சஸ் அங்ஙனமே குல்மரோகத்தையும் உண்டாக்கும்.

1. கால ஸம்ப்ராப்தி—எந்த தோஷம் பிரகோபமடைய எது அநுகூலமான காலமோ அக்காலத்தில் அத்தோஷம் வியாதியை உண்டுபண்ணலாம், அல்லது விருத்திபண்ணலாம். எப்படியென்றால்—கபஜ்வரம் இரவின் ஆரம்பத்திலும், விடியற்காலத்திலும், புஜித்த ஸமயத்திலும், வஸந்தருதுவிலும் விருத்தியாகும் அல்லது உண்டாகும். கால ஸம்ப்ராப்திக்கு வேறு விவரமான உதாரணமும் கூறலாம்:—இராத்ரியின் ஆரம்பத்தில் கபமும், மத்தியில் பித்தமும், இறுதியில் வாதமும் விருத்தியடையும். பகலிலும் இதே கிரமத்தில் தோஷங்கள் பிரகோபிக்கும். ருதுக்களில் வஸந்தருதுவில் கபமும், சரத்ருதுவில் பித்தமும், வர்ஷருதுவில் வாயுவும் முறையே விருத்தியடையும். அங்ஙனமே போஜநம் செய்தவுடனே கபமும், உணவு ஜீர்ணமாகையில் பித்தமும், ஜீர்ணமான பிறகு வாதமும் பிரகோபிக்கும். இவைகளைக் கொண்டு அந்தந்த வியாதியில் வாதாதி தோஷங்களுக்குள்ள நிலைமைகள் காலபேதத்தை அநுஸரித்து வித்தியாஸப்படுமாகையால், இது ஸம்பந்தமான ஸம்ப்ராப்தி கால ஸம்ப்ராப்தி யெனப்படுகிறது.

2. நிதாநம் என்பதால் பஞ்ச லக்ஷணங்கள் என்னும் காரண-பூர்வ ரூபாதிகள் ஐந்தும் குறிக்கப்படுகின்றன.

3. இனி ஜ்வர நிதாநம் முதலிய பிரகரணங்களில் விவரிக்கப்படும் விஷயங்கள் எனக் கருத்து.

4. இதனால் ரோகத்திற்கு ஸந்நிக்ருஷ்டம் விப்ரக்ருஷ்டம் என்கிற இரண்டு காரணங்கள் குறிக்கப்படுகின்றன. பிரகோபமடைந்த வாதாதி தோஷங்கள் ஸந்நிக்ருஷ்ட காரணங்கள்; அத்தோஷங்களைக் கோளாறடையச் செய்யும் அஹிதமான ஆஹார விஹாரங்கள் விப்ரக்ருஷ்ட காரணங்கள். 'எல்லா வியாதிகளுக்குமே' என்பதால் வாதாதி தோஷங்களின் கோளாறைக் காரணமாகப் பெறாத ரோகமே இல்லை யென்று கூறப்படுவதாய் அறிக. "நாஸ்தி ரோகோ விநா தோஷை:" (தோஷஸம்பந்தமில்லாத வியாதியே கிடையாது) என்கிற சரகவாக்கியம் இதற்குப் பிரமாணம். அடிபட்டு உண்டாகிற விரணம் முதலிய ஆகந்துக விகாரங்களில் முதலில் தோஷப் பிரகோபமில்லை யென்றாலும், அடி தாக்கிய பிறகு (காயம் ஏற்பட்டதன் மூலமாய்) உடனே வாதாதி தோஷங்கள் கோளாறடைவது நிச்சயம். தேஹதாதுக்களைத் தூஷிப்பிக்குந் தன்மையுள்ளவையாதலால் பித்த-கபங்களுக்கு தோஷங்கள் என்கிற பெயர் வந்ததென்றும், அவை ஒவ்வொருவருடைய தேஹத்தில் எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்கின்றன வென்றும் கூறப்படுகிறது; அப்படியானால், அத்தோஷங்கள் ஸந்நிக்ருஷ்ட காரணங்களாகவும் இருப்பதால், அவை தேஹத்தில் எப்பொழுதுமே வியாதியை உண்டு பண்ணிக் கொண்டிருக்குமல்லவா என்று கேள்வியுண்டாகும். இவ்வித ஸந்தேஹத்திற்கு இடமுண்டாகக் கூடாதென்றே 'பிரகோபமடைந்த தோஷங்கள்' (அல்லது கோளாறடைந்த தோஷங்கள்) என்று மேலே குறிக்கப்பட்டது. வாதாதி தோஷங்கள் இயற்கை நிலைமையில் இருந்துவரும் வரையில் அவை தேஹத்திற்கு அநுகூலமானவையே; அவை எப்பொழுது கோளாறடைகின்றனவோ அப்பொழுதுதான் வியாதிக்கு அவை காரணங்களாகும். அவை தானாகவே கோளாறடையமாட்டா; ஆனால் பலவித அஹிதமான ஆஹார-விஹாரங்கள் அத்தோஷங்கள் கோளாறடைவதற்குக் காரணங்களாம்.

5. முதலில் உண்டான ஒரு ரோகம் விருத்தியாய் (அல்லது தகுந்த சிகித்ஸை செய்யாமல் அலக்ஷியம் செய்யப்பட்டதால்) பலமான வேறு ஹேதுக்களையும் பெற்று நிதாநம் அல்லது காரணத்தைப் போலவே புதிய வியாதியை அல்லது வியாதிகளை யுண்டுபண்ணுமாகையால் 'நிதாநரூபமாய் பலனில் முடிவதுண்டு' எனக் கூறப்பட்டது. இதை ஸம்ஸ்கிருதத்தில் "நிதாநார்த்தகரம்" என்பார்கள்.

பகல் நித்திரை முதலிய தகாத செயல்களால் ப்ரதிச்யாயம் உண்டாகும்.[1] ) (8) ப்ரதிச்யாயத்தினால் காஸமும் (9) காஸத்தினால் தாது க்ஷீணமும் தோன்றுவதுண்டு. (10) தாது க்ஷீணம் இராஜயக்ஷ்மாவுக்கும் காரணமாகும். ஆகவே அவை முதலில் ரோகமாயிருந்து, பிறகு வேறு ரோகங்களை யுண்டுபண்ணுவதற்கான காரணங்களின் வேலையைச் செய்யும் 15-18½.

வியாதி ஸங்கரம் முதலிய விசேஷம்:—(1)ஒரு ரோகம் மற்றொரு ரோகத்திற்குக் காரணமாயிருந்து, அதை யுண்டுபண்ணிவிட்டு முதலில் உண்டான அந்த ரோகம் தானே தணிந்து விடுவதுண்டு. (2) மற்றொரு வகையான ரோகமுமுண்டு; அதில் முதலில் உண்டான வியாதி வேறொரு ரோகத்திற்குக் காரணமாயிருந்து அதை உண்டாக்கிவிடுவதோடு தானும் தணியாமலே நிலைத்திருக்கும். இவ்விதமாக மனிதர்களுக்குப் பலவகையில் பெருந்தொல்லை யளிக்கக் கூடிய மிச்ரமான வியாதிகள் காணும். ஆகையால் வியாதிகளைத் திறமையுடன் சிகித்ஸித்துத் தமக்கும் பிணியாளருக்கும் நன்மை பயக்க விரும்பும் உத்தம வைத்தியர்கள் ஜ்வரம் முதலிய ரோகங்களைப்பற்றி இனி விவரிக்கப்படும் நிச்சயார்த்தங்களைப் படித்தறிவாராக.[2] 19—21.

## 2. ஜ்வர நிதானம்.

ஜ்வரத்தின் விப்ரக்ருஷ்ட நிதானம்:—முன்னொரு கால் தக்ஷப்பிரஜாபதியினால் ருத்ரன் அவமதிக்கப் பெற, அதனால் அவர் சினங் கொண்டார்; அச்சமயம் அவர் வெளி விட்ட பெருமூச்சானது வாத-பித்த-கபங்களால் தனித்தனியே மூன்று வித ஜவரங்களையும், த்வந்த்வ தோஷங்களால் மூன்று வித ஜ்வரங்களையும், ஸந்நிபாதத்தினால் ஒன்றையும், ஆகந்துக காரணத்தினால் ஒன்றையும் ஆக எட்டு வித ஜ்வரங்களை ஆதியில் உண்டு பண்ணுவதற்குக் காரணமாயிருந்ததென்று கருதப்படுகிறது.[3]

1. () இக்குறிகளுக்குள் அடங்கியுள்ள விஷயம் மாதவகரனால் எழுதப்படாத பிரக்ஷிப்தம் எனக் கருதப்படுகிறது. இங்ஙனமே இதன்பிறகும்() இவ்விதமான குறிகளுக்கிடையில் எழுதப்பட்டிருப்பவை யெல்லாம் பிரக்ஷிப்தங்களாகக் கருதப்படுபவை யென்றறிக.

2. வாதாதி தோஷ ஸ்வரூபங்கள்:— இனி ஒவ்வொரு பிரகரணத்திலும் கூறப்படும் வியாதிகளுக்கெல்லாம் வாத- பித்த-கபங்களுடைய ஸம்பந்தம் நியதமாகக் கூறப்படும்; ஆகவே இத்தோஷங்களுடைய (வாத-பித்த-சிலேஷ்மங்களுடைய) குணங்களையும், அவற்றிற்கு எதிரிடையான குணங்களையும் படிப்பவர் தெரிந்துகொள்வது அவசியமெனக் கருதி, அவற்றைச் சுருக்கமாக இங்கு விவரிக்கின்றோம்:— வாதத்தின் குணங்கள்: ரூக்ஷம் (பசையற்றது), சீதம். இலகு (இலேசு), ஸூக்ஷ்மம்,சலம் (அசைவு), விசதம் (தெளிவு), கரம் (உரப்பு) இவையாம். இக்குணமுள்ள வஸ்துக்களால் வாயு விருத்தியாகும். ஸ்நிக்த்தம் (பசையுள்ளது), உஷ்ணம், குரு (பாரமானது), ஸ்த்தூலம், ஸ்த்திரம் (அசைவற்றது),பிச்சிலம்,மிருது இவை ரூக்ஷாதிகளுக்கு முறையே எதிரிடையான குணங்கள். பித்தத்தின் குணங்கள்: ஸ்நிக்த்தம், உஷ்ணம், தீக்ஷ்ணம், திரவம், அம்லம், ஸரம் (தானே நாற்புறமும் பரவக்கூடியது),கடுரஸம் ஆக இவையாம். ரூக்ஷம், சீதம், மந்தம், கநம், க்ஷாரம், ஸ்திரம், மதுரரஸம் இவை முற்கூறிய ஸ்நிக்த்தாதிகளுக்கு முறையே எதிரிடையானவை. கபத்தின் குணங்கள்: குரு, சீதம், மிருது, ஸ்நிக்த்தம், மதுரம், ஸ்த்திரம்,பிச்சிலம். இவற்றிற்கு எதிரிடையான குணங்களாவன:—இலகு, உஷ்ணம், கடினம், ரூக்ஷம், திக்தம், சலம், கரம் இவை கபத்தைக் குறைக்குந் தன்மையன.

3. ஜ்வரமானது பொதுப்பட ரோகமனைத்திலும் பிரதானமாயிருப்பதால், அவ்விஷயம் முதன் முதல் எடுத்துக் கொள்ளப்பட்டது. சாரீரமான ரோகங்களில் பெரும்பான்மையானவற்றைத் தொடர்ந்துண்டாவது, தேஹத்தையும் மனதையும் தபிக்கச் செய்வதில் முக்கியமாயிருப்பது, ஒவ்வொருவனும் ஆயுள்



ஜ்வர ஸம்ப்ராப்தி:—உண்பதிலும் க்ரியைகளிலும் ஏற்படுகிற மித்தியாயோகங்களால்[1] ஆமாசயம் என்கிற குடலை (இரைப் பையை)ப் பற்றிய தோஷங்கள்[2] குடலிலுள்ள ஜாடராக்கினி யென்னும் உஷ்ணத்தை வெளியில் தள்ளி, இரஸம் என்கிற தாதுவைத் தொடர்ந்து தேஹத்திற் பரவி ஜ்வரத்தை உண்டு பண்ணுகின்றன.[3] 2.

காலத்தில் எப்பொழுதேனும் இதை ஒரு முறையாவது அனுபவிக்க நேரிடுவது, ஸர்வப் பிராணிகளுக்கும் ஒவ்வொருவகையில் உண்டாவதுஎன்கிற இவை முதலிய முகாந்தரங்கள் ஜ்வரம் வியாதிகளுள் பிரதானமானது எனக் கூறுவதற்கு ஆதாரங்களாம். மற்ற வியாதிகள் இங்ஙனம் நியதமாய் உண்டாவதில்லை. "தேஹேந்த்ரிய மநஸ்தாபீ ஸர்வரோகாக்ரஜோ பலீ, ஜ்வர: ப்ரதாநோ ரோகாணாம் உக்தோ பகவதா புரா" என்கிற சரகவாக்கியம் இதற்குப் பிரமாணமாகும். "ஜ்வரம் என்கிற வியாதியினால் பீடிக்கப்படாத பிராணிவர்க்கமே கிடையாது" (ஜ்வரேணாவிசதா-பூதம் நஹி கிஞ்சிந் ந தப்யதே) என்றும் சரகர் கூறுகிறார். ஆனால் ஒவ்வொரு ஜந்துவுக்கு உண்டாகும் ஜ்வரம் ஒவ்வொரு வித பாரிபாஷிகப் பெயரால் வழங்கப்படுகிறது. யானைக்கு உண்டாகும் ஜ்வரம் பாகலம், குதிரைக்குண்டாவது அபிதாபம், பசுவுக்குண்டாவது ஈச்வரம், ஆடுகளுக்குண்டாவது ப்ரலாபம், ஒட்டகத்துக்குண்டாவது அலஸம், எருமைமாட்டுக்குண்டாவது ஹாரித்ரம், மான்களுக்குண்டாவது மிருகரோகம், பக்ஷிகளுக்குண்டாவது அபிகாதம், மத்ஸ்யங்களுக்குண்டாவது இந்த்ரமதம், குதித்தோடும் சில பறவைகளுக்குண்டாவது பக்ஷபாதம், ஸர்ப்பத்திற்குண்டாவது அக்ஷிகம், மனிதனுக்குண்டாவது ஜ்வரம்; ஆக இவ்விதம் எல்லாப் பிராணிகளையுமே ஜ்வரம் ஸாதாரணமாய் வருந்தச் செய்கிறது. தக்ஷயாகம் செய்கையில், தனது ஜாமாதாவான (தாக்ஷாயணியின் பர்த்தாவான) சிவபெருமானை அதற்கு அழைக்காமல் அவமானப்படுத்தவே, அக்குற்றத்தைத் தாங்காத சிவபெருமான் வெகு கோபாவேசங் கொண்டு பெருமூச்செறிய, அவ்விஷவாயுவானது ஆதியில் ஜ்வரங்களுக்குக் காரணமா யேற்பட்டதாகக் கருதப்படுகிறது. சரகத்தில் இந்த ஐதிஹ்யம் ஜ்வரசிகித்ஸாப் பிரகரணத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகிறது. இதனால் ஜ்வரத்திற்கு ஆதிகாரணமான விப்ரக்ருஷ்ட காரணம் கூறப்பட்டது. இனி பின்னால் தோஷக்கோளாறு ஸம்பந்தமான ஸந்நிக்ருஷ்ட காரணங்கள் மொழியப்படும். ஐதிஹ்யப் பிரதானமான இவ்விப்ரக்ருஷ்ட நிதானத்தினால் சிகித்ஸை முதலியதில் எவ்விதப் பிரயோஜனமுமில்லை யெனக் கருதி சிலர் ஒருவித யுக்தி சொல்லுவதுண்டு; அதாவது கோபத்திலிருந்து உண்டானதெனக் குறிப்பிடுவதால், பித்த ஸம்பந்தமான உஷ்ணவேகம் பொதுவாக இவ்வியாதிக்கு உண்டென்பது ஸூசிப்பிக்கப்படுகிறதென்றும், ஆகவே பொதுவாக எல்லா ஜ்வரங்களிலுமே பித்தகுணமுள்ள அனைத்தையும் விலக்கவேண்டுமென்று விதியேற்பட்டிருக்கிறதென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். பலவித விஷமஜ்வரங்களும், தாதுகத ஜ்வரங்களும், ப்ராக்ருத-வைக்ருத-அந்தர்தாஹ-பஹிர்தாஹாதி ஜ்வரங்களும், வாபலாஸக-ப்ரலேபகாதி ஜ்வரங்களும் அநேக விதமாய் விவரிக்கப்படப் போகின்றன; என்றாலும் தோஷங்களின் ஸம்பந்தத்தை மாத்திரம் ஒருவாறு ஆதாரமாக வைத்துக்கொண்டு சுருக்கமாக ஜ்வரம் எட்டு விதம் என்று இங்கே கூறப்படுகிறது.

1. மித்தியா யோகம்—எது எவருக்கு எந்த ஸமயத்தில் அநுகூலமானதோ அதற்கு நேர் எதிரிடையானது மித்தியாயோகம் ஆகும். ஆஹாரம் ஒருவனுக்கு ஸ்நிக்த்தமும் குரு குணமுமாயிருப்பது அநுகூலமாயிருக்க, அதை விடுத்து ரூக்ஷமும் இலகுகுணமுமுள்ளதான உணவு கொடுக்கப்படுமானால் அது மித்தியாஹாரம் எனப்படும். அவரவரது உடற்சக்தியை மீறி வியாயாமம் அல்லது தேஹவுழைப்பைச் செய்வது மித்தியா விஹாரம் எனப்படுகிறது. இவ்விரண்டும் "உண்பதிலும் க்ரியைகளிலும் ஏற்படுகிற மித்தியாயோகங்கள்" எனக் குறிப்பிடப்பட்டன.

2. இங்கே 'ஆமாசயம்' என்பது இரைப்பையேயானாலும், அதனால் பொதுப்பட நாபிக்கும் மார்புக் குழிக்கும் இடையிலுள்ள குடலின் அம்சமே முக்கியமாய்க் குறிக்கப்படுகிறது.

3. இந்த ஸம்ப்ராப்தியானது பெரும்பாலும் சாரீர ஜ்வரங்களான எட்டுவித ஜ்வரங்களுக்கே ஸம்பந்தப்பட்டதாகும். பிறகு விவரிக்கப்படும் விஷம ஜ்வரங்கள் என்கிற ஆகந்துக ஜ்வரங்களில் பெரும்பாலும் வியாதி முன்னதாகவும், காரணம் சற்றுப் பிந்தியும் தோற்றுவது இயல்பாகையால், இந்த ஸம்ப்ராப்தி சாரீர ஜ்வரங்களுக்கே பெரும்பாலும் ஸம்பந்தப்பட்டதெனக் கருதவேண்டும். ஆகவே ஸுச்ருதத்தில் ஆகந்துக ஜ்வரங்களின் ஸம்ப்ராப்தி ப்ரத்யேகமாக மொழியப்படுகிறது:—"சிரமம், காயம்படுதல், வேறு விதமான அபிகாதங்கள் இவற்றால் மனிதருடைய தேஹத்தில் ப்ரகோபித்த வாயுவானது உடலெங்கும் நிரம்பவும் பரவி, கடுமையான ஆகந்துக ஜ்வரத்தை யுண்டு பண்ணும்" என்கிறார் ஸுச்ருதர். சரகத்திலும் "அவற்றின் அபிகாதத்தினால் ப்ரகோபித்த வாதம் விசேஷமாக இரத்தத்திற் பரவி அதைக் கோளாறடையச் செய்து வலி, வீக்கம், நிறமாறுபாடு முதலியவற்றோடு கூடிய ஜ்வரத்தை யுண்டு பண்ணும்" எனக் கூறப்படுகிறது. "ஆகந்து ஜ்வரம் முதலில் கடுமையான நோவுடன் ஆரம்பிக்கும்; அது எட்டாவதாகக் கருதப்படுகிறது. அது சிறிது காலம் முதலில் ஸாதாரண ஆகந்து ஜ்வரமாயிருந்து, பிறகு வாதாதி தோஷங்கள் கோளாறடைந்து அவற்றால் தொடரப்பட்டு சாரீர ஜ்வரம் போலவே ஆய்விடுகிறது" என்று ஆயுர்வேதஞ்ஞர் கூறுவர்,

ஜ்வரத்தின் ஸாமாந்ய லக்ஷணம்[1] :—எந்த ரோகத்தில் வியர்வை வெளிப்படாமல் தடையுறுதல், வெப்பம் கடுமையாக விருத்தியாதல், அவயவங்கள் தோறும் வேதனையும் பிடிப்பும் காணுதல் ஆகிய இக்கோளாறுகள் ஒருமிக்கத் தோன்றுகின்றனவோ அது ஜ்வரம் எனக் கூறப்படுகிறது. 3.

ஜ்வரத்தின் ஸாமாந்ய பூர்வரூபம்:—[2] அலுப்பு, அமைதியின்மை, தேஹம் நிறம் மாறி வாட்ட முறுதல், நாக்கு அருவருப்பான சுவை கொள்ளுதல், கண்களில் நீர் ததும்புதல், குளிர்ச்சியிலும் காற்றிலும் வெயிலிலும் மற்றவைகளிலும் விருப்பும் வெறுப்பும் அடிக்கடி மாறி மாறியுண்டாதல், கொட்டாவி, தேஹம் பாரமாகத் தோற்றுதல், உடலெல்லாம் வேதனை, மயிர்ச்சிலிர்த்தல், அரோசகம், கண் இருளடைதல், மனதிற் களிப்பின்றி வெறுப்புண்டாதல் குளிர் நடுக்குதல் ஆக இக்குறிகள் ஜ்வரம் உண்டாவதற்கு முன்பாகக் காணும். 4, 5.

ஜ்வரத்தின் விசேஷ பூர்வரூபங்கள்:—வாத தோஷத்தினால் உண்டாகப் போகிற ஜ்வரத்தில் அதிக கொட்டாவியும், பித்தத்தினால் உண்டாகப் போவதில் கண்களில் மிகுதியான அழற்சியும், கபத்தினால் உண்டாகப் போகும் ஜ்வரத்தில் உணவில் அதிக அருவருப்பும் உண்டாகும். இவற்றுள் எந்த இரட்டைக் குறிகள் சேர்ந்து தோன்றினாலும், உண்டாகப் போகிற ஜ்வரம் த்வந்த்வ தோஷ ஸம்பந்தமானதெனக் கூறலாம்.[3] எல்லாத் தோஷங்களும் பிரகோபித்து உண்டாகப் போகிற ஸந்நிபாத ஜ்வரத்திற்கு முற்கூறிய பூர்வ ரூபக் குறிகள் யாவும் சேர்ந்து முற்குறியாகக் காணும்.[4] 6, 7.

வாத ஜ்வர லக்ஷணம்:—நடுக்கல், ஒழுங்கீனமான காலங்களில் ஜ்வரவேகம் அதிகரித்தல், தொண்டையும் உதடுகளும் வறண்டுபோதல், நித்திரையின்மை, தும்மலுண்டாகாமை, அவயவங்கள் திமிர்த்து ரூக்ஷமாதல், சிரஸ் இருதயம் மற்றுமுள்ள அவயவங்கள் இவற்றில் வேதனை, வாய் அருவருப்பு கொள்ளுதல், மலம் இறுகுதல், வயிற்றில் வலியும் பொருமலும் தோன்றல், கொட்டாவி ஆக இக்குறிகள் வாதத்தினால் உண்டாகிற ஜ்வரத்திற்காணும். 8. 9.

பித்த ஜ்வர லக்ஷணம்:—கடுமையான ஜ்வர வேகம், அதிஸாரம்,[5] சொற்பநித்திரை, வாந்தி, தொண்டை உதடுகள் வாய் நாசி இவற்றில் அழற்சி, அதிக வியர்வை, வாய்ப் பிதற்றல், வாயில்கடுரஸம் அல்லது கைப்பு, மூர்ச்சை, அதிக அழற்சி, வெறி, நாவறட்சி, மலமும் மூத்திரமும் நேத்திரங்களும் மஞ்சள் நிறமாதல், தலைச்சுற்றல் ஆக இக்குறிகள் பித்தத்தினாலுண்டாகும் ஜ்வரத்திற் காணும், 10, 11.

சிலேஷ்ம ஜ்வர லக்ஷணம்:—உடம்பு திமிர்த்தல், ஜ்வரம் மந்தமாகக் காணுதல், சோம்பல், வாய் இனிப்பாயிருத்தல், மல மூத்திரங்கள் வெளிறியிருத்தல், உடல் ஸ்தம்பித்தல், வயிறு நிரம்ப உணவுண்டதுபோல் எப்பொழுதும் உணர்ச்சி, தேஹத்திற் சூடு அதிகமா

1. ஜ்வரத்தின் ஸாமாந்ய லக்ஷணம்—ஜ்வரத்தின் பொதுக்குறி. ஜ்வரத்திற்கான வாதாதி தோஷங்களின் ஸம்பந்தம் இக்குறிகளால் அறியப்பட மாட்டாது.

2. வாதாதி தோஷங்களின் ஸம்பந்தத்தையும், ஆகவே அவற்றாலான பேதங்களையும் குறிப்பிடாத பொதுவான பூர்வரூபம் எனப் பொருள்.

3. வாத-பித்த ஜ்வரத்தில் கொட்டாவியும் கண்ணெரித்தலும், வாத-கபஜ்வரத்தில் கொட்டாவியும் அரோசகமும், பித்த-கபஜ்வரத்தில் கண்ணெரித்தலும் அரோசகமும் முறையே பூர்வரூபங்களாகத் தோன்றும் எனப் பொருள். ஆகவே இம்மூன்றும் த்வந்த்வ தோஷங்களாம். த்வந்த்வம் என்றால் இரட்டையெனப் பொருள். த்வந்த்வம் என்பதே ஸம்ஸர்கம் அல்லது ஸம்யோகம் என்கிற பரிபாஷைகளாலும் வழங்கப்படும்,

4. கொட்டாவி, கண்ணெரித்தல், அரோசகம் இம்மூன்றும் ஒருமிக்க மிகைபடத் தோன்றினால் உண்டாகப்போவது ஸந்நிபாத ஸம்பந்தமான ஜ்வரம் என்றறிக எனக் கருத்து. மூன்று தோஷங்களுடைய ஒருமித்தக் கோளாறு ஸந்நிபாதம் என்று வழங்கப்படுகிறது.

5. பித்த தோஷப் பிரகோபத்தால் பித்த நீர் குடலில் மிதமிஞ்சிக் கசிவதால் மலம் திரவமாகப் போவதையே இந்த அதிஸாரம் குறிப்பிடுகிறது; இது உண்மையில் அதிஸாரமல்ல. ஜ்வரத்தில் அதிஸாரம் உண்டானால் அது ஜ்வரத்திற்கு உபத்திரவமாகும். அப்பொழுது அது ஜ்வராதிஸாரம் எனப்படும்,



யுண்டாகாதிருத்தல், வாந்தி, உடல் வாட்டம், அஜீர்ணம்,) தேஹம் பாரமாயிருத்தல், குளிர், வாயில் நீர் ஊறுதல், மயிர்ச்சிலிர்க்கை, அதிக நித்திரை, பிரதிச்யாயம் என்கிற நாஸிகா ரோகம், அரோசகம், காஸம், கண்கள் வெளுத்துப்போதல் ஆக இக்குறிகள் கபத்தினாலுண்டாகும் ஜ்வரத்திற் காணும். 12, 13.

வாத-பித்த ஜ்வர லக்ஷணம்:—நாவறட்சி, மூர்ச்சை, தலைச்சுற்றல், அழற்சி, நித்திரையின்மை, தலைவலி, தொண்டையும் வாயும் உலர்ந்து போதல், வாந்தி, மயிர்ச்சிலிர்க்கை, அரோசகம், கண் இருளடைதல், கணுக்கள் தோறும் வெட்டப்படுவது போன்ற வலி, கொட்டாவி இவை வாதம் பித்தம் இவ்விரண்டு தோஷங்களாலும் உண்டாகும் ஜ்வரத்தின் குறிகளாகும்.[1] 14, 14½.

வாத-கபஜ்வர லக்ஷணம்:—சரீரம் அசைவற்றுப் போதல், கணுக்களில் பிளக்கப்படுவது போன்ற வலி, அதிக நித்திரை, உடலில் குருத்வம், கழுத்துப் பிடிப்பு, ப்ரதிச்யாயம் என்கிற நாஸாரோகம், காஸம், வியர்வை உண்டாகாமல் தடைபடுதல்[2], ஜ்வர தாபம் மத்திம வேகமாயிருத்தல் ஆக இவை வாத-சிலேஷ்மங்களால் உண்டாகும் ஜ்வரத்திற் காணும் குறிகளாம். 15,16.

பித்த-கபஜ்வர லக்ஷணம்:—வாய் கபத்தினால் பூசப்பட்டும் பித்தத்தினால் கைப்பாக்கப்பட்டும் இருத்தல் சோம்பல், மூர்ச்சை, இருமல், அரோசகம், நாவறட்சி, அடிக்கொருவிதமாய் தேஹம் அதிக சூடாகவும் அதிக குளிர்ச்சியாகவும் ஆதல் ஆக இவை பித்த-ச்லேஷ்மங்களால் உண்டாகும் ஜ்வரத்திற் காணும் குறிகளாகும். 17.

ஸந்நிபாத ஜ்வரலக்ஷணம்:—ஒரு க்ஷணத்தில் உஷ்ணம் அதிகரிக்கும்; அடுத்த க்ஷணத்தில் சைத்யம் மேலெழும்; அஸ்திகளிலும், பூட்டுகளிலும், தலையிலும் வலியுண்டாகும் ; கண்கள் நீர்ததும்பி, கலங்கி, செந்நிறங் கொண்டு விரிந்து வளைந்திருக்கும் ; செவிகளில் ஒருவித ஓசையும் குத்தலும் எடுக்கும் ; தொண்டையில் முட்கள் போன்ற முளைகள் சூழ்ந்திருப்பதுபோல் தோன்றும் ; சோம்பல், மூர்ச்சை, வாய்ப்பிதற்றல், காஸம், ச்வாஸம், அரோசகம் தலைச்சுற்றல் இவ்விகாரங்கள் காணும் ; நாக்கு மிகவும் அழன்றுபோய், பரிசிப்பதற்கு வறட்சியுடன் சொரசொரப்புள்ளதா யிருக்கும் ;

1. இங்கே மயிர்ச்சிலிர்க்கை, கணுக்கள் தோறும் வலி முதலிய சில குறிகள் வாத ஜ்வரத்திலாவது பித்த ஜ்வரத்திலாவது குறிப்பிடப்படாதவை. வாத ஜ்வரத்திலும் பித்த ஜ்வரத்திலும் காணும் குறிகள் முற்றிலுமோ சிறுபான்மையோ ஸாதாரணமாய் வாத-பித்த ஜ்வரத்திற் கலந்து காணுவது முறை. அங்ஙனமே வேறு சில குறிகள் காணுமானால், அவை "விக்ருதி விஷம ஸமவாயத்தினால் ஏற்பட்ட குறிகள்" எனப்படும். இதே விதமாக வாத-கபஜ்வரம், பித்த-கபஜ்வரம், ஸந்நிபாத ஜ்வரம் முதலியவற்றிலும், இதன் பிறகு விவரிக்கப்படும் த்வந்த்வ-ஸந்நிபாத ஸம்பந்தமான இதர வியாதிகளிலும் விசேஷக் குறிகள் ஏதேனும் கூறப்படுமானால் அவற்றையெல்லாம் "விக்ருதி விஷம ஸமவாயக் குறிகள்" என்றறிக [வியாதி லக்ஷணங்கள் ப்ரக்ருதிஸமஸமவாயாரப்த்தங்கள், விக்ருதி விஷம ஸமவாயாரப்த்தங்கள் என்று இருவகைப்படும். (1) வாதாதி தோஷம் முதலிய காரணங்களுடைய குணங்களுக்கு ஏற்றவையாக வியாதி லக்ஷணங்கள் தோன்றினால் அவை ப்ரக்ருதி ஸம ஸமவாயாரப்த்தங்கள். (2) வாதாதி தோஷம் முதலிய காரணங்களுடைய குணங்களுக்கு ஸம்பந்தப்படாத வேறு லக்ஷணங்கள் வியாதிக்குத் தோன்றினால் அவை விக்ருதி விஷம ஸமவாயாரப்த்தங்கள்.]

2. மூலக்கிரந்தத்தில் "ஸ்வேதாப்ரவர்த்தநம்" என்று இருக்கிறது. இதற்கு "வியர்வை உண்டாகாமை" என்பதுதான் ஸாதாரணமாகச் சொல்லக் கூடிய பொருள். ஆனால் ஹாரீத ஸம்ஹிதை முதலியதில் இவ்வியாதியில் ஸ்வேதம் விசேஷமாயுண்டாவதாகக் கூறப்பட்டிருப்பதை அநுஸரித்து, "ஆஸமந்தாத் ஸ்வேதப்ரவர்த்தநம்" என்கிற வ்யுத்பத்தியால் "ஸ்வேதாப்ரவர்த்தநம்" என்பதற்கு "வியர்வை அதிகமாயுண்டாதல்" என்று விஜயரக்ஷிதனால் பொருள் கூறப்படுகிறது. வாத-கபஜ்வரத்திற்கு வியர்வை உண்டாவதற்கு நியாயமில்லை; என்றாலும் வியர்வை அதிகமாயுண்டாவதற்கு விக்ருதி விஷம ஸமவாயச் செய்கையை அந்த வியாக்யாதா ஆதாரமாகக் கூறுகிறார்.

அவயவங்கள் மிகவும் சோர்வடையும்; இரத்தமும் பித்தமும் எச்சில் துப்பும்போது வெளிவரும்; அவற்றுடன் சிலேஷ்மம் கலந்து வருவதுமுண்டு; தலை புரட்டியசைக்கப்படும்; நாவறட்சி, நித்திரையின்மை, இருதயத்தில் வேதனை இவையும் தோன்றும்; வியர்வை மலம் ஜலம் இவை எப்பொழுதாவது அரிதாகவும் சொற்பமாகவும் வெளியாகும்; அவயவங்கள் வியாதியின் கடுமைக்குத் தகுந்தவாறு அவ்வளவு இளைத்திருக்கமாட்டா; எப்பொழுதும் கத்திக் கூவுவான்; சரீரத்தில் கறுப்பாகவும் சிவப்பாகவு முள்ள தழும்புகளும் படைகளும் காணும்; பேசுதல் மந்தப்படும் அல்லது முற்றிலும் தடையுறும்; ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற வாய், நாசி, செவி, குதம், நீர்த்வாரம் முதலியவை அழன்றுபோகும், வயிற்றில் குருத்வமுண்டாகும்[1]; வாதாதிதோஷங்கள் மிக்க மெதுவாகப் பக்குவநிலைமையடையும்; இவை முதலியவை ஸந்நிபாதஜ்வரத்தின் குறிகளாகும்.[2] 18—23.

1. தோஷங்கள் அமாசயத்தைப்பற்றி முதலில் ஜ்வரத்தை உண்டுபண்ண ஆரம்பிக்கின்றன வென்று முன்பு ஜ்வர ஸம்ப்ராப்தியில் கூறப்பட்டது. ஆகவே ஜ்வர ஆரம்பத்தில் தோஷங்கள் ஆமதோஷமுள்ளவைகளாகவும், பிறகு கிரமமாக ஜ்வரம் தணிவடைய வேண்டிய ஸமயத்தில் அத்தோஷங்கள் பக்குவாவஸ்தையைப் பெறுபவைகளாகவும் ஆவது இயல்பு. தோஷஜமான மற்ற ஜ்வரங்களில் தோஷங்கள் சீக்கிரம் (எழெட்டு தினங்களில்) பக்குவமாகும்; ஸந்நிபாத ஜ்வரம் மூன்று தோஷப் பிரகோபத்தினால் ஏற்பட்ட கடுமையான வியாதியானதால், இதில் தோஷங்கள் எளிதில் பக்குவமாகாமல் வியாதியை நீடிக்கச் செய்வதோடு, ரோகிக்குப் பிராணஸங்கடங்களை யுண்டு பண்ணவும் காரணமாகும் என்பது இதன் கருத்தாகும்.

2. "இவை முதலியவை" என்பதால் வேறு சில குறிகளும் உண்டென்று ஸூசிப்பிக்கப் படுகிறது. அவையாவன:—" * * * பகலில் மிதமிஞ்சிய நித்திரையும், இரவில் கண்விழித்திருத்தலும், அல்லது எப்பொழுதுமே தூங்குவதும், அன்றேல் எப்பொழுதுமே முற்றிலும் நித்திரையின்மையும் ஏற்படுவதுண்டு; வியர்வை மிகுதியாயுண்டாவதும், அல்லது முற்றிலு முண்டாகாமற் போவதுமுண்டு; பாடுதல், கூத்தாடுதல், சிரித்தல் முதலிய இயற்கைக்கு விரோதமான சேஷ்டைகளைச் செய்வதுண்டு * * *" என்று வாக்படர் கூறும் குறிகள் இங்கு கிரஹிக்கப்படுவதாய் அறிக. மேலும் ஸந்நிபாத ஜ்வரத்தில் உண்டாகும் விகாரங்கள் நியமமின்றி இன்னும் பலவாறாகத் தோன்றும். ஆகவே ஸுச்ருதர் கூறும் லக்ஷணங்கள் சிறிது வேறுபாடுடையவைகளா யிருக்கின்றன; அவையாவன.—"ஸந்நிபாதஜ்வரத்தால் வருந்துபவனுக்கு உஷ்ணமாவது சைத்தியமாவது மிக்க அதிகமாயிராது; ஞாபகசக்தி சொற்பமாயிருக்கும், பார்வை பிரமங்கொள்ளும்; தேஹகாந்தி மழுங்கும்; நாக்கு மிகச் சுரசுரப்பாயிருக்கும்; தொண்டைவறளும்; வியர்வையும் மல ஜலங்களும் அடைபடும்; கண்கள் விரிந்து குடிலமாயிருப்பதோடு அவற்றில் நீரும் ததும்பும்; அன்னத்வேஷ முண்டாகும்; குரல் விழுந்து போம்; பெருமூச்செறிந்த வண்ணம் திடீரென்று வீழ்வான்; வாய்ப்பிதற்றலும் வேறு உபத்திரவங்களும் தொடரும்; இக்குறிகளுடன் கூடிய வியாதியை அபிந்யாஸம் என்று சிலரும், ஹதௌஜஸ் என்று வேறு சிலரும், ஸந்நிபாதஜ்வரம் என்று மற்றும் சிலரும் வழங்குகிறார்கள். இந்த வியாதி வெகு கஷ்ட ஸாத்தியமானதென்று ஒரு சாராரும், சிகித்ஸைக்கு முற்றிலும் வசப்படாதது (அஸாத்தியம்) என்று வேறொரு சாராரும் அபிப்பிராயப் படுகிறார்கள்." ஸந்நிபாதஜ்வரத்தில் தோஷங்களின் ஸம்யோகத்திலுள்ள தாரதம்யங்களைப் பகுத்துணர்ந்து பாலுகி தந்த்ரம் என்கிற நூலில் மொழிந்துள்ளபடி விஜயரக்ஷிதர் எடுத்து இங்ஙனம் சில பேதங்களைக் குறிப்பிடுகிறார்.—"(1) ஸந்நிபாதஜ்வரத்தில்கபத்தைவிடவாத-பித்தங்கள் இரண்டும் மிக்க மேலாகப் பிரகோபித்திருந்தால் தேஹதாபம், உடலெங்கும் துவைக்கப்படுவது போன்ற வேதனை, நாவறட்சி, தவடை யுலர்தல், சோம்பல், பொருமல், கண்கள் மூடிக்கொள்ளல், அரோசகம், ச்வாஸ-காஸம், தலைச்சுற்றல், சிரமம் இவையுண்டாம். இந்த ஸந்நிபாதத்திற்கு விது ஸந்நிபாதம் எனப் பெயர். (2) ஸந்நிபாதத்தில் பித்தமும் கபமும் பிரகோபித்திருந்தால், உள்ளே தாபமும் வெளியில் சைத்யமும் உண்டாய், சோம்பலும், வலது புறம் நெடுக வேதனையும், மார்பு கழுத்து சிரஸ் இவற்றில் பிடிப்பும், கபம் பித்தம் இவற்றைத் துப்புவதும், நாவறட்சியும், தொண்டை வலியும், மலக்கழிச்சலும், ச்வாஸமும், விக்கலும், உறக்கமும் உண்டாய் பிணியாளி வருந்துவான்; இது பல்கு ஸந்நிபாதம் எனப்படும். (3) வாதமும் கபமும் மிகவும் பிரகோபமடைந்துள்ள ஸந்நிபாதத்தில் குளிர் ஜ்வரம், அதி நித்திரை, பசி, நாவறட்சி, பார்ச்வப் பிடிப்பு, தலைபாரம், சோம்பல், பிடரியில் சுளுக்கு போன்ற பிடிப்பு, உறக்கம், வயிற்றில் அழற்சி, இடுப்பு வலி, வஸ்தி (மூத்திராசய) வேதனை இவை உண்டாகும்; மிகக் கொடிய இவ்வியாதி மகரீ ஸந்நிபாதம் எனப்படுகிறது. (4) வாததோஷம் மிகவும் பிரகோபித்த ஸந்நிபாதத்தில் நாவறட்சி, அதிக ஜ்வரம், தேஹச்ரமம், பக்கவலி, கண்பார்வை யழிதல், கால்களின் ஆட்டுச்சதைகளில் இசிவு, சுழற்சி, துடை சுஷ்கித்தல், தேஹபலம் க்ஷீணித்தல், மல மூத்திரங்களோடு இரத்தமும் கலந்து வருதல், வயிற்றுவலி, தூக்கமின்மை, குதத்தில் பிளக்கப்படுவது போன்ற வலி, வஸ்தி யென்கிற மூத்திரப்பை வலிக்கப்படுவது போன்ற நோவு, உடலெங்கும் இசிக்கப்படுவது



ஸந்நிபாத ஜ்வரத்தில் அஸாத்ய-கஷ்டஸாத்ய நிலைமைகள்:— (1) மலம் முற்றிலும் கட்டப்பட்டுப் போய், ஜாடராக்நியும் அவிந்துபோய், ஸந்நிபாதஜ்வரத்திற்குக் கூறிய லக்ஷணங்கள் அனைத்தும் குறைவின்றி தோன்றியிருந்தால், அந்த ஸந்நிபாதம் அஸாத்யமாகும்.[1] (2) இதற்கு மாறாய் வேறுவிதமாகக் குறிகள் கண்டால்[2] அது கஷ்டஸாத்யமான ஸந்நிபாதம் என்றறிக. 24.

ஸந்நிபாத ஜ்வரத்தின் காலாவதி:—(ஏழாவது தினத்திலாவது, பத்தாவது தினத்திலாவது பன்னிரண்டாவது தினத்திலாவது ஸந்நிபாத ஜ்வரம் மிகக் கடுமையான நிலைமையையடைந்து, மீண்டும் தணிவையாவது அடையும், உயிரையாவது போக்கிவிடும்.(1) வாத தோஷம் மேலிட்ட ஸந்நிபாதம் பதினறு நாட்களும், (2) பித்தாதிகமான ஸந்நிபாதம் பதினெட்டு நாட்களும, (3) கபாதிகமானது இருபத்திரண்டு நாட்களும் போராடி விடுவதற்கு அல்லது ரோகியைக் கொல்லுவதற்கு முறை

போன்ற வேதனை, உடல் பிளக்கப்படுவது போன்ற உணர்ச்சி, விக்கல், வாய்ப்பிதற்றல், மூர்ச்சை, தேஹம் விரிதல், கூச்சலிடுதல் இவையுண்டாகும்; இதற்கு விஸ்புரக ஸந்நிபாதம் என்று பெயர். (5) பித்தம் மிக்க பிரகோபமடைந்த ஸந்நிபாதத்தில் தேஹத்தில் உள்ளும்புறமும் தாபம் மிக்க விருத்தியாய் கடுமையாக ஜ்வரம் விருத்தியாய்விடும்; இந்நிலைமையில் தாபம் பொறுக்காமல் பிணியாளி சைத்தியோபசாரம் செய்து கொள்ள அதனால் கபமும் வாயுவும் பிரகோபமடையும்; அக்காரணத்தினால் விக்கல், ச்வாஸம், உறக்கம், விஷூசி, பூட்டுகளில் நோவு, வாய்பிதற்றல், உடம்பில் குருத்வம், உடல் வாட்டம் இவை தொடர்ந்துண்டாகும்; தேஹம் வியர்த்ததும் உடனே நாபியிலும், பார்சுவ பாகங்களிலும் வலி விருத்திபடையும்; வியர்க்கும்போது ஸ்ரோதோ மார்க்கங்களிலிருந்து (வாய்-நாசி-குஹ்ய ஸ்த்தானங்கள் முதலியவற்றிலிருந்து) இரத்தம் ஸ்ரவிக்கும்; வயிற்றுவலி யுண்டாகும்; அவ்வலியால் வருந்தும்போது நாவறட்சியும் அழற்சியும் அதிகமாகும்; இந்த ஸந்நிபாதம் அஸாத்தியமானது; இது சீக்ரகாரி ஸந்நிபாதம் எனப்படும்; இந்த ஸந்நிபாதம் தேஹத்திற் பற்றிய பிறகு அறுபது நாழிகைக்கு மேல் மனிதன் பிழைத்திரான். (6) கபம் மிகவும் பிரகோபித்த ஸந்நிபாதத்தில் குளிர் ஜ்வரம், அமித நித்திரை, ஆலஸ்யம், சோம்பல், வாந்தி, மூர்ச்சை, நாவறட்சி, தாபம், வயிறு நிரம்பவும் புஜித்தாற்போல திருப்தி, அரோசகம், இருதயப் பிடிப்பு, அதிகமாக கபத்தைத் துப்பல், வாய் இனிப்பாயிருத்தல், செவி-வாய் நேத்திரத்தின் பார்வை அடைபடுதல் இவையுண்டாம்; வைத்தியர் இப்பிணியாளிக்கு சிலேஷ்மத்தை அடக்குவாராயின், பித்தம் மிகவும் உபத்திரவங்களோடு கூடிய ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; பித்தத்தை அடக்கினால் வாயு மிகப் பிரகோபித்து, எக்கணமே உணவின்றியே தவிக்கும் அவனுடைய மேதஸ், மஜ்ஜை, அஸ்த்தி இவற்றில் விசேஷ வேதனையை யுண்டுபண்ணி அவற்றைக் கொளாறடையச் செய்யும்; இதில் ரோகி ஸ்நானம் செய்யவிரும்புவன்; போஜனத்திலும் விருப்பங்கொள்வான்; இவன் மூன்று நாட்களுக்குமேல் பிழைத்திருக்கமாட்டான்; இது மேதோதாதுவைப்பற்றிய ஸந்நிபாதம்; இது கப்பண ஸந்நிபாதம் என்று வழங்கப்படும். ஸந்நிபாத ஸம்பந்தமான கோளாறுகளில் ஒரு ஆக்ஷேபம் உண்டு; அதாவது.—வாதாதிதோஷங்கள் ஒன்றோடொன்றுக்கோர் விரோதமான தன்மைகளைப்பெற்றவை; நீரும் நெருப்பும்போல அவையெல்லாம் ஒருமிக்க விருத்தியடைய வகையில்லையே; ஆகவே அவை ஒரு தேஹத்தில் ஒரேஸமயத்தில் விருத்தியடைந்து ஒருவியாதிரூபமான காரியத்தை ஒற்றுமையாக நிறைவேற்றுவது எங்ஙனம்? என்பதே ஆக்ஷேபம். "வாத-பித்த கபங்கள் ஒன்றுக்கொன்று குணங்களில் விரோதமான சுபாவ முடையவைகளா யிருந்தாலும், தேஹத்தில் அவை ஸஹஜமாய் கர்ப்போறபத்தி முதலே ஒன்று சேர்ந்து உண்டானவையாகையாலும், ஸாத்மியம் என்கிற தன்மையைப் பெற்றவை (விரோதமானவையானாலும் பழக்கத்தினால் அநுகூலமானவையாகப் போனவை) ஆகையாலும, அவற்றில் ஒன்று மற்றொன்றை அடித்துப் போடுவதில்லை" என்று இதற்கு த்ருடபலன் என்பவர் ஸமாதானம் கூறியிருக்கிறார். இந்த ஸமாதானம் சில ஸமயங்களில் யுக்தமாக அநுபவத்திற் காணப்படுவதில்லை யெனக் கருதி கயாதாஸன் என்பவர் வேறொரு விதமாக யுக்தி யுக்தமாய் ஸமாதானம் விளக்கியிருக்கிறார்; அதாவது—"தோஷங்கள், இயற்கையில் பரஸ்பரம் எதிரிடையான குணங்களைப் பெற்றிருந்தும், ஸந்நிபாதக் கோளாறு அவற்றிற்கு நேர்ந்திருக்கையில், தோஷங்களுக்குள்ள சுபாவத்தினாலேயோ தைவச் செயலாலேயோ அவை ஒன்றையொன்று அடித்துப்போடாமல் ஒரு வியாதியை நிறைவேற்றுகின்றன."

1. அஸாத்யம்.—சிகித்ஸைக்கு வசப்படாமல் ரோகிக்கு சீக்கிரத்தில் பிராணாபாயம் உண்டாக்கும் வியாதி. கஷ்டஸாத்யம் —வெகு சிரமப்பட்டு சிகித்ஸிக்க, தணிந்தது; இவ்வித வியாதி க்ருச்ச்ரஸாத்யம் எனறும வழங்கப்படும்.

2. மலம் வெளிவருதல், ஜாடராக்னி சிறிதாவது தொடர்தல், ஸந்நிபாதலக்ஷணங்களில் சிலக் குறிகள் மாத்திரம் தோன்றுதல் ஆகிய இவைகள் வேறுவிதமான குறிகள்.

யே ஸாதாரணமாயேற்பட்ட காலாவதிகளாம். [1] 1,2.)

ஸந்நிபாத ஜ்வரத்தின் உபத்திரவம்:— ஸந்நிபாத ஜ்வரத்தின் இறுதியில் காதுக்குக் கீழே மிகக் குரூரமான வீக்கம் ஒன்றுண்டாவதுண்டு; அதிலிருந்து மனிதன் மீளுவது அரிது. [2] 25.

அபிந்யாஸ ஸந்நிபாத ஜ்வரம்:—(மூன்று தோஷங்களும் பிரகோபமடைந்து, உரஸ்ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற மார்பறையிலடங்கிய குழல்களுக்குள் சென்று, அங்கு ஆமதோஷம் அதிகரிக்க, அத்துடன் சேர்ந்து அதைக் கெட்டியாகத் தோயச் செய்து, அவ்வாமதோஷத்துடன் புத்தி ஸ்தானத்திலும், மனதுட்பட இதர இந்திரிய மார்க்கங்களிலும் பிரவேசித்து, “அபிந்யாஸம்” என்கிற மிகவும் தீவ்ரமானஜ்வரத்தை உண்டுபண்ணும். இது எளிதில் நிவ்ருத்தியாகும் தன்மையதல்ல. இது உண்டானதும் செவியும் நேத்திரமும் அதனதன் செயலில் மந்தப்பட்டுப்போம்; பிணியாளி எக்காரியத்திலும் எவ்வித ஆசையிலும் விருப்பமற்றவனாவான்; பார்வையும் சப்தத்தைக் கேட்கும் சக்தியும் மந்தப்படுவது போலவே வாஸனையறிவதிலும், பரிச வுணர்ச்சியிலும் அவன் திறமையிழந்தவனாவான்; தலையை அடிக்கடியும் இங்குமங்குமாகப் புரட்டுவான்; உணவை விரும்பான்; கூக்குரலிடுவான்; துடிப்பான்; படுக்கையிற் புறண்டசைவான்; வெகு சொற்பமாகப் பேசுவான்; அபிந்யாஸம் என்கிற இந்த ஜ்வரம் பெரும்பாலும் அஸாத்தியமானதால், இதிலிருந்து தேறுவன் அரிது. [3])

ஆகந்து ஜ்வரத்தின் [4] விப்ரக்ருஷ்ட காரணங்கள்:-அலைத்தலால் அல்லது அடிபடுவதாலும், அபிசாரம் என்கிற ஏவலாலும், சாபத்தினாலும், காம-சோக-பூத-பயாதிகளின் பலமான பற்றுதலாலும் ஆகந்து ஜ்வரம் உண்டாகும்; இதில் ஒவ்வொரு ஜ்வரத்திலும் வாத-பித்த-கபங்களின் ஸம்பந்தங்களைக் கண்டறிந்து வியாதி நிர்த்தாரணம் செய்யவும். 26.

ஆகந்து ஜ்வர லக்ஷணங்கள்:—(1) விஷ ஸம்பந்தத்தினாலுண்டாகும் ஜ்வரத்தில் வாய் கறுநிறமாகும்; அத்துடன் அதிஸாரமும், அன்னத்வேஷமும், நாவறட்சியும், உடலெங்கும் குடைத்தலும், மூர்ச்சையும் காணும். (2) மூலிகைகள் அல்லது ஔஷதங்களின் கடுமையான வாஸனையை முகர்வதால் காணும் ஜ்வரத்தில் மயக்கம், தலைவலி, வாந்தி, தும்மல் இக்குறிகள் உண்டாகும். (3) காமத்தினால் உண்டாகும் ஜ்வரத்தில் சித்தப் பிரமையும், சோம்பலும், ஆலஸ்யமும், உணவில் விருப்பமின்மையும் காணும். (இப்பிணியாளிக்கு இருதயத்தில் வேதனையுண்டாகும்; உடம்பும் மிகவும் இளைத்துவிடும்.) (4) பயத்தினாலும், (5) மனத்துயரத்தினாலும், (6) கோபத்தினாலும் உண்டாகிற ஜ்வரத்தில் வாய்ப்பிதற்றலும் உடல் நடுக்கலும் காணும். (7) அபிசாரம் என்கிற ஏவல், (8) சாபம் இவற்றாலுண்டாகும் ஜ்வரங்களில் மூர்ச்சையும், நாவறட்சியும் தோன்றும். (9) பூதங்கள் பற்றிக் கொள்வதால் ஸம்பவிக்கும் ஜ்வரத்தில் மனதில் ஏக்கம், திடீரென்று சிரித்தல், அழுதல், நடுக்கல் இக்குறிகள் உண்டாகும். [5] 27—29½.

1. இங்கு குண்டலங்களுக்குள் எழுதப்பட்டிருப்பவை பிரக்ஷிப்தங்கள் எனப்படுகின்றன. இவ்விதமே மற்றவிடங்களிலும் அறிக. வெவ்வேறு சாரருடைய அபிப்பிராயங்களுக்கிணங்கி ஸந்நிபாதத்திற்கு இரண்டுவிதமான காலாவதிகள் கூறப்பட்டன.

2. இந்த உபத்திரவம் இக்காலத்தில் ஸந்நிபாதஜ்வரங்களில் காண்பது அரிது; பிளேக் எனப்படுகிற வியாதியில் இவ்வித வீக்கம் உண்டானாலும், அது காதுக்கடியிலேயேதான் உண்டாகிறதென்கிற நியமமில்லை.

3. அபிந்யாஸஜ்வரம் என்பதே, இக்காலத்தில் மேல்நாட்டார் Pneumonia (ந்யுமோனியா) என்று வழங்கும் வியாதியென்று கருதப்படுகிறது.

4. திடீரென்று வெளிக்காரணங்களால் ஸம்பவிப்பது ஆகந்து ஜ்வரம் எனப்படுகிறது.

5. இந்த ஒன்பது விதமான ஆகந்து ஜ்வரங்களும் முறையே (1) விஷ ஜ்வரம், (2) ஔஷதிகந்தஜ ஜ்வரம், (3) காமஜ்வரம், (4) பயஜ்வரம், (5) கோப ஜ்வரம், (6) சோக ஜ்வரம், (7) ஆபிசாரிக ஜ்வரம், (8) சாப ஜ்வரம், (9) பூதாபிஷங்க ஜ்வரம் என்கிற பெயர்களால் வழங்கப்படும். தீக்ஷ்ணமான வாஸனையுள்ள மூலிகைகள் அல்லது ஔஷதங்களின் வாஸனை ச்வஸிக்கப்படுவதால் ஸம்பவிக்கும் (ஔஷதிகந்தஜ) ஜ்வரத்தை ஸுச்ருதர் “த்ருண புஷ்ப ஜ்வரம்” என்று வழங்குகிறார். காமஜ்வரம் என்றால் ஒருவனுக்குத் தான் வெகு அபிமானத்துடன் விரும்பிய ஸ்திரீ கிடைக்காமையால் ஏற்படும் சித்தப்பிரமையாலான ஜ்வரம் எனக் கருத்து. “காமத்தினால் சித்தப் பிரமையும்,



ஆகந்து ஜ்வரங்களில் தோஷங்களின் பிரகோபங்கள்:—(1) காமத்தினாலும், சோகத்தினாலும், பயத்தினாலும் காணும் ஜ்வரங்களில் வாததோஷமும், (2) கோபத்தினால் உண்டாகும் ஜ்வரத்தில் பித்தமும், (3) பூதங்களின் பற்றுதலால் உண்டாவதில் மூன்று தோஷங்களும் பிரகோபிக்கும். ஆனால் பூதாவேச ஸம்பந்தமான ஜ்வரங்களில் அந்தந்த பூதத்தின் பொதுக்குறிகளும் த்ரிதோஷ ஸம்பந்தமான குறிகளும் கலந்து காணும் [1]. 30½.

விஷம ஜ்வர ஸாதாரண ஸம்ப்ராப்தி:—சொற்ப தோஷம் [2] சரீரத்தில் வியாதிக்கு மூலமாயிருந்து, அப்பால் ஹிதமல்லாத ஆஹாராதிகளால் கிரமமாக விருத்தியடைந்து, அல்லது வேறுவித ஜ்வரம் வந்து திடீரென்று விடுபட்டதும் அபத்தியத்தினால் மீண்டும் தோஷம் பெருகியாவது, [3] ஸப்த தாதுக்களில் ஏதேனும் ஒன்றை முக்கியமாகப் பற்றிக்கொண்டு விஷம ஜ்வரத்தை [4] யுண்டு பண்ணுகிறது. 31½.

ஐந்து விஷம ஜ்வரங்களின் விசேஷ ஸம்ப்ராப்தி:—(ஸந்ததம், ஸததம், அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சதுர்த்தகம் என்று விஷம ஜ்வரம் ஐந்து வகைப்படும்.) விஷம ஜ்வரங்களுக்குக் காரணமான தோஷம் முதலில் இரஸ தாதுவைப் பற்றிக்கொண்டு ஸந்தத ஜ்வரத்தையும், அப்பால் அது இரத்த தாதுவை ஆச்ரயித்து ஸதத ஜ்வரத்தையும், பிறகு அதுவே மாம்ஸ தாதுவிற் பற்றி அந்யேத்யுஷ்கம் என்கிற ஜ்வரத்தையும், மேதோ தாதுவிற் சேர்ந்து த்ருதீயக ஜ்வரத்தையும், அஸ்தியிலும் மஜ்ஜையிலும் பற்றி சதுர்த்தகஜ்வரத்தையும் உண்டுபண்ணுகிறது; [5] இவற்றுள் சதுர்த்தக ஜ்வரம் வேறு அநேக ரோகங்களால் சூழப்பட்டதாகவும், மிகக் கொடிய மிருத்யுவெனத் தகுந்ததாகவும் இருக்கும். 32, 33.

அரோசகமும், அழற்சியும் உண்டாவதோடு, இலஜ்ஜை நித்திரை புத்தி தைர்யம் இவையும் க்ஷயிக்கும்” என்று வாக்படர் கூறுகிறார். கோபஜ்வரத்தில் தலைவலியும் விசேஷமாய் உண்டாகும் என்றும் வாக்படரால் கூறப்படுகிறது. இவற்றுள் காமஜ்வரம், பயஜ்வரம், கோபஜ்வரம், சோகஜ்வரம் இந்நான்கும் மனதைப்பற்றியுண்டாகுபவையாகையால் மாநஸிக ஜ்வரங்கள் என்றும் கூறப்படுவதுண்டு. பூதாபிஷங்க ஜ்வரத்தில் குறித்துள்ள பூதம் என்பதற்கு இனி உந்மாத நிதானத்தில் மொழியப்படும் தேவர்கள், கிரஹங்கள் முதலியவை எனப் பொருள்.

1. சரகத்தில் “அபிஷங்க ஜ்வரம் வாத-பித்தங்களால் உண்டாகும்” என்று கூறப்பட, இங்கே மூன்று தோஷங்களாலும் உண்டாவதாகக் கூறப்படுவதற்கு, “அபிஷங்க ஜ்வரம் என்றால் காமக்ரோதாதி அபிஷங்கத்தினால் உண்டானதென்றே பொருள், பூதாபிஷங்கம் என்று அதற்குப் பொருளல்ல” என்று ஜெஜ்ஜடர் முதலியவர் ஸமாதானம் கூறியிருக்கிறார்கள்.

2. தோஷம் சொற்பமானதால், போதிய பலமில்லாததாயிருப்பதால், அது காலக்கிரமத்தில் போதிய பலத்தைப் பெற்று ஜ்வரத்தை யுண்டு பண்ணும்; தோஷம் போதிய பலமுள்ளதாயிருந்தால், அது விடாஜ்வரத்தையே உண்டு பண்ணும் என்று இதனால் அறிய வேண்டும்.

3. “மீண்டும் தோஷம் பெருகியாவது” என்றமொழியிலிருந்து வேறுவித ஜ்வரமில்லாமலே ஆரம்பத்திலிருந்தே ஜ்வரம் விஷமமாயிருக்கலாமென்றும் தெரியவருகிறது. ஆகையினாலேயே “ஆரம்பத்திலிருந்தே எது விஷமமாயிருக்கிறதோ” என்று இனி கூறப்போகிறார்.

4. விஷம ஜ்வரம்:—“யாதொன்று காலம் தவறித் தவறி வருகின்றதோ, நியமமில்லாமல் குளிரும் தாபமும் மாறி மாறி யுண்டாகிறதோ, ஜ்வரவேகமும் ஒழுங்கீனமாக அப்போதைக்கப்போது கிளம்புகிறதோ அது “விஷம ஜ்வரம்” எனப்படும் என்று பாலுகியென்பவர் கூறுகிறார். இது முறைக்காய்ச்சல் என்று பொதுவாக வழங்கப்படுகிறது.

5. ஸந்ததம் ஸததமாகவும், ஸததம் அந்யேத்யுஷ்கமாகவும், அது த்ருதீயகமாகவும், த்ருதீயகம் சதுர்த்தகமாகவும் மாறுவதாக அர்த்தமல்ல; விஷம ஜ்வரத்திற்குப் பொதுக்காரணமாயுள்ள தோஷம் அந்தந்த விஷமஜ்வரத்திற்கேற்றவாறு ஒவ்வொரு தாதுவை ஆச்ரயித்து ஸந்ததாதி ஜ்வரங்களை யுண்டு பண்ணுகின்றன என்பது கருத்து.

ஐந்து விஷம ஜ்வரங்களின் விவரணம்:—(1) யாதொரு ஜ்வரம் ஏழு நாட்களாவது, பத்து நாட்களாவது, பன்னிரண்டு நாட்களாவது ஓய்வின்றியே தொடர்ந்து காய்கின்றதோ அது ஸந்தத ஜ்வரம் என்று கூறப்படுகிறது. [1] (2) ஓர் இராப்பகல் முழுவதிலும்-ஒரு தினத்தில்-ஸதத ஜ்வரம் என்பது இருமுறை தணிந்து மேலெழும். [2] (3) அந்யேத்யுஷ்க ஜ்வரம் என்பது ஒரு தினத்தில் ஒருமுறை யுண்டாகும். [3] (4) த்ருதீயக ஜ்வரம் என்பது ஒருநாள் இடையில் விட்டு விட்டு மூன்றாவது நாள் மீண்டும் கிளம்பும். [4] (5) சதுர்த்தக ஜ்வரமானது [5] இடையில் இரண்டிரண்டு தினங்கள் விட்டு நான்காவது தினத்தில் மறுபடியும் உண்டாகும். [6] 34—35½.

1. ஸந்தத ஜ்வரத்தை ஸந்நிபாத (த்ரிதோஷ) ஸம்பந்தமானது என்று சரகர் கூறுகிறார்:—"ஸந்தத ஜ்வரத்தில் எப்பொழுதுமே வாதாதிதோஷங்களெல்லாம் தாதுக்களிலும், மல-மூத்திரங்களிலும் ஒருமிக்க வியாபித்துக் கோளாறுகளை யுண்டுபண்ணுகின்றன". மேலும் "பித்தம், கபம், வாதம் இம்மூன்றின் மிகைபட்ட அபிவ்ருத்தியால் ஸந்நிபாதத்தினாலுண்டான ஸந்தத ஜ்வரமானது முறையே பத்து நாட்களிலாவது, பன்னிரண்டு நாட்களிலாவது, ஏழு நாட்களிலாவது. சிவ்ருத்தியாய்விடவோ அல்லது உயிரைப் போக்கிவிடவோ கூடும்" என்ற வாறு, வாதம் அதிகரித்த ஸந்தத ஜ்வரம் ஏழு நாட்களும், பித்தம் அதிகரித்த ஸந்ததம் பத்து நாட்களும்,கபம் அதிகரித்தது பன்னிரண்டு நாட்களும் தொடரும் எனக் கருத்து. விடாமலே தொடர்ந்து ஏழு, அல்லது பத்து, அல்லது பன்னிரண்டு தினங்களளவும் காய்வதால் ஸந்ததம் என்று வழங்கப்படும். விட்டு விட்டு வருவது விஷமஜ்வரமாயிருக்க எப்பொழுதும் தொடர்ந்தடிக்கும் ஸந்தத ஜ்வரம் விஷம ஜ்வரங்களோடு எங்ஙனம் சேர்க்கப்படுகிறது என்பது ஓர் ஆக்ஷேபம். "ஸந்தத ஜ்வரமானது பன்னிரண்டாம் நாளில் தணிவடைந்து, மீண்டும் வெளிப்படையாகக் கிளம்பி, அப்பால் தணிவடைந்து அரிதாக மீண்டும் நீண்டகாலம் தொடர்ந்திருப்பதுமுண்டு" என்று சரகர் கூறும் பிரமாணத்தை அநுஸரித்து, இது இடையில் தணிவடைந்து கிளம்புமியல்புள்ளதாகையால், விஷம ஜ்வரவரிசையில் சேர்க்கப்படுவது யுக்தம என்று சிலர். "நான் முற்கூறிய ஸந்ததம முதலிய ஐந்து ஜ்வரங்களுள் ஸந்ததத்தைத் தவிர்த்தது மற்ற நான்கு மாத்திரம் விஷம ஜ்வரங்கள் ஆகும்" என்று கரநாதன் மொழியுமாறு, விஷம ஜ்வர வரிசையில் ஸந்தத ஜ்வரம சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அது விஷம ஜ்வரமாகக் கருதப்படமாட்டாதென்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள், ஆகிலும் சிகித்ஸை முதலியதில் இவ்வைந்துக்கும் ஒற்றுமையுண்டென்கிற ஸாதாரணவிதியை அநுஸரித்து, ஸந்ததமும் விஷம ஜ்வரங்களின் வரிசையிலேயே எல்லாக கிரந்த கர்த்தாக்களாலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2. ஒரு தினத்தில் இரண்டு தடவை ஸததஜ்வரம் உண்டாகும். ஓர் "இராப்பகலில்" என்றதால், பகலில் இரு முறையும், இரவில் இரு முறையும் வருவது என்று சிலர் கூறுவர்.

3. அந்யேத்யுஷ்கம்—மறு நாளுண்டாவது என்பது இதன் பொருள்.இதில் என்றைய தினம் ஜ்வரம் உண்டாகிறதோ அன்றையதினமே விட்டுப் போய், மீண்டும் மறு நாள் கிளம்பும்.

4. த்ருதீயக ஜ்வரம்—மூன்றாவது நாள் உண்டாகும் ஜ்வரம். என்றைக்கு ஜ்வரம் உண்டாகிறதோ அன்றைக்கே விட்டு மறுநாள் உண்டாகாமல் அன்று முதல் (அந்த தினத்தையும் சேர்த்து) மூன்றாவது நாள் மறுபடியும் கிளம்பும் ஜ்வரம்.

5. சதுர்த்தகம்—என்றைக்கு ஜ்வரம் காண்கிறதோ அதற்கு (அந்த நாளையும் சேர்த்து) நான்காவது தினத்தில் (அதாவது இடையில் இரண்டு தினங்கள் விட்டு) மறுபடியும் உண்டாவது.

6. ஸததம் முதலிய ஜ்வரங்கள் ஐந்து கபஸ்த்தாநங்களில் (இரைப்பை, இருதயம், தொண்டை, சிரஸ், ஸந்திகள் இவ்வைந்தும் கபஸ்த்தாநங்கள்) இருந்து முறையே கிளம்பும் தோஷங்களால் உண்டாக்கப்படுகின்றன. இவற்றுள் (1) ஆமாசயத்திலேயே தங்கிய தோஷத்தினால் (இரவிலும் பகலிலும் ஆமதோஷம் அதிகரிக்கும் போதெல்லாம்) தினத்திற்கு இரண்டு முறை ஜ்வரம் உண்டு பண்ணப்படும். (2) இருதயத்திலுள்ள தோஷம் ஆமாசயத்திற்கு வந்து சேர்ந்து, அதன் பிறகு ஆமாசயத்தில் பிரகோபித்து, தினத்திற்கு ஒரு முறை ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; ஸதத ஜ்வரத்தை யுண்டுபண்ணும் தோஷத்தைவிட இது சிறிது தூரத்திலுள்ள ஸ்த்தாநத்திலிருந்து ஆமாசயத்திற்கு வரவேண்டியிருப்பதால் தினத்திற்கு ஒருமுறையே ஜ்வரத்தை உண்டாக்கும். (3) கண்டத்திலுள்ள தோஷம் இருதயத்தைச்சேர ஒரு நாளாகும்;இரண்டாவது நாள் ஆமாசயத்திற்கு வந்து ஜ்வரத்தை யுண்டு பண்ணும்; இதில் தோஷம் இடையில் ஒரு நாள் இருதயத்தில் தங்கியிருந்து அப்பால் ஆமாசயத்திற்கு வரவேண்டியிருப்பதால், த்ருதீயக ஜ்வரத்தில் நடுவில் ஒருநாள் ஜ்வரம் ஓய்வடைந்திருக்கும். (4) சிரஸ்ஸிலுள்ள தோஷம் க்ரமமாக கண்டத்திற்கும், அங்கிருந்து இருதயத்திற்கும் வந்து, அப்பால் ஆமாசயத்தை அடைந்து சதுர்த்தக ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; தோஷம் இடையில் இரண்டு இடங்களில் தங்கி அப்பால் மூன்றாவது இடத்திற்கு வந்து ஜ்வரத்தையுண்டுபண்ண வேண்டியிருப்பதால், இடையில் இதில் இரண்டு நாட்கள் ஜ்வரம் ஓய்வடைந்திருக்கும். (5) ஸந்திகளிலுள்ள தோஷங்கள் (பிறகு கூறப்படும்) ப்ரலேபக ஜ்வரத்தை யுண்டுபண்ணும். (ஸந்திகள் தேஹமெங்கும்—அஸ்த்தி ஸந்திகள், மாம்ஸ ஸந்தி



விஷம ஜ்வரம் பூதங்களின் ஸம்பந்தத்தினாலுண்டாகும்:—சிலர் விஷம ஜ்வரம் பூதங்கள் சரீரத்தைத் தாக்குவதால் நேரிடுகின்றது எனக் கூறுகிறார்கள்.[1] 36.

த்ருதீயக ஜ்வரம் மூன்று விதம்:—த்ருதீயக ஜ்வரம் மூன்று வகைப்படும்; அவற்றுள் (1) கபமும் பித்தமும் மேலெழுந்திருக்கும் ஜ்வரத்தில் இடுப்பில் விசேஷ வேதனையும், [2] (2) வாதமும் கபமும் அதிகரித்துள்ள ஜ்வரத்தில் முதுகில் வேதனையும், (3) வாதமும் பித்தமும் அதிகரிந்த ஜ்வரத்தில் சிரஸ்ஸில் அமித வேதனையும் காணும். 37.

சதுர்த்தக ஜ்வரம் இரண்டு விதம்:—வாதிகமென்றும் ச்லைஷ்மிகமென்றும் சதுர்த்தக ஜ்வரம் இரண்டு விதமாகத் தனது சக்தியை வெளிப்படுத்துகிறது: அவற்றுள் (1) கபம் மேலிட்ட சதுர்த்தகமானது முதலில் கால்களில் வேதனையை யுண்டுபண்ணிக் கொண்டும், (2) வாதம் மேலிட்டது சிரஸ்ஸில் வேதனையைக் கொடுத்துக் கொண்டும் உண்டாகும்.38.

சதுர்த்தக விபர்யயம் என்னும் விஷமஜ்வரம்:—சதுர்த்தக ஜ்வரத்திற்கு மாறான நிலைமையுடன் உண்டாகும் ஜ்வரம் "சதுர்த்தக விபர்யயம்" எனப்படும்; அதுவும் விஷம ஜ்வரந்தான். இதில் மத்தியில் ஜ்வரம் காய்ந்து, ஆதியிலும், இறுதியிலும் தணிந்து விடும். [3] 39.

கள் என்று—வியாபித்திருப்பதால், இந்த ஜ்வரம் எப்பொழுதுமே வரும். ப்ரலேபக ஜ்வரம் விட்டு விட்டு வராததாயிருந்தாலும், கபஸ்த்தாநஸம்பந்தம் இருப்பதையுத்தேசித்து ஸுச்ருதாதிகளால் விஷமஜ்வரத்துடன் இங்ஙனம் சேர்த்துப் படிக்கப்பட்டதென்று அறிக.

1. பூதங்கள் என்றால் ஸூக்ஷ்ம ஜீவராசிகளுக்கும் பெயருண்டு; ஆகவே பூதங்கள் என்பதற்கு இங்கே தேவக்கிரஹங்கள் என்று பொருள் கூறுவதைவிட நுண்ணுயிர்கள் எனப் பொருள் கூறுவதே பொருந்தும். விஷம ஜ்வரங்கள் (முறைக் காய்ச்சல்கள்) நுண்ணுயிர்களால் உண்டாவது அநுபவத்தில் பிரஸித்தம.

2. "இடுப்பு (த்ரிகம்) வாததோஷத்திற்கு இயற்கையான ஸ்த்தாநம்; பித்த-கபங்களுக்கு அது அன்னிய ஸ்த்தாநமாகும்; ஆகவே இவ்விரண்டும் அங்கு எளிதில் பலம் பெற முடியாது; ஆகையால் உடனே வியாதியை வெளிப்படையாக உண்டு பண்ணாமல், மெதுவாக பலம் பெற்று மூன்றாவது நாள் ஜ்வரமுண்டு பண்ணும்." என்று கூறுகிறார் ஜெஜ்ஜடர். இங்ஙனமே கபஸ்த்தாநமான சிரஸ்ஸில் வாத-பித்தங்களும், பித்தஸ்த்தாநமான ப்ருஷ்டத்தில் வாத-கபங்களும் கிரமமாக பலம் பெற்று த்ருதீயக ஜ்வரத்தை யுண்டு பண்ணுவதாய் அறிக. இடை வாதஸ்த்தாநமாயிருக்க அங்கு பித்த கபங்களும், சிரஸ் கபஸ்த்தாநமாயிருக்க அங்கு வாத-பித்தங்களும்,முதுகு பித்தஸ்த்தாநமாயிருக்க அங்கு வாத-கபங்களும் விருத்தியடைந்து வியாதியை யுண்டுபண்ணுவது எங்ஙனமென்று ஆக்ஷேபம் ஏற்படும். "இயற்கை நிலைமையிலேயே தோஷங்களுக்கு அவ்வித ஸ்த்தாந நியமங்கள்; அவை பிரகோபித்து விட்டால் தேஹத்தில் எங்கும் பரவிவிடும். அப்பொழுது தோஷங்கள் எந்தெந்த விடத்தில் தங்கிவிடுமோ ஆங்காங்கு கோளாறை யுண்டுபண்ணும்" என்கிற ஸுச்ருதருடைய வாக்கியம் அவ்வாக்ஷேபத்திற்கு ஸமாதாநம். [இதர ஸ்த்தாநங்களில் தோஷங்கள் வியாதியை யுண்டுபண்ணுவதற்கான இந்த ஆக்ஷேபமும் ஸமாதாநமும் பிறகு கூறப்படும் சதுர்த்தக ஜ்வரத்துக்கும் பொதுவானவை யென்றறிக.] "பெரும்பாலும் ஸந்ததாதி ஐந்து ஜ்வரங்களும் ஸந்நிபாதத்தினால் உண்டாகின்றன; அதிலும் ஸந்நிபாதத்தில் எந்த தோஷம், மிக்க அதிகரித்திருக்குமோ அது அந்த ஜ்வரத்தில் முக்கிய தோஷமாகக் கருதப்படும் என்று சரகர் கூறியிருப்பதிலிருந்து விஷம ஜ்வரங்களெல்லாம் ஸந்நிபாத தோஷ ஸம்பந்தமானவை யென்று தெரியவந்தாலும், 'பெரும்பாலும் ஸந்நிபாத ஸம்பந்தமானவை' என்றிருப்பதாலும், 'அதிலும் எந்த தோஷம் எதில் அதிகரித்திருக்குமோ அது அத்தோஷ ஸம்பந்தமானதாகக் கருதப்படும்' என்று கூறப்பட்டிருப்பதாலும் இங்கே த்ருதீயக ஜ்வரத்திலும் சதுர்த்தக ஜ்வரத்திலும் வாத-பித்தாதிகளுக்குத் தனித்தனியே விசேஷ ஸம்பந்தம் கூறப்பட்டதாய் அறிக.

3. "தோஷம் அஸ்த்தி மஜ்ஜை இவ்விரண்டையும் பற்றியதாய் சதுர்த்தக விபர்யயம் என்னும் ஜ்வரத்தையுண்டுபண்ணும்; இதில் முதலிலும் இறுதியிலும் ஜ்வரம் தணிந்திருக்கும்; மத்தியில் மாத்திரம் காயும்" என்று இதர கிரந்தங்களிலும் கூறப்படுகிறது. இதற்குப் பொருள்:"ஆதியில் ஒருநாள் ஜ்வரம் வராமலிருக்கும்; இடையில் இரண்டு நாட்கள் ஜ்வரம் கிளம்பியடித்துக்கொண்டிருக்கும்; பிறகு இறுதியில் ஒரு நாள் ஜ்வரம் உண்டாகாது" என்று ஜெஜ்ஜடர் முதலியவர்களால் கூறப்படுகிறது. "இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக ஜ்வரம் காய்ந்து, இடையில் ஒரு நாள் தணிவடைந்து, மீண்டும் முன்போலவே ஜ்வரம் அடிக்கும்" என்பது அதற்குப் பொருள் என்று ஹரிசந்திரன் கூறுகிறார். இங்ஙனமே அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம் இந்த ஜ்வரங்களுக்கும் விபர்யயம் (அந்யேத்யுஷ்க விபர்யயம், த்ருதீயக விபர்யயம்) என்கிற பேதங்கள் உண்டென்று கூறப்படுகிறது. "தோஷமானது இரண்டு மூன்று கபஸ்த்தாநங்களிலாவது இருந்து விபர்யயங்களான விஷமஜ்வரங்களை யுண்டுபண்ணும்" என்றுவருத்த ஸுச்ருதர் மொழிவதாக ஜெஜ்ஜடர் வரைகிறார்.

வாத-பலாஸக ஜ்வரம்:— எப்பொழுதுமே ஜ்வரம் சொற்பமாகக் காய்ந்து கொண்டிருக்கும்; உடம்பு ரூக்ஷமாகும்; வீக்கம் காணும்; மிக்கஇளைப்புடன் கஷ்டப்படுவான்; அவயவங்கள் அசைவற்றுப் போகும்; இது சிலேஷ்ம தோஷம் அதிகரித்த வியாதி; வாத-பலாஸகம் என இதற்குப் பெயர்.[1] 40.

ப்ரலேபக ஜ்வரம்:— உஷ்ணத்தினாலும், குருத்தன்மையினாலும்அவயவங்கள் பூசப்பட்டவை போல் தோன்றும்;குளிரும் தொடரும்; சொற்ப ஜ்வரமும், தேஹத்திற் பிசுபிசுப்பும் காணும்;இது ப்ரலேபக ஜ்வரம் எனப்படும்.[2] 41.

விசேஷ விஷம ஜ்வரங்கள்:—(1) தேஹத்தில் அன்னரஸம் காந்திப்போய் கோளாறடைந்தும், சிலேஷ்மமும் பித்தமும் விகாரப்பட்டுமிருக்கையில், அதனால் சரீரத்தில் ஒரு பகுதி சீதளமாகவும் மற்றொரு பகுதி உஷ்ணமாகவும் ஆய்விடும்[3]. (2) எப்பொழுது பித்தமானது மத்திய சரீரத்திலும், சிலேஷ்மம் கை-கால்களிலும் வியாபித்து நிற்கின்றனவோ அப்பொழுது அதனால் உடலில் உஷ்ணமும் கை-கால்களில் சீதளமும் காண்பதுண்டு. (3) மத்திய காயத்தில் எப்பொழுது கபம் வியாபித்து கை-கால்களில் பித்தமும் பரவி யிருக்கின்றனவோ, அப்பொழுது அதனால் உடலிற் சீதளமும்,கை-கால்களிற் சூடும் அதிகரிக்கும். (4) கபமும் வாயுவும் சர்மத்தை ஆச்ரயித்திருக்கையில் முதலில் அவ்விரு தோஷங்களும் ஜ்வரத்தில் சைத்தியத்தைக் கிளப்பி, அவ்விரண்டும் தணிவடைந்ததும்[4], பித்தம் அதிகரித்து அப்பால் உஷ்ணத்தை விருத்தி செய்கின்றது. (5) அவ்விதமே பித்தமானது சர்மத்தைப் பற்றியதாய் முதலில் அதிக உஷ்ணத்தைக் கிளப்பி, அப்பால் அது தணிவடைந்ததும் மற்றஇரண்டு தோஷங்களும் இறுதியில்சீதளத்தை யுண்டுபண்ணுகின்றன இறுதியிற் கூறிய இரண்டுவித ஜ்வரங்களும் தாஹ சீதாதி ஜ்வரங்கள் எனப்படும்;[5] இவ்விரண்டும் ஸம்ஸர்க்க தோஷங்களால் உண்டாகுபவையாக நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன, அவற்றுள் முதலில் எதில் உஷ்ணம் அதிகரிக்குமோ அது கடுமையான ஜ்வரம்; ஆகவே சிகித்ஸை செய்து அதைப் பரிஹரிப்பது மிகவும் கடினம்.[6] 42—47.

1. வாத தோஷத்தினாலும் விசேஷமாக சிலேஷ்மத்தினாலும் உண்டாக்கப்படுவதால் இது வாதபலாஸகம் எனப்படுகிறது, (பலாஸகம் என்று சிலேஷ்மத்திற்குப் பெயர்.) "வாயு பிரகோபமடைந்து, மற்ற இரண்டு தோஷங்களையும் பிரகோபிக்கச் செய்து தேஹமெங்கும் ஓடும்; அப்பொழுது அத்தோஷம் சிரஸ்ஸிலிருந்தால் தலைவலியையும் * * * *" என்ற வாறு வேறு சில நூல்களில் கூறப்படுவதால் வாத பலாஸகத்தில் பித்தத்திற்கும் சிறிது ஸம்பந்த முண்டென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். வாத-பலாஸகம் கும்பம் என்கிற பாண்டுரோகத்தை (கும்பகாமலாஸவ)ச்சேர்ந்ததென்றும் சிலர்.இதில் உடம்பு ரூக்ஷமாயிருப்பது வியாதியின் பிரபாவத்தினாலென்க. வாத பலாஸகம் ப்ரலேபக ஜ்வரத்திற்கு உபத்திரவமாயுண்டாவதாகக் கருதப்படுகிறது.

2. ப்ரலேபக ஜ்வரம் கப-பித்தங்களால் உண்டாகின்றது. இராஜயக்ஷ்மாவில் உண்டாவது இதே ஜ்வரமென்றும், அதில் அதிஸாரம் முதலிய வேறு சில இலக்ஷணங்களும் காண்கின்றன வென்றும், ஆகவே இது ஸந்நிபாதத்தினால் காண்கிறதென்றும் சிலர் கூறுகிறார்கள்.

3. இதில் தேஹத்திற் கீழ்பாதி மேல்பாதியாகவோ, அல்லது நெடுகவும் வலது பகுதி இடது பகுதியாகவோ உஷ்ண சீதளங்கள் காணும்.

4. தணிவு என்பதற்கு நிவாரணம் என்பது பொருளல்ல; ஆனால் ஜ்வரத்திற்குக் காரணமானதோஷத்தின் வேகம் அடங்கியிருக்கிறதென்பதே பொருள். ஏனெனில் ஜ்வரதோஷம் நிவ்ருத்தியானால் மறுமுறை ஜ்வரம் கிளம்புவதற்குக் காரண மில்லாமற் போய்விடும். "விஷம ஜ்வரம் உள்ள வரையில் தோஷம் ஒருக்காலும் தேஹத்திலிருந்து முற்றிலும் விலகுவதில்லை. ……… ஜ்வரவேகம் தணிவடைந்ததும் ஜ்வரம் விட்டு விட்டதாகத் தோற்றும்; ஜ்வரதோஷம் தாதுக்களின் இடையில் ஸூக்ஷ்மமாக மறைந்திருப்பதால், அற்பமான தோஷ நிலைமையைக் கண்டறிய முடிவதில்லை" என்கிற ஸுச்ருதருடைய வசனம் இதற்குப் பிரமாணமாகும்.

5. தாஹ சீதாதி ஜ்வரங்கள்—இதை தாஹாதி ஜ்வரம் என்றும், சீதாதி ஜ்வரம் என்றும் பகுத்துக் கூறவேண்டும். உஷ்ணத்தை முதலிற் பெறுவது தாஹாதி ஜ்வரம் என்றும், சீதளத்தை முதலிற் பெறுவது சீதாதி ஜ்வரம் என்றும் கூறப்படும், இவற்றுள் தாஹாதிஜ்வரத்தில் பித்தம் அநுபந்தி தோஷம், அதில் வாத-கபங்கள் அநுபந்தங்கள். சீதாதி ஜ்வரத்தில் வாத-கபங்கள் அநுபந்திகள்; அதில் பித்தம் அநுபந்தம் [அநுபந்தி யென்பது பிரதானம்; அநுபந்தம் என்பது அதைத் தொடர்வது.] அநுபந்த தோஷத்தையும் கவனித்து அநுபந்திக்குச் சிகித்ஸை செய்ய வேண்டு மென்பது இதையறிவதின் பலன்.

6. விஷம ஜ்வரங்களில் ஸந்ததம் முதலியவை ஸததம் முதலிய ஜ்வரங்களாகவும், அங்ஙனமே சதுர்த்தகாதிகள் த்ருதீயகாதி ஜ்வரங்களாகவும் கால தேசா



தாதுக்களைப்பற்றிய ஜ்வரங்கள்:[1] —(1) சரீரம் பாரமாயிருத்தல், இருதயத்திலிருந்து ஏதோ தோஷம் வெளிவருவதுபோலக் குமட்டல், உடல் இளைத்தல், வாந்தி, அரோசகம் ஆக இக்குறிகளும் மனச்சோர்வும் இரஸ தாதுவைப்பற்றிய ஜ்வரத்தில்[2] தோன்றும். (2) இரத்தம் கக்குதல், அழற்சி, மூர்ச்சை, வாந்தி, தலைச்சுற்றல், வாய்ப்பிதற்றல், இரத்தக்கட்டிகள், நாவறட்சி ஆக இக்குறிகள் இரத்ததாதுவைப்பற்றிய ஜ்வரத்தில் காணும். (3) ஆட்டுச்சதை விரைத்து வலித்தல்,[3] நாவறட்சி, மல-ஜலங்கள் அதிகமாய் வெளிவருதல், தேஹத்தில் உள்ளும் புறமும் தாபம், கை-கால்களில் வலிப்பு, சிரமம் ஆக இக்குறிகள் மாம்ஸ தாதுவைப்பற்றிய ஜ்வரத்தில் ஸம்பவிக்கும். (4) மிதமிஞ்சிய வியர்வை, நாவறட்சி, மூர்ச்சை, வாய்ப்பிதற்றல், வாந்தி, துர்நாற்றம், அரோசகம், சோர்வு, ஸஹிக்க வியலாத ஜ்வரம் ஆக இக்குறிகள் மேதோதாதுவைப்பற்றிய ஜ்வரத்தில்[4] தோன்றும். (5) அஸ்திகள் உடைக்கப்படுவது போன்ற வேதனை, கூக்குரலிடல், பெருமூச்சு, பேதி, வாந்தி, அவயவங்கள் வலித்து இழுக்கப்படுதல் ஆக இவ்விகாரங்கள் அஸ்தியைப்பற்றிய ஜ்வரத்தில் உண்டாகும். (6) கண்கள் இருளடைதல், விக்கல், இருமல், சைத்தியம், வாந்தி, தேஹவுட்புறத்தில் அழற்சி, பெருமூச்சு, மர்மங்கள் அறுக்கப்படுவது போன்ற வலி இக்குறிகள் மஜ்ஜ தாதுவைப்பற்றிய ஜ்வரத்தில்[5] தோன்றும். (7) சுக்ரதாதுவைப்பற்றிய[6] ஜ்வரத்தில் ஆண்குறி மிகவும் விம்மிக் கொள்ளும்; சுக்ர தாது வெகு அதிகமாக வெளியாகும்; மரணமும் இதில் நேரிடும். 48—54, (இரஸம், இரத்தம், மாம்ஸம், மேதஸ் இந்த தாதுக்களைப் பற்றிய ஜ்வரங்கள் ஸாத்யமாகும்; அஸ்தியையும் மஜ்ஜையையும் பற்றிய ஜ்வரங்கள் கஷ்டஸாத்யம்; சுக்ரதாதுவைப்பற்றியது அஸாத்யமாம்.)

ப்ராக்ருத-வைக்ருத ஜ்வரங்கள்:[7]—வர்ஷருதுவிலும், சரத்ருதுவிலும், வஸந்த ருதுவிலும் முறையே வாதத்தினாலும், பித்தத்தினாலும், கபத்தினாலும் உண்டாகிற ஜ்வரம் ப்ராக்ருத ஜ்வரம் ஆகும்; இதர ஜ்வரம் எதுவும் வைக்ருத ஜ்வரம் எனப்படும். இவற்றுள் வைக்ருத ஜ்வரம் அனைத்தும், ப்ராக்ருத ஜ்வரத்தைச் சேர்ந்த வாதஜ்வரமும் கஷ்டஸாத்யமான வியாதிகள்.[8] 55.

நிலைமைகளுக்கேற்ப மாறக்கூடும். "ருது, இராப்பகல், தோஷம் மனது இவற்றின் பலா பலங்களுக்குத் தகுந்தவாறு ஒரு ஜ்வரம் மற்றொரு ஜ்வரமாக அவ்வப்பொழுது மாறுவதுண்டு" என்று கூறுகிறார் சரகர்.

1. முற்கூறிய வாதாதிஜ்வரங்கள் தாதுக்களைப் பற்றிக் கொள்ளும்போது முற்குறிப்பிட்ட அந்தந்த லக்ஷணங்களைத் தவிர வேறு சில அந்தந்த தாதுவுக்கேற்ற லக்ஷணங்களும் உண்டாகும்; அவ்விசேஷலக்ஷணங்களே இங்கு வரிசையாக ஏழு தாதுக்களின் ஸம்பந்தமாக விவரிக்கப்படுகின்றன. இரஸாதிதாதுக்களுக்குக் கெடுதியிழைக்கும் வாதாதி தோஷங்களுக்குச் சிகித்ஸை செய்யவேண்டுமென்பதே இவ்விவரணங்களுக்குப் பிரயோஜனம்.

2. ஜ்வரம் பொதுவாகவே இரஸதாதுவைத் தொடர்ந்து ஸம்பவிக்கின்றதாயினும், இங்கே விசேஷமாக அது இரஸதாதுவைப்பற்றி யிருப்பதாகக் கருதவேண்டும்.

3. ஆட்டுச்சதை—முழங்காலுக்குக் கீழே பின்புறமாகக் காலிலுள்ள பெரிய தசைநார்; இத்தசைநார்ச் சேர்க்கைக்கு பிண்டிகை யென்று பெயர்; இதிலுண்டாகும் வலிப்புக்கு பிண்டிகோத்வேஷ்டநம் எனப் பெயர்.

4. மேதோதாது—கொழுப்பு.

5. மஜ்ஜதாது—எலும்புக்குள்ளிருக்கும் ஒருவித கொழுப்பு ஸம்பந்தமான சோறு.

6. சுக்ரதாது—இரேதஸ் என்கிற பிந்து.

7. ப்ராக்ருத ஜ்வரம்—அவ்வப்பொழுது காலவேற்றுமைகளால் உற்பத்தியாகும் இயற்கை ஜ்வரம். வைக்ருத ஜ்வரம்—வர்ஷருதுவைத் தவிர்த்து மற்ற ருதுக்களிலுண்டாகும் வாத ஜ்வரமும், சரத்ருதுவைத் தவிர்த்து மற்ற ருதுக்களிலுண்டாகும் பித்த ஜ்வரமும், வஸந்தருதுவைத்தவிர்த்து மற்ற ருதுக்களிலுண்டாகும் கபஜ்வரமும், விஷம ஜ்வரம் முதலிய வேறு ஜ்வரங்களும் வைக்ருதங்களாகும்.

8. "வஸந்த ருதுவிலும் சரத்ருதுவிலும் காண்கிற ப்ராக்ருத ஜ்வரங்கள் ஸுகஸாத்யமானவை" என்கிற பிரமாணப்படி கபஜ்வரமும் (வஸந்த ருதுவில் உண்டாவது), பித்த ஜ்வரமும் (சரத்ருதுவில் உண்டாவது) ஸுகஸாத்யமானவை யாகையால் மற்றவை கஷ்டஸாத்யங்கள் எனப்படுகின்றன. [வர்ஷா காலத்திலுண்டாகும் வாத ஜ்வரம் ப்ராக்ருத ஜ்வர

ப்ராக்ருத ஜ்வரங்களின் உற்பத்தி க்ரமம்.— (1) வாததோஷமானது வர்ஷருதுவில் பிரகோபமடைந்து, பிறகு பித்த-கபங்களோடு சேர்ந்து ஜ்வரத்தை யுண்டுபண்ணும். (2) அங்ஙனமே பித்தமானது சரத்ருதுவில் பிரகோபித்து ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; அதற்கு கபம் பக்கபலமாகும். இவ்விரு தோஷங்களின் சுபாவத்தினாலும், அது விஸர்க்க காலமாகையாலும் அந்த ஜ்வரம் வருகிறபோது உணவுண்ணமலிருப்பதால் யாதொரு தீங்கும் நேரிடாது.[1] (3) வஸந்த ருதுவில் கபதோஷம் பிரகோபிக்க, அதையும் வாத-பித்தங்கள் தொடர்ந்து ஜ்வரத்தை யுண்டுபண்ணும்.[2] அந்தந்த தோஷம் பிரகோபிக்கக் கூடிய காலத்தில் அந்தந்த தோஷத்தினாலுண்டாகக் கூடிய ஜ்வரங்கள் யாவும் உற்பத்தியாவதோ விருத்தியாவதோ இயல்பு. நிதானமென்று கூறப்பட்டவைகளால் [3] வியாதிக்கு அநுபசயமும்,[4] நிதானத்திற்கு எதிரிடையானவைகளால் [5] உபயசமும்[6] உண்டாகும். 56—58.

அந்தர்வேக ஜ்வரம்:—சரீரத்தின் உட்புறத்திலேயே தாபம் அதிகம், நாவறட்சி, வாய்ப்பிதற்றல், பெருமூச்சு, தலைச்சுற்றல், ஸந்திகளிலும் அஸ்திகளிலும் கடுப்பு, வியர்வையின்மை, தோஷங்களும் மலமும் இறுகிப்போதல் ஆக இவை அந்தர் வேக ஜ்வரத்தின் குறிகள் என்றறிக [7]. 59, 59½.

மாயிருந்தும், ஆசார்ய வாக்படராலும் அங்ஙனமே கூறப்பட்டிருந்தும், அது கஷ்டஸாத்தியம் என்கிற ஏகாந்தரத்தினால் சரகாதிகள் அதையும் வைக்ருத ஜ்வரங்களிற் சேர்ந்ததாகவே மொழிகின்றனர். இதர ரோகங்களெல்லாம் ப்ராக்ருதங்களானால் கஷ்டஸாத்யங்களாகவும், வைக்ருதங்களானால் ஸுகஸாத்யங்களாகவும் இருக்க, ஜ்வரத்தில் மாத்திரம் அத்தன்மை நேர் எதிரிடையாயிருப்பது, ஜ்வரப் பிரபாவமெனக் கருத வேண்டும்.]

1. "கபமும் பித்தமும் திரவதாதுக்கள் (கார்யத்தில் திரவரூபமான தன்மையைக் காட்டும் தோஷங்கள்); ஆகவே நீண்டகால லங்கநத்தைத் தாங்குவதற்கேற்ற சக்தி அத்தோஷங்களால் உண்டாகும்" என்கிற பிரமாணத்தின் படியும் இங்ஙனம் கூறப்பட்டது என்றறிக.

2. "வஸந்தருது ஆதாந காலத்தின் மத்திய பாகமானதால், அதில் பிரகோபிக்கும் கபத்தை வாத-பித்தங்களும் தொடரும்" என்று சரகர் கூறும் பிரமாணத்தை அநுஸரித்து இவ்விஷயம் மொழியப்படுகிறது. இது ஆதாந மத்திய காலமாகையால் இதில் லங்கநம் செய்வது அவ்வளவு பிரசஸ்தமல்ல. முன்பு விஸர்க்ககாலத்தில் "லங்கநம் செய்வதால் தீங்கொன்றுமில்லை" எனக் கூறப்பட்டதிலிருந்தே ஆதாந காலத்தின் மத்தியபாகமாகிய வஸந்தருதுவில் ஜ்வரத்திற்கு லங்கநம் சிறிது தீங்கிழைக்கக் கூடியதென்றுரைக்கப்பட்டதாகவே யறியவேண்டும். [விஸர்க்க காலம்—வர்ஷருது, சரத்ருது, ஹேமந்தருது இக்காலங்கள். இவற்றில் மழையும் பனியும் பெய்ந்து உலகத்திற்கு வேண்டிய ஸத்துவம் விருத்திசெய்யப்படுவதால். இதற்கு இப்பெயரிடப்பட்டது. ஆதாநகாலம்—சரத்ருது, வஸந்தருது, க்ரீஷ்மருது. இவற்றில் வெய்யிலின் கடுமையினாலும் வாயுவின் சோஷண சக்தியினாலும் உலகத்தின் ஸத்துவம் ஆகர்ஷிக்கப்படுவதால் இதற்கு இப்பெயர் அளிக்கப்பட்டது.]

3. நிதாநம் என்றால் இங்கே காரணம் எனப் பொருள்; ஜ்வரத்திற்குக் காரணமான ஆமதோஷம் முதலியவற்றை உற்பத்தி செய்யக்கூடிய ஆஹாரங்களும் இங்கே நிதாநம் என்பதால் குறிப்பிடப்படுகின்றன.

4. அநுபசயம்—ரோகம் நிவாரணமாகாமை அல்லது வியாதி தணியாமை.

5. வியாதியை உற்பத்தி செய்யக் கூடியவாறு கோளாறடைந்துள்ள வாதாதிதோஷங்களுடையவும், இரஸாதி தாதுக்களுடையவும் சுபாவங்களுக்கு எதிரிடையான குணமுள்ள ஆஹாரங்களும் ஆசாரங்களும் எனக் கருத்து.

6. உபசயம்—ரோகநிவ்ருத்தி அல்லது வியாதியின் தணிவு.

7. சில ஜ்வரங்கள் தேஹத்தின் உட்புறத்தையே தபிக்கச் செய்யும்; அவ்விதமான ஜ்வரம் அந்தர் வேகம் அல்லது உட்காய்ச்சல் எனப்படும். வெளிதேஹத்திலேயே அழற்சியை யுண்டுபண்ணுவது பஹிர்வேக ஜ்வரம் அல்லது வெளிஜ்வரம் எனப்படுகிறது. ஸுச்ருதர் அந்தர்வேகஜ்வரத்தையே கம்பீரஜ்வரம் என்கிறார்.



பஹிர்வேக ஜ்வரம்:—சரீரத்தின் வெளியங்கங்களில் அதிக தாபமுண்டாகும்; நாவறட்சி முதலியவை[1] மிகக் குறைவாயிருக்கும்; இவை பஹிர்வேக ஜ்வரத்தின் குறிகளாம். இது ஸுக ஸாத்யமான ஜ்வரம். 60½.

ஆம ஜ்வரம்:—[2] உமிழ் நீர் அதிகமாயூறும்; இருதயம் இயற்கைக்கு விரோதமாய் அடித்துக்கொள்ளும்; இருதயம் ஏதோ அசுத்தமாயிருப்பது போன்ற உணர்ச்சியும் அரோசகமும் உண்டாகும்; சோம்பல், ஆலஸ்யம், உணவு ஜீர்ணமாகாமை, வாயில் அருவருப்பு, தேஹம் பாரமாதல், பசியின்மை, வெகு மூத்திரம், உடல் விரைப்பு, கடுமையான ஜ்வரம் ஆக இவைகளும் உண்டாகும்; ஆமஜ்வரத்திற்கு இவை குறிகளாம். இந்த நிலைமையில் ஔஷதம் கொடுக்கலாகாது; ஆமதோஷத்தில் ஔஷதம் கொடுப்பதானது ஜ்வரத்தை இன்னும் அதிகமாகக் கிளப்பிவிடும் [3]. 61—63.

பக்குவ நிலைமைக்கு வரும் ஜ்வரம்:[4] —ஜ்வரத்தின் வேகம் அதிகமாதல், நாவறட்சி, வாய்ப்பிதற்றல், பெருமூச்செறிதல், தலைச்சுற்றல், மலம் ஸாதாரணமாய் வெளிவருதல், வாந்திக்கு வருவது போல் உணர்ச்சியுடன் உமிழ்நீரூறுதல் ஆக இவை ஜ்வரம் பக்குவ நிலைமை அடைந்துவருவதற்கான குறிகளாகும். 64.

நிராம ஜ்வரம்[5] :—எட்டாவது நாள் வந்ததும் பசியால் வாடுதல், தேஹம் இலகுவாதல், ஜ்வரம் தணிவடைதல், தோஷங்கள் வெளிவருதல் ஆக இவை ஜ்வரத்தில் ஆமதோஷம் நீங்குவதன் குறிகளாம். 65.

ஜ்வரத்தின் ஸாத்யாஸாத்ய லக்ஷணங்கள்[6] :—(1) ஸாத்யம்.—பிணியாளி பலிஷ்டனாயிருந்

1. நாவறட்சி முதலியவை யென்பதால், அந்தர் வேகஜ்வரத்திற் கூறிய வாய்ப்பிதற்றல், பெருமூச்சு, தலைச்சுற்றல், ஸந்தி அஸ்திகளில் வேதனை என்கிற மற்றக்குறிகளும் கிரஹிக்கப்படுவதாய் அறிக.

2. ஆமஜ்வரம்—பக்குவநிலைமைக்கு வராத ஜ்வரம். ஜ்வரத்தில் ஆமதோஷம் நீங்கி பக்குவ நிலைமையுண்டாவதற்கு எட்டு நாட்கள் ஆகும் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. பசி முதலியவை யுண்டாய், உடம்பு இலகுவாகப் போகும் இலக்ஷணம் எப்போழுது உண்டாகிறதோ அதுவே ஆமதோஷம் நீங்கி ஜ்வரத்திற்குப் பக்குவ நிலைமை யுண்டாய்விட்டதென்றும், ஆகவே எட்டு நாட்கள் வரையில் ஆமதோஷம் நிலைத்திருக்குமென்று நிச்சயமாக விதியேற்படுத்துவது சரியல்லவென்றும் வேறு சில ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

3. இரஸ ஸம்பந்தமான ஆமதோஷம், தோஷ ஸம்பந்தமான ஆமதோஷம் என்று ஆமதோஷம் இரண்டு விதம். வாய் அருவருப்பாயிருத்தல் முதலிய சில இலக்ஷணங்களைக் கொண்டு இரஸ ஸம்பந்தமான ஆமத்தையும், தருணஜ்வரமாக ஏழு நாட்கள் வரையில் இருந்து வருவதைக் கொண்டு தோஷ ஸம்பந்தமான ஆமத்தையும் அறிக. ஆகவே தோஷ ஸம்பந்தமான ஆமதோஷம் எட்டாவது நாள்தான் தணிவடையும் எனக் கூறவேண்டும். "ஏழு தாதுக்களைப்பற்றிய தோஷங்கள் தணிவதற்கு வரிசையாக ஏழு நாட்கள் செல்லும்; ஆகையால் அதற்குப்பிறகு எட்டாவது தினத்தில்தான் பெரும்பாலும் ஜ்வரத்தின் ஆமதோஷம் நீங்கியதாகக் கூறப்படுகிறது" என்று ஹரிசந்திரன் என்பவர் அதற்குக் காரணம் சொல்லுகிறார். இரஸ ஸம்பந்தமான ஆமதோஷமோ எட்டாவது தினத்திற்குப் பிறகு கூட தொடரக்கூடும். இதற்குத் "தருண ரூபமான ஆமதோஷம் எட்டு நாட்களில் நிவ்ருத்தியாகும்; ரஸஸம்பந்தமான ஆமமோ அதற்குப் பிறகும் அநுவர்த்திக்கும்" என்கிற ஸுச்ருதடீகையின் வாக்கியம் பிரமாணமாகும். (தருணரூபமான என்றால் வாதாதி தோஷஸம்பந்தமான ஆமதோஷம் எனப் பொருள்.) தருணரூபமான ஆமதோஷத்தில் ஔஷதம் கொடுக்கக்கூடாது. ஆனால் இரஸ ஸம்பந்தமான ஆமத்தில் ஔஷதம் தகுந்தவாறு உபயோகிக்கலாமென்பதே இவ்விருவித ஆமதோஷங்களைப் பகுத்தறிவதன் பிரயோஜனமாம். ஆகிலும் ஆமதோஷம் எதுவாயிருப்பினும், பொதுவாக அந்த நிலைமையில் ஔஷதப் பிரயோகம் செய்வது உசிதமல்ல.

4. இது பச்சியமாந ஜ்வரம் என்று வழங்கப்படும்.

5. நிராம ஜ்வரம்—ஆமதோஷம் நீங்கிய ஜ்வரம். இது பக்வ ஜ்வரம் என்றும் மொழியப்படும். [பக்வ ஜ்வரத்தின் இலக்ஷணங்கள் கூறப்பட்டதிலிருந்து, ஜீர்ண ஜ்வர விஷயமும் இங்கு குறிக்கப்படுவது யுக்தமென்றறிகிறோம். "பதின் மூன்று நாட்களுக்கு மேற்பட்டது ஜீர்ண ஜ்வரம் ஆகும்" என்று ஜதூகர்ணன் என்பவர் குறிப்பிடுகிறார். ஆனால் "யாதொரு ஜ்வரம் இருபத்தோரு நாள் தொடர்ந்து அடித்து, அப்பால் சொற்பமாகக் குறைந்து போய், ப்லீஹம் என்கிற அவயவவீக்கத்தையும், ஜாடராக்னிக்குக் குறைவையும் உண்டு பண்ணுகிறதோ அது ஜீர்ண ஜ்வரம் எனப்படுகிறது" என்று வேறு சில ஆயுர்வேதக் கிரந்தங்களில் கூறப்படுகிறது.

6. ஜ்வரத்தினுடைய ஸாத்யலக்ஷணங்களும் அஸாத்ய லக்ஷணங்களும் எனப் பொருள். ஸாத்ய லக்ஷணங்கள்—சிகித்ஸையினால் எளிதில் நிவ்ருத்திக்கக்

தல்,[1] வியாதிக்குக் காரணமான தோஷங்கள் சொற்பமாயிருத்தல், உபத்திரவங்கள் உண்டாகாமலிருத்தல்[2] ஆக இந்நிலைமைகளில் ஜ்வரம் ஸாத்யமாகும். (2) அஸாத்யக் குறிகள்:- அநேக காரணங்களாலும் வலுவான காரணங்களாலும் உண்டாவது, பெரும்பான்மையான குறிகளோடு கூடியிருப்பது, பலவிதமாய் பிராணுவஸ்த்தை யுண்டுபண்ணுவது, எளிதில் புலன்களைப் பழுதாக்குவது, தேஹமிளைத்தவனுக்கும் வீங்கியவனுக்குமுண்டாவது ஆகிய இந்த ஜ்வரங்களும், கம்பீரஜ்வரமும், நீண்ட காலமாய் தொடரும் ஜ்வரமும், வெகு கடுமையாகத் தோன்றிய ஜ்வரமும், தலைமயிர்கள் உதிர்ந்து சிரஸ்ஸில் வடுக்களையுண்டாக்கும் ஜ்வரமும்[3] அஸாத்யமாகும். அதிக உட்காய்ச்சல், நாவறட்சி, அதிக மலபந்தம், கடுமையான ச்வாஸ-காஸங்கள் இக்குறிகளைக் கொண்டு அது கம்பீர ஜ்வரம்[4] என்பதாகத் தெரிந்துகொள்ளவும். மேலும் ஆரம்பம் முதற்கொண்டே எது விஷமஜ்வரமாயிருக்கின்றதோ எது நீடித்த காலமாகத் தொடருகிறதோ, இளைத்தும் அதிருக்ஷமாயுமிருப்பவனுக்கு யாதொன்று கம்பீர ஜ்வரமாயுண்டாகிறதோ அவ்விதமான ஜ்வரங்கள் ரோகியைக் கொன்றுவிடும். அல்லாமலும் யாதொரு ஜ்வரரோகி ஞாபகமிழந்து வருந்துகிறனோ, அல்லது படுத்தவிடத்திலிருந்து மீண்டும் எழுந்திருக்கமுடியாமல் வீழ்ந்திருக்கிறனோ, கடுங்குளிரால் தாக்கப்பட்டு கஷ்டப்படுகிறனோ, அதிக உட்காய்ச்சலுடையவனுயிருக்கிறனோ அவனும் ஜ்வரத்தினல் இறப்பான். அன்றியும் யாதொருவன் மயிர்ச்சிலிர்க்கையோடு கூடியவனுய், கண்கள் மிகச் சிவந்து, இருதயத்தில் இடிக்கப்படுவது போன்ற நோவையும் பெற்று, வாயாலேயே ச்வாஸம் விடுகிறனோ அம்மனிதனையும் ஜ்வரம் மாய்த்துவிடும். பின்னும் விக்கல், பெருமூச்சு, நாவறட்சி இக்குறிகளோடு கூடியிருத்தல், மதிமயக்கங்கொள்ளல், கண்களை விறண்டு விழித்தல், இடைவிடாது ஊர்த்வ ச்வாஸமுண்டாதல், மிக இளைத்துப் போதல் ஆக இந்த இலக்ஷணங்களும் பிணியாளி பிழைக்க மாட்டானென்பதை அறிவிப்பவைகளாம். மேலும் உடலின் இயற்கையொளி அழிதல், புலன்கள் பஞ்சடைந்து உணர்ச்சியற்றுப் போதல், தேஹம் க்ஷீணித்தல், கடுமையான அரோசகமுண்டாதல், கம்பீரமும் தீக்ஷ்ணமுமான உஷ்ணவேகத்தால் பீடிக்கப்படுதல் ஆகிய இக்குறிகளோடு கூடிய ஜ்வரரோகியையும் கைவிட வேண்டியதுதான். 66—73.

ஜ்வரம் விட்டுவருவதன் குறிகள்:—தேஹத்தில் வெட்பமதிகரித்தல், அடுத்தாற்போல வியர்த்தல், மயக்கம், நாவறட்சி, உடம்பு உதறல், மலம் சிறிது உடைந்து வெளிவருதல், ஞாபகக் குறைவு, கூவுதல்,[1] வாயில் ஒருவித துர்நாற்ற மேற்படுதல் இவை ஜ்வரம் விட்டு வருவதன் குறிகள்.[2] 74.

ஜ்வரம் நிவாரணமானதன் குறிகள்:—வியர்வை தாராளமாயுண்டாவது, தேஹம் இலகுவாவது, தலையில் தினவுண்டாவது, வாய் ஒருவாறு அழற்சியுறுவது, தும்மலுண்டாவது, உணவில் விருப்பமேற்படுவது ஆக இவை ஜ்வரத்திலிருந்து விடுபட்டுவனுக்கு ஏற்படும் இலக்ஷணங்களாகும். 75.

கூடிய வியாதிக்கான குறிகள். அஸாத்யலக்ஷணங்கள்—சிகித்சிக்கக்கூடாத வியாதிக்கான குறிகள்;

1. "பலாதிஷ்டாநமாரோக்யம்" (ஆரோக்கியம் தேஹவன்மையை முக்கிய ஆதாரமாகப் பெற்றது) என்கிற பிரமாணப்படி பலிஷ்டனுயிருப்பவன் ஆரோக்கிய சாலியாயிருப்பானுகையால் அவனிடம் எளிதிற் பிணியணுகாது.

2. உபத்திரவம்—I—வது பக்கம் வியாக்யானத்தைப் பார்க்க. "இருமல், மூர்ச்சை, அரோசகம், வாந்தி, நாவறட்சி, அதிஸாரம், மலபந்தம், விக்கல் ச்வாஸம், உடம்பெல்லாம் வேதனை ஆக இப்பத்தும் ஜ்வரத்தின் உபத்திரவங்கள்" எனப் படுகின்றன.

3. "எவனுக்குத் தலையில் வடுக்களைப்போல மயிர்களுதிர்ந்து வரி வரியாக வடுக்கள் உண்டாகின்றனவோ, புருவங்கள் உதிர்ந்து மிகவும் நெறிப்புள்ளவைகளாக ஆகின்றனவோ, இமைமயிர்களும் எளிதில் விழுந்து விடுகின்றனவோ அவன் சீக்கிரம் மரணமடைவான்" என்று வேறு கிரந்தங்களில் கூறப்படுகிறது.

4. கம்பீர ஜ்வரம் என்கிற இப் பெயர் ஸுச்ருதரால் வழங்கப்படுகிறது; இதையே சரகர் அந்தர்வேக ஜ்வரம் என்கிறார்.



## 3. அதிஸார நிதாநம்.*

அதிஸார நிதாநம்:—குரு,[3] அதிக[4] ஸ்நிக்தம், ருக்ஷம், உஷ்ணம், திரவம், ஸ்த்தூலம், சீதளம்[5] ஆக இத்தகைய குணங்களையுடைய உணவுகளாலும், விருத்தமாகவும்[6] அமிதமாகவும் அஜீர்ணம் பண்ணக்கூடியவையாகவும், விஷமமாகவுமுள்ள போஜனங்களாலும்,[7] அதியோகமாகவும்[8] மித்தியாயோகமாகவும்[9] உபயோகிக்கப்பெற்ற ஸ்நேஹாதி க்ரியைகளா

1. ஜ்வரம் விடுகிற ஸமயத்திற் கூவுவதற்குக் காரணம் வாக்படரால் கூறப்படுகிறது: "ஜ்வரம் விடுகிற ஸமயத்தில் தோஷமானது தாதுக்களைக் கிளறிக் கலக்கும்; ஆகையால் அப்பிணியாளி பெருமூச்செறிந்துகொண்டு, வியர்த்துக் கூவுவான்; அத்துடன் வாந்தி செய்து களைத்துப்போய் வருந்துவான். ஜ்வரத்திற்குக் காரணமான தோஷங்கள் ஜ்வரம் விடுகிற ஸமயத்தில் மிகக் குன்றி சக்தியற்றவையாகப் போகவேண்டியிருந்தும், அவை, எண்ணெயில்லாமல் அவிந்து போகுந் தருவாயில் தீபம் மிகப் பிரகாசமாயெரிவதுபோல் இவ்விதம் கடுமையான சிற்சில குறிகளைக் கடைசியிற் காட்டுவது இயல்பு.

2. "தேஹத்தில் வெப்பமதிகரித்தல் முதலிய குறிகள் தோஷங்களால் (ஸந்நிபாதத்தினுல்) உண்டாகும் ஜ்வரத்திலும், அந்தர்வேக ஜ்வரத்திலும், தாதுக்களைப்பற்றிய ஜ்வரத்திலுமே அவை விடுகிற ஸமயத்தில் தோன்றும். இவற்றைத் தவிர ஏனைய ஜ்வரங்களில் வியர்வைதான் விசேஷமாயுண்டாகும்" என்று பாலுகி முதலியவர்கள் கூறுகிறார்கள்.

* பித்த ஜ்வரத்தில் அதிஸாரம் உண்டாவது, ஜ்வரம் அதிஸாரம் இவ்விரண்டும் ஒன்றேடொன்றுஉபத்திரவமாக ஏற்படுவது ஆக இத்யாதி ஸம்பந்தங்களால் ஜ்வரத்திற்குப் பிறகு அதிஸாரம் கூறப்படுகிறது.

3. குரு—இது மாத்ராகுரு என்றும், ஸ்வபாவகுரு என்றும் பாககுரு என்றும், குணத்தில் குரு என்றும் நாலு வகைப்படும். (1) மாத்திரையில் (அளவில்) அதிகமாகப் பிரயோகிக்க வேண்டிய ஔஷதம் மாத்ரா குரு வாகும். (2) உருவத்தில் இயல்பாகவே பாரமாயிருப்பது ஸ்வபாவ குரு. (3) சுபாவத்தில் குருவாகவோ இலகுவாகவோ இருந்தபோதிலும் சொற்ப அளவிலுபயோகித்தும் எளிதில் ஜீர்ணமாகாதது குணத்தில் குரு. (4) சுபாவாதிகளில் இலகுவாகத் தோற்றிய போதிலும் உபயோகித்த பிறகு ஜீர்ணமாகுந் தருவாயில் குருத்தன்மையை (எளிதில் ஜீர்ணமாகாமையை) அடைவதுகுணத்தில் குருவாம்.

4. "அதிக" என்பது அடுத்து வரும் ஸ்நிக்தம் ருக்ஷம் முதலியவற்றிற்கும் சேர்ந்த விசேஷணம்.

5. ஸ்பர்ச சீதளம் என்றும், வீர்ய சீதளம் என்றும் சீதளம் இரண்டு விதம். [உஷ்ணமும் அங்ஙனமே ஸ்பர்சஉஷ்ணம், வீர்யோஷ்ணம் என்று இரண்டு வகையாம்.]

6. விருத்தம் என்பதால் ஒன்றேடொன்று அநேக பதார்த்தங்கள் சேருவதால், அப்பதார்த்தங்கள் விஷத்தன்மையடைவதென்ன, கால தேசாதிகளால் நல்ல பதார்த்தங்களும் தீங்கிழைக்கக்கூடிய குணங்களைப் பெறுவதென்ன இவை முதலியவை குறிக்கப்படுகின்றன. விருத்தம் என்பது ஸுச்ருதத்தில் ஹிதாஹிதீயாத்தியாயத்திலும், சரகத்தில் ஆத்ரேயபத்ரகாப்யீயாத்தியாயத்திலும் பல பேதங்களுள்ளதாக விவரிக்கப்படுகிறது.

7. அதிகபோஜநம் என்பது அத்யசநம் எனப்படும். 'முதலில் புஜித்த உணவு நன்கு ஜீர்ணமாகாமலிருக்கையிலேயே மீண்டும் புஜிப்பது அத்யசநமாகும்,' என்று சரகர். அஜீர்ண போஜநம் என்பது அபக்வாந்நம் என்றும் கூறப்படும். "அதிகமாகவும், சொற்பமாகவும், அகாலத்திலும் இங்ஙனம் தோன்றியவாறு புஜிக்கப்படும் உணவு விஷமபோஜநம் (விஷமாசநம்) எனப்படும்" என்று ஸுச்ருதர்.

8. அதி யோகம்—ஸ்நேஹஸ்வேத வமநாதி சிகித்ஸைகளை மிதமிஞ்சிப் பிரயோகித்தல். (காலம் பொருள் முதலியவற்றிற்கும் இங்ஙனமே அதியோகம் உண்டு.)

9. மித்தியா யோகம்—பலமான சிகித்ஸை செய்வதற்கு அற்பசிகித்ஸையைப் பிரயோகிப்பதும், சொற்ப சிகித்ஸை செய்வதற்கு வெகு பலமான சிகித்ஸை

லும்,[1] விஷங்களாலும், விசேஷ பயத்தினுலும், மனத்துயரத்தினுலும், கெட்டுப்போன ஜலம் மது இவற்றையும் அமிதமான மதுவையும் பானம் செய்வதாலும், அஸாத்மிய போஜனத்தினுலும்,[2] அந்தந்த ருதுவுக்கு ஏற்றவையல்லாத பதார்த்தாதிகளாலும், மிதமிஞ்சிய ஜலக்ரீடைகளாலும், வேகங்களை[3] அடக்குவதாலும், கிருமிகளாலாகிய தோஷங்களாலும்[4] மனிதருக்கு அதிஸாரம் உண்டாகின்றது. இதன் இலக்ஷணம் பின்னுல் கூறப்படும்.[5] 1—3.

அதிஸார ஸம்ப்ராப்தி:—(1) அப்தாதுக்கள் எனப்படும் நீர்மயமான தேஹ-தாதுக்கள்[6] மிகப் பிரகோபித்து ஜாடராக்னியை மிகவும் மந்தமாகச்செய்து, மலத்துடன் மிச்ரமாகப் போய், வாயுவினுல்[7] கீழ் நோக்கித் தள்ளப்பட்டு, மிகத் திரவமாக அதிகமாய் வெளிப்படுகின்றன; ஆகவே கொடியதான இவ்வியாதியையே "அதிஸாரம்" என்பார்கள்.[8] (2) வாத பித்த-கபங்களால் தனித்தனியே ஒவ்வோர் அதிஸாரமும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றும், சோகத்தினுல் ஒன்றும், ஆமதோஷத்தினுல்[9] ஒன்றும் ஆக ஆறுவித அதிஸாரங்கள் உண்டு. 4, 4½.

யைப் பிரயோகிப்பதும் இப்பெயரால் வழங்கப்படும். (காலத்திற்கும், சிகித்ஸாதிகளில் உபயோகிக்கப்படும் பதார்த்தங்களுக்கும் இவ்விதமே மித்தியாயோகம் உண்டு. மித்தியாயோகம் என்பதை ஹீநயோகம் என்று இவ்விடத்திற் கருதவேண்டுமென்று விஜயரக்ஷிதன் கூறுகிறுர்.)

1. ஸ்நேஹாதி க்ரியைகள்—ஸ்நேஹாதி என்பதால் ஸ்நேஹ சிகித்ஸை, ஸ்வேத சிகித்ஸை, விரேசந சிகித்ஸை, வஸ்தி சிகித்ஸை முதலிய சிகித்ஸாக்ரமங்கள் குறிக்கப்படுகின்றன.

2. அஸாத்மிய போஜநம்—ஸாத்மியம் என்றுல் ஹிதமானது எனப் பொருள். பிறவியிலேயே சரீரத்திற்கு அநுகூலமா யேற்பட்டுவிட்ட விஷயம் அல்லது வஸ்து பிரக்ருதி ஸாத்மியம் என்றும், பிற்காலத்தில் பழக்கத்தினுல் அநுகூலமாகச் செய்து கொள்ளப்பட்டது அப்யாஸ ஸாத்மியம் என்றும் வழங்கப்படும். ஆகவே பிரக்ருதியிலேயோ அப்யாஸத்திலேயோ சரீரத்திற்கு அநுகூலமல்லாத போஜநம் இங்கு "அஸாத்மிய போஜநம்" எனப்படுகிறது.

3. வேகங்கள்—மலமூத்திராதி விஸர்ஜநங்களின் பிரவ்ருத்தி; மல-மூத்திர-அபாநவாதாதிகளை வலிய அடக்குதல் வேகநிரோதம் எனப்படும்.

4. கிருமிகளாலாகிய தோஷங்கள் என்பதால் குடலிலுண்டாகும் பூச்சிகளாலும், இதர நுண்ணுயிர்களாலும் உற்பத்தியாகும் தோஷங்கள் குறிக்கப்படுகின்றன.

5. இங்கு கூறப்பட்டுள்ள நிதாநங்களில் சில வாத தோஷத்தையும், சில பித்ததோஷத்தையும், வேறு சில கபதோஷத்தையும் அதனதன் தன்மைகளுக்கேற்ப பிரகோபிக்கச் செய்து, வாத-பித்த-கபாதிஸாரங்களை முறையே உண்டு பண்ணும்.

6. இரஸம், மூத்திரம், ஸ்வேதம், மேதஸ், கபம், பித்தம், இரத்தம் முதலிய திரவரூபமான சாரீர பதார்த்தங்கள் அப்தாதுக்கள் என்பதால் குறிக்கப்படுகின்றன. மூத்திர-ஸ்வேதாதிகள் சில தோஷங்களாயிருந்தும், அவையும் இங்கு பொதுவாக தாதுக்களாகவே கருதப்படும் என்று விஜயரக்ஷிதனுல் வியாக்யாநம் செய்யப்படுகிறது.

7. வாயு என்பதால் இங்கே முக்கியமாக அபாந வாயு கிரஹிக்கப்படுகிறது.

8. அதிவ ஸரதி (மிகுதியாகத் திரவரூபமாய் மலம் வெளியாகிறது) என்கிற வியுத்பத்தியின்மேல் "அதிஸாரம்" என்கிற பெயர் வந்தது.

9. சரக ஸம்ஹிதை முதலியவற்றில் ஆமதோஷ ஸம்பந்தமான அதிஸாரத்திற்குப் பதிலாக பயஸம்பந்தமான அதிஸாரம் கூறப்படுகிறது. அஜீர்ணத்தினுல் ஏற்படும் ஸந்நிபாத தோஷஸம்பந்தமான அதிஸாரத்தில் ஆமாதிஸாரம் அடங்கிவிடுவதாகக் கருதி சரகர் அதைவிட்டு பயாதிஸாரம் என்பதைப் பிரத்தியேகமாய் ஆருவதாகக் கூறுகிறுர். எந்த அதிஸாரத்திலும் ஆரம்பத்தில் ஆமதோஷம அதிகரிப்பதும், அது நிவ்ருத்தியாகும் ஸமயத்தில் ஆமம் நீங்கி பக்வநிலைமையேற்படுவதும் இயல்பு; அங்ஙனமிருக்க ஆமதோஷத்தினுல் ஓர் அதிஸாரம் உண்டாவதாகக் கூறுவது எவ்வாறு? என்றுல் அதற்கு ஸமாதாநம் பின்வருமாறு: ஆமம் என்று அஜீர்ண நிலைமைக்குப் பெயர்; இந்த நிலைமையே எல்லா அதிஸாரங்களுக்கும் ஆரம்பத்திலேற்படுவது. குடலில் கெட்டுப்போன உணவிலிருந்து பிரத்தியேகமாயுண்டாகும் வேறொரு தோஷமும் ஆமம் எனப்படுகிறது; வாதாதி தோஷங்களுக்காவது, இரஸாதி இதர தாதுக்களுக்காவது, மலஜலாதி தோஷங்களுக்காவது, ஸம்பந்தப்படாமல் வாதாதிகளைப்போலவே தனித்துள்ள ஒரு தோஷம்; அவ்விதமான ஆமதோஷத்தினுல் பிரத்தியேகமாய் மற்றொரு அதிஸாரம் உண்டாகிறது. த்வந்த்வ தோஷங்களால் ஸம்பவிக்கும் அதிஸாரங்கள் பிரக்ருதி ஸம ஸமவாயாரப்தங்களாயிருக்குமாகையால் அவற்றை இங்கு பிரத்தியேகமாக விவரிக்க அவசியமில்லை. இனி இதர வியாதிகளில் கூட த்வந்த்வஜ இலக்ஷணங்கள் விக்ருதி விஷமஸமவாயாரப்தங்களாயிருப்பவைகளுக்கே பெரும்பாலும் பிரத்தியேகமாய் விவரிக்கப்படும்.



அதிஸார பூர்வரூபம்:-மார்பிலும் நாபியிலும், குதத்திலும், ஆமாசயத்திலும், வயிற்றிலும், மற்ற பாகத்திலும் குத்தல் வேதனையுண்டாகும்; தேஹம் வாடியிளைக்கும்; அபாநவாயு வெளிவராமல் அடைபட்டுப் போம்; மலச்சிக்கல் காணும்; வயிறு விம்மிக் கொள்ளும்; அப்பால், ஆஹாரம் ஜீர்ணமாவதில்லை; ஆக இவையெல்லாம் அதிஸாரம் உண்டாகப்போகிறதென்பதைக் குறிப்பிடும் பூர்வரூபங்களாம். 5.

வாதாதிஸாரம்:— வாததோஷக் கோளாறுல் உண்டாகும் அதிஸாரத்தில் வெளிவரும் மலமானது ஒருவாறு சிவந்த நிறமாகவும், நுரைத்ததாகவும், பசையற்று ரூக்ஷமாகவும் காணப்படும்; மேலும் அது சொற்பம் சொற்பமாகவும் அடிக்கடியும் அபக்குவமாகவே வெளியாகும்; மலம் வெளிவரும்போதெல்லாம் வயிற்றுநோவையும் சப்தத்தையும் உண்டுபண்ணும். 6.

பித்தாதிஸாரம்:— பித்த தோஷத்தினுல் உண்டாகும் அதிஸாரத்தில் மலம் மஞ்சள் நிறமாகவோ இலைப்பசுமை நிறமாகவோ ஒரு சிறிது சிவந்த நிறமாகவோ இருக்கும்; நாவறட்சி, மயக்கம், தேஹ அழற்சி, குடலில் வேக்காடு இவையும் காணும். 6½.

கபாதிஸாரம்:—மலமானது வெண்மையாகவும், திரள் திரளாகவும், சிலேஷ்மத்துடன் கூடியதாகவும், துர்நாற்றமதிகரித்ததாகவும், மிகக் குளிர்ந்ததாகவும் வெளிவருமானுல், அப்பிணியாளியும் மயிர்ச்சிலிர்த்து வருந்துவானுகில் அது சிலேஷ்மதோஷக்கோளாறுல் உண்டான அதிஸாரம் என்றறிக. 7.

ஸந்நிபாதாதிஸாரம்:—பன்றியின் கொழுப்பு அல்லது நெய் போன்றதும், மாம்ஸம் கழுவிய நீர் போன்றதும், முன் வாதாதிஸாரம் முதலிய மூன்றுக்கும் விவரித்துள்ள எல்லாக் குறிகளுடனும் கூடியதுமான மலப்போக்கை மூன்று தோஷங்களாலுமுண்டான அதிஸாரம் என்றறிக; இவ்வதிஸாரம் க்ருச்சிர ஸாத்யமானது. 8.

சோகாதிஸார ஸம்ப்ராப்தி:—பலவேறு முகாந்தரங்களால் மனத்துயரமுற்று, போதிய போஜனமுண்ணுமலிருக்கும் மனிதனுக்குச் சோகத்தினுலெழும் ஆவியும் உடற்சூடும் குடலிற் சென்று ஜாடராக்னியுடன்[1] சேர்ந்து அவனது இரத்தத்தைக் கலக்கிக் கோளாறடையச் செய்யும்; நிறத்திற் குன்றுமணி போன்ற அந்த இரத்தம் கீழ்நோக்கி வந்து சோகாதிஸாரமென்னும் இவ்வியாதியையுண்டு பண்ணும். 9.

சோகாதிஸாரம்: — அவ்விதம் கீழ்நோக்கி வரும் இரத்தமானது மலத்துடன் கூடியதாகவோ, மலமின்றி தனிப்பட இரத்தமாகவோ வெளியாகும்; அது துர்கந்தமுடையதாகவோ அல்லது துர்வாஸனையற்றதாகவோ இருக்கலாம். சோகத்தினுலுற்பத்தியாகும் இந்த அதிஸாரத்தைச் சிகித்ஸிப்பது வைத்தியர்களுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும்; ஆகவே இது அதிக க்ருச்சிரஸாத்யமான ரோகம் என்று கூறப்படுகிறது. 10.

124985

ஆமாதிஸாரம்:—அதன் ஸம்ப்ராப்தியும் இலக்ஷணமும்:—உணவு ஜீர்ணமாகாமையால் அதிலிருந்துண்டான தோஷங்கள் தேஹத்தில் பலவேறு பாகங்களில் ஊடுருவியோடி, குடலையும் ஸகல தாதுக்களையும், மலங்களையும் கலக்கி, பலவித நிறங்களுள்ளதாக மலத்தை அடிக்கடியும் திரவமாக வெளிப்படுத்தும்; இதில் வயிற்றுளைத்தலுமுண்டாகும். இதை ஆருவது அதிஸாரமாகக் கூறுவர். 11.

ஆமதோஷ லக்ஷணம்:- [2] முற்கூறிய தோஷங்களுடன்[3] கூடிய மலமானது ஜலத்தில்

1. பித்தத்துடன் சேர்ந்து என்று வேறொரு பாடம். வஹ்நி யென்கிற மூலபதத்துக்குப் பித்தம் என்று பொருளென்றும், ஜாடராக்னி யென்பதல்லவென்றும் கதாதரன் என்பவர் அபிப்பிராயப்படுகிறுர்.

2. அதிஸாரத்தில் ஆமதோஷத்திற்குள்ள விசேஷ ஸம்பந்தத்தை யுத்தேசித்து, ஆமதோஷலக்ஷணமும் இங்கேயே குறிக்கப்படுகிறது. ஆமதோஷலக்ஷணம் கூறப்படவே, அதற்கடுத்தாற்போல ஆமத்திற்கு எதிரிடையான (தேஹத்திற்கு அநுகூலமான) பக்வ லக்ஷணமும் மொழியப்படுகிறது.

3. முற்கூறிய தோஷங்கள் என்றுல் வாதாதிஸாரம் முதலியதற்குக் கூறிய தோஷங்கள் என்று விஜய

விடப்பட்டால் உடனே அமிழ்ந்து விடும்;[1] அதிக துர்கந்தமாகவும், அதிக பிசுபிசுப்புள்ளதாகவும் இருக்கும்; இவை மலம் ஆமதோஷமுடையதாயிருப்பதற்கான குறிகளாம். 12.

மலத்தின் பக்வ லக்ஷணம்:—எந்த மலத்திற்கு முற்கூறிய இக்குறிகளே நேர் எதிரிடையான நிலைமையிலிருக்கின்றனவோ,[2] மலம் அதிக இலகுவாகவும் காணப்படுகிறதோ அந்த மலம் பக்குவ நிலைமையடைந்திருப்பதாகக் கூறலாம். 13.

அதிஸாரத்தில் அஸாத்ய லக்ஷணம்:—மலமானது அளிந்த நாவற்பழம் போன்றிருத்தல், யக்ருத்தென்கிற கல்லீரலின் கண்டம் போன்றதாயிருத்தல், அதிக தெளிவாகத் தோற்றுதல், நெய் தைலம் - வஸையென்னும் நிணம் மஜ்ஜை-வேஸவாரம்-[3] பால்-தயிர் - மாம்ஸம் கழுவிய நீர் இவற்றைப்போல் காணப்படுதல், கறுப்பாகவோ கருஞ்சிவப்பாகவோ ரூக்ஷமான இளங்கறுப்பாகவோ[4] ஸ்நிக்த்தமாகப் பல நிறங்கொண்டதாகவோ சந்த்ரகமென்னும் பல நிறங்கொண்ட இரேகைகளோடு கூடியதாகவோ தோன்றல், பாரமாயிருத்தல், சவர்நாற்றங் கொள்ளுதல், மூளை போலிருத்தல், ஸுகந்தம் வீசுதல், அழுகிக் கிடத்தல், அளவில் வெகு அதிகமாய் வெளிவருதல்; இவை வியாதி அஸாத்தியமென்பதை விளக்கக் கூடிய மலஸம்பந்தமான குறிகளாம். நாவறட்சி, அழற்சி, கண் இருளடைதல், ச்வாஸமதிகரித்தல், விக்கல், பார்ச்வசூலை, எலும்புகளில் உளைத்தலுண்டாதல், மூர்ச்சை, அமைதியற்று வருந்தல், இந்த்ரியங்கள் உணர்ச்சியற்றுப்போதல், குதத்தினுள்ளிருக்கும் வலிகளென்கிற மடிப்பான பாகங்கள் அழன்று போதல், தன்னையறியாமலே வாயால் பிதற்றுதல் இக்குறிகளுடன் கூடிய அதிஸார ரோகியையும் வைத்தியன் கைவிடவேண்டியதுதான். மேலும் ஆஸநத்வாரம் மூடாமல் மலர்ந்த வண்ணமாகப் போதல், உடல் மிகவும் இளைத்தல், வயிறு மிகவும் பொருமலடைதல், அநேக உபத்திரவங்களுண்டாதல்,[5] குதம் வெந்துபோகக்கூடிய நிலைமையுண்டாதல், தேஹச்சூடு முற்றிலும் போய் சீதளம் மேலிடுதல் ஆகிய இந்த இலக்ஷணங்களுடன்கூடிய அதிஸாரரோகியையும் கைவிடவேண்டியதே. அன்றியும் பெருமூச்சு, வயிற்றுளைத்தல், நாவறட்சி இவற்றால் வருந்துபவனையும், மிகவும் இளைத்திருப்பவனையும், ஜ்வரத்தினால் பீடிக்கப்படுபவனையும், அதிக வயது சென்றவனையும்[6] அதிஸாரநோய் அழித்துவிடும். 14-19.

ரக்ஷிதனது வியாக்யானம். ஆனால் ஆமதோஷமானது ஆமாதிஸாரத்திலேயே விசேஷமாக ஸம்பந்தப்பட்டிருக்குமாகையால், "முற்கூறிய தோஷங்கள்" என்பதால் ஆமாதிஸாரத்திற்குக் கூறிய தோஷங்கள் என்று பொருள் கூறுவதுதான் நன்றாகப் பொருந்துமென்று வேறு சிலரது கொள்கை.

1. ஆமதோஷ ஸம்பந்தமுடைய வஸ்து இயற்கையில் அதிக குருகுணமுடையதாகையால், ஆமதோஷமுள்ள மலமும் நீரில் அமிழ்ந்துவிடுவதாகக் கூறப்படுகிறது.

2. ஆமதோஷாதிகளுடைய கலப்பற்றிருத்தல், ஆகவே இலகுவாயிருந்து நீரில் மிதத்தல், பிசுபிசுப்பில்லாமலிருத்தல் இவை எதிரிடையான சுபாவங்கள்.

3. வேஸவாரம் — எலும்புகளில்லாமலெடுக்கப்பட்ட இறைச்சியில் சுக்கு, கொத்தமல்லிவிதை, ஓமம், காயம், நெல் இவற்றைக் கூட்டி இடித்து எடுத்துக் கொள்ள அது வேஸவாரம் எனப்படும்.

4. பித்தாதிஸாரத்தில் மலம் ஸாதாரணமாகவே கறுப்பு அல்லது பசுமை நிறங்கொண்டதாயிருப்பது இயல்பாகையால், பித்தாதிஸாரத்தைத் தவிர மற்ற அதிஸாரங்களிலே இந்த நிறங்கள் அஸாத்தியக் குறிகளாகும் என்றறிக.

5. "வீக்கம், உளைத்தல், ஜ்வரம், அதிக நாவறட்சி, ச்வாஸம், காஸம், அரோசகம், வாந்தி, மூர்ச்சை, விக்கல் இவை அதிஸாரத்தின் உபத்திரவங்கள்."

6. பாலர்களுக்கு உண்டாகும் [illegible] அதிஸாரமும் அஸாத்யமாகும் என்று ஸுச்ருதர்.


அழகானது ! சுதேசியமானது !! உபயோகமானது !!!

அழகான 1921 கியாலண்டர்

ஜனவரி மீ 31 தேதிக்குள்ளாக எங்கள் டிபோ மருந்துகளை
6 ரூபாய்க்கு ஒரே தடவை வாங்குபவர்களுக்கு

ஒரு கியாலண்டர் இனாமாக அனுப்பப்படும்.

தனியாக கியாலண்டர் 1-க்கு வி. பி. யோடு 0-6-0

மொத்தமாய் வேண்டுமானால் விலை சரசமாய்க் கொடுக்கப்படும்.
வி. பி. இல்லாமல் முன்னதாக தபால்பில்லை அனுப்புவோருக்கு கியாலண்டர் சேராமல் போனால் அதற்கு நாங்கள் ஜவாப்தாரரல்ல.
சில பிரதிகள் மாத்திரமே அச்சிட்டிருக்கிறோம்.
வேண்டியவர் உடனே வரவழைத்துக்கொள்ளவும்.

| படைமருந்து | பற்பொடி | மோஹினி தைலம் |
|---|---|---|
| டப்பி 1-க்கு 0-6-0 | டப்பி 1-க்கு 0-2-0 | டப்பி 1-க்கு 0-1-2-0 |

அமிருதாஞ்சனம்

எல்லா நோய்களுக்கு சித்தௌஷதம்.

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத்தலைநோய், வீக்கம் சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்வியாமிருதம்.

டப்பி 1-க்கு 0—8—0, டஜன் 1-க்கு 5—6—0, வி. பி. வேறு.

அமிருதாஞ்சனம் டிபோ.

9 தம்பு செட்டி தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்,
109, ப்ரேரிரோட், பொம்பாய்.

THE QUEEN OF HAIR OILS

# KAMINIA OIL (Registered.)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

# காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்.)




இந்த காமினியா எண்ணெய் அதிக விலையுயர்ந்த சாமான்களடங்கியது. இது, மயிர் உதிர்வதையும் மண்டைக் குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கி, புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணாக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை நிறுத்தி, தலையின் அடிபாகத்தை சுத்தி செய்யும். இதுவும் தவிற அதிக வாசனையுமுடையது.

நற்சாக்ஷி பத்திரம்.

மூவத்து புழையிலிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறர் :—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப்பற்றி உங்களுக்கு வந்தனம் செய்ய, போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிகக் குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிற கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்" தயவுசெய்து ஒருபுட்டி காமினியா ஆயில் வி. பி. யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட்காக்ஷியில் தங்கமெடலும் அலஹாபாத் பொருட்காக்ஷியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு புட்டியின் | விலை ரூ. 1— 0—0. | வி. பி. தபால் சிலவு ரூ. | 0—6—0 வேறு. |
| மூன்று புட்டிகளின் | விலை ரூ. 2—10—0. | ,, | 0–14—0 ,, |

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனல் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும் பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும் வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்த காமினியா ஆயிலுக்குப் பதிலாய் கொடுக்க முயற்சி செய்வார்கள். காமினியா ஆயிலை தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினல் அவர்கள் முயற்சிக்கு ஏமாறுமல் எப்பொழுதும் இந்தக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :—ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸீத் மார்க்கட், பம்பாய்.

மதராஸ் ஏஜண்டு :—மேதா புருஷோத்தம் மூல்ஜி,

29, சைனபஜார் ரோட், மதராஸ்.



MADRAS : Printed by Thompson & Co., at the "Minerva" Press.

Published by Pandit M. DURAISWAMI AIYANGAR, The "Vaidya Kalanidhi" Office, Vepery, Madras.